

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | பிப்ரவரி 06, 2014 | புரட்சி 13 | முழக்கம் 04 | விலை: ரூ.3.00


## வினாக்கள்... விடைகள்...!

+ பெண்கள், இளைஞர்கள் முன்னேறாவிட்டால், இந்தியா வல்லரசாக முடியாது.– **ராகுல் காந்தி**

என்னவோ, சுதந்திரத்துக்குப் பிறகு இப்பத்தான் முதன்முதலாக காங்கிரஸ் தேர்தலில் போட்டியிடுவதுபோல் பேசுறீங்க...

+ திருப்பதியில் – சொர்க்க வாசல் தரிசனத்துக்கு முக்கிய பிரமுகர்களுக்கான டிக்கட்டுகளை கோயில் நிர்வாகம் முறைகேடாக விற்றுள்ளது. – **ஆந்திராவில் வழக்கு**

அப்படித்தாங்க விற்க முடியும்! முறையாக டிக்கட் தருவது என்றால், நேராக ‘சொர்க்கத்துக்கு’த்தான் போக வேண்டியிருக்கும்; புரிஞ்சுக்காம வழக்குப் போடாதீங்க!

+ காங்கிரஸ் ஆட்சியின் சாதனைகளை ‘கடவுளே’ பட்டியலிடுவார். – **ப. சிதம்பரம்**

இப்படிச் சொன்னால் எப்படி? கண்களுக்குத் தெரியாத சாதனைகளை கண்களுக்கே புலப்படாத கடவுள் பட்டியலிடுவார் என்று புரியும்படி சொல்லுங்க, சார்!

+ புதுச்சேரி வரதராஜப் பெருமாள் கோயிலிலிருந்து அபிஷேகப்பாக்கம் சிங்கிரி கோயில் வரை 18 ஆவது ஆண்டாக பக்தர்கள் ‘உலக நன்மைக்காக’ பாதயாத்திரை. – **செய்தி**

‘பாத யாத்திரை’ – உலக நன்மைக்கா? உடல் நன்மைக்கா? பக்தி என்று வந்து விட்டாலே உண்மையைப் பேசவே கூடாது என்று சத்தியம் செய்திருக்கீங்களாய்யா...

+ அமைதியாக இருந்த ஆந்திராவில் மாநில பிரிவினையை அறிவித்ததன் மூலம், தற்போது அந்த மாநிலத்தை கலவர மாநிலமாக மாற்றியுள்ளது காங்கிரஸ். – **மோடி ஆவேசம்**

ஆந்திரா பிரிவினையை பா.ஜ.க.வும் தீவிரமாக ஆதரிக்கிறது என்ற அரசியல் செய்திகளையெல்லாம் இந்த பிரதமர் வேட்பாளருக்கு எவராவது எடுத்துக் கூறக் கூடாதா?

+ முத்துராமலிங்க தேவர் சிலைக்கு ஜெயலலிதா தங்கக் கவசம் அளிக்கிறார்! – **செய்தி**

இந்த சிலைக்கு வாக்கு இல்லை; ஆனால் வாக்கு வங்கி உண்டு!

+ மக்களவைத் தேர்தல் குருஷேத்திரப் போர்! – **இராணுவ அமைச்சர் ஏ.கே.அந்தோணி**

அப்படியா? இந்தப் போருக்கு எந்த நாட்டுல இருந்து ஹெலிகாப்டர் இறக்குமதி செய்யப் போறீங்க?

+ கூட்டணி தேவை இல்லை என கட்சித் தொண்டர்கள் கூறுகிறார்கள். – **விஜயகாந்த்**

அப்படியா? ‘கடவுளோடு’கூட கூட்டணி வேண்டாம் என்று முடிவு செய்து விட்டார்களா? பரவாயில்லையே!

+ மக்களோடு கூட்டணி அமைப்போம்.– **ஸ்டாலின் பேச்சு**

மகிழ்ச்சி; மக்களுக்கு 5 தொகுதிகளாவது ஒதுக்குவீர்களா?

### பிப். 16இல் தொடங்கி, பிப்.25 வரை

# சுயமரியாதை சமதர்மப் பரப்புரை 2ஆம் கட்டப் பயணம்

## ஜாதிமறுப்புதிருமணங்களைதடுக்காதே!

திராவிடர் விடுதலைக் கழகம் நடத்தி வரும் ‘சுயமரியாதை சமதர்ம’ப் பரப்புரையின் இரண்டாவது கட்ட பரப்புரைப் பயணம் பிப். 16 ஆம் தேதி சிவகங்கையில் தொடங்கி, 25 ஆம் தேதி மேட்டூரில் நிறைவடைகிறது. பயணத்தில் தமிழர் சுயமரியாதைக்கு எதிரான ஜாதியமைப்பைத் தகர்த்திட ஜாதி மறுப்புத் திருமணங்களை வலியுறுத்தி பரப்புரை நிகழும். ஒரே ஜாதிக்குள் நடக்கும் திருமணங்களால் ஏற்படும் உடல் ரீதியிலான உளவியல் ரீதியிலான பாதிப்புகளை அறிவியல் பார்வையில் விளக்கப்படும். ஜாதியற்றோருக்கு தனி இடஒதுக்கீடு வலியுறுத்தப்படும். பயணத் திட்டங்களை விளக்கி பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன் விடுத்துள்ள அறிக்கை:

16.2.2014 ஞாயிறு - பகல் 1 - சிவங்கை, மாலை 4 - காளையார் கோவில், இரவு 7 - காரைக்குடி.

17.2.2014 திங்கள் - காலை 10 - நத்தம், மாலை 4 - அஞ்சுகுழிப்பட்டி, மாலை 5.30 - கோபால்பட்டி, இரவு 7 - சாணார்பட்டி.

18.2.2014 செவ்வாய் - பகல் 1 - திண்டுக்கல் பெரியகடைவீதி, மாலை 5 - இராமநாதபுரம், இரவு 7 - பாளையங்கோட்டை.

19.2.2014 புதன் - பகல் 1 - போடி, மாலை 5 - தேனி பி.சி.பட்டி, மாலை 7 - தேனி அல்லி நகரம்.

20.2.2014 வியாழன் - பகல் 1 - திண்டுக்கல் நாகல்நகர், மாலை 4 - பாடியூர், இரவு 7 - வலையபட்டி.

21.2.2014 வெள்ளி - பகல் 1 - கடவூர், மாலை 4 - பாளையம், இரவு 7 - கரூர்.

22.2.2014 சனி - காலை 10 - கொடுமுடி, பகல் 1 - காங்கேயம், மாலை 5 - பல்லடம்.

23.2.2014 ஞாயிறு - காலை 10 - சூலூர், பகல் 1 - பெரியநாயக்கன்பாளையம், மாலை 4 - கோவை காந்திபுரம்.

24.2.2014 திங்கள் - பகல் 1 - கோவை கணபதி, மாலை 5 - அன்னூர்.

25.2.2014 செவ்வாய் - காலை 10 - புளியம்பட்டி, பகல் 1 - சத்தியமங்கலம், இரவு 7 - மேட்டூர்.



## கழகத் தலைவர்–தோழர்கள் மீதான வழக்கு: பிப்.12இல் இறுதி விசாரணை

சிறைப்படுத்தப்பட்டுள்ள கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கழகத் தோழர்கள் அம்பிகாபதி, அருண்குமார், கிருட்டிணன் ஆகியோர் மீதான தேசியப் பாதுகாப்புச் சட்டத்தை நீக்கம் செய்யக் கோரும் வழக்கு உயர்நீதிமன்றத்தில் (4.2.2014) அன்று நீதிபதிகள் எஸ்.இராஜேசுவரன், பி.என்.பிரகாசு அடங்கிய அமர்வுக்கு முன் விசாரணைக்கு வந்தது. கழகத் தலைவர் மற்றும் தோழர்கள் சார்பில் மூத்த வழக்கறிஞர் வைகை நேர் நின்றார். அரசு வழக்கறிஞர் வராததால் வழக்கை பிப்.28 ஆம் தேதிக்கு தள்ளி வைக்க வேண்டும் என்று கூடுதல் அரசு வழக்கறிஞர் கேட்டார். இதற்கு மூத்த வழக்கறிஞர் வைகை கடும் எதிர்ப்பு தெரிவித்தார். அரசு வழக்கறிஞர் வரவில்லை என்று கூறி அரசு வழக்கைத் தள்ளிப் போட விரும்புவதற்கு நீதிமன்றம் துணை போகக் கூடாது. இது தனி மனித சுதந்திரத்தைப் பாதிக்கக் கூடியதாகும். 90 நாட்களாக ஒரு இயக்கத்தின் தலைவர் எந்த அடிப்படையும் இல்லாத ஒரு வழக்கில் சிறைபடுத்தப்பட்டுள்ளார். அவர், இன்றைக்கே விடுதலையாக வேண்டும் என்பதே எங்கள் நிலை. வருமான வரித் துறை அலுவலகம் தாக்கப்பட்டது என்பது மட்டுமே இந்த வழக்கு. அதில் உடைமை பாதிப்புக்கூட ஏதும் கிடையாது. தள்ளிப் போடுவதை அனுமதிக்கக் கூடாது என்று வாதிட்டார் வைகை.

நீதிபதிகள் வாதத்தை ஏற்றுக் கொண்டனர். 28 ஆம் தேதி வரை தள்ளி வைக்க முடியாது என்று கூறிய நீதிபதிகள் பிப்.12 ஆம் தேதி வழக்கு இறுதி விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்படும். அன்று அரசு சார்பில் பதில் மனு தாக்கல் செய்யப்படாவிட்டாலும் வழக்கு முடிவுக்குக் கொண்டு வரப்படும் என்று நீதிபதிகள் தெரிவித்தனர். கழக வழக்கறிஞர்கள் திருமூர்த்தி, துரை. அருண், வழக்கிற்கான ஏற்பாடுகளை செய்து வருகிறார்கள். கழகத் தோழர்கள் நீதிமன்றம் வந்திருந்தனர்.

## பா.ஜ.க.வால் பழிவாங்கப்படும் ஊடகவியலாளர்கள்



வீரபாண்டியன் | ஹர்தாஸ் சிங் | சித்தார்த் வரதராஜன் | இந்திரஜித் குப்தா | ரகீல் குர்சித்

ஊடகங்கள் பா.ஜ.க.வின் ஊதுகுழல்களாக மாற்றப்பட்டு வருகின்றன. பா.ஜ.க. – மதவெறிக் கொள்கைகளை தனிப்பட்ட முறையில் ஏற்க விரும்பாத ஊடகவியலாளர்களை பதவியிலிருந்து நீக்க பா.ஜ.க.வினர் மிரட்டி வருகிறார்கள்.

- 17 ஆண்டுகளாக சன் தொலைக்காட்சியில் நேருக்கு நேர் நிகழ்ச்சி நடத்தும் வீரபாண்டியன் தனிப்பட்ட முறையில் நிகழ்ச்சி ஒன்றில் இஸ்லாமியர்கள் உரிமைகள் - மதவெறி சக்திகளின் ஆபத்து பற்றி கருத்து தெரிவித்தார். அதன் காரணமாக அவர் நடத்தும் நிகழ்ச்சியில் பங்கேற்க மாட்டோம் என்று. தமிழ்நாடு பா.ஜ.க. ‘சன்’ தொலைக்காட்சி நிறுவனத்துக்கு கடிதம் எழுதியது; சன் தொலைக்

(4 ஆம் பக்கம்)

**தலையங்கம்**

## முதலமைச்சரின் கண்துடைப்பு அறிவிப்பு

ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற தேசிய ஆசிரியர் கல்விக் குழுமம் நிர்ணயித்த 60 சதவீத மதிப்பெண் நிர்ணயத்தை குறைக்க வேண்டும் என்ற கோரிக்கையை பல மாதங்களாக சமூக நீதி அமைப்புகள், இயக்கங்கள் வலியுறுத்தி வந்தபோதும், அதை மதிக்காமல் 'கேளாக் காதுடன்' இருந்த முதலமைச்சர் ஜெயலலிதா, இப்போது 5 சதவீத மதிப்பெண் தளர்த்தப்படும் என்று சட்டப் பேரவையில் அறிவித்திருக்கிறார். ஒவ்வொரு மாநில அரசும் தகுதித் தேர்வு மதிப்பெண் நிர்ணயிப்பை தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினருக்கு குறைத்துக் கொள்ளலாம் என்று தேசிய ஆசிரியர் கல்விக் குழுமம் கூறியிருந்தாலும்கூட, முதலமைச்சர் அந்த உண்மையை மறைக்கவே துடித்தார்; பழியை தேசிய ஆசிரியர் கல்விக் குழுமத்தின் மீது தூக்கிப் போட்டார். அந்த அமைப்பு நிர்ணயித்த மதிப்பெண்ணைத்தான் தமிழக அரசு பின்பற்றுகிறது என்றார்.

ஆசிரியர் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு 69 சதவீத இடஒதுக்கீட்டை தமது ஆட்சி பின்பற்றி வருவதாக – ஏதோ, தமிழ்நாட்டு மக்கள் விவரம் தெரியாதவர்களாகக் கருதிக் கொண்டு அறிக்கைகளை விடுத்தார். தேர்வு கட்டத்திலேயே தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட சிறுபான்மையினரை வடிகட்டிவிட்டு, அதற்குப் பிறகு, இடஒதுக்கீட்டை வழங்குகிறோம் என்பது அப்பட்டமான மோசடி வாதமாகும்.

தகுதி மதிப்பெண்ணை குறைக்கவே முடியாது என்று கூறிய இதே முதல்வர்தான், இப்போது வேறு குரலில் பேசியுள்ளார். "இந்த அவையில் தெரிவிக்கப்பட்ட கருத்துகளின் அடிப்படையில் ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற 60 சதவீத மதிப்பெண் பெற வேண்டும் என நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும், இனி தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லிம்), மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு 5 சதவீத மதிப்பெண் சலுகை வழங்கப் படும்" என்று திருவாய் மலர்ந்துள்ளார்.

ஏதோ, சமூக நீதி உரிமைகள் இவரின் கருணையால் வழங்கப்படுவது போல் அவர் பேசுவது கண்டனத்துக்கு உரியதாகும். அதுவும் தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப் பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என அனைத்துப் பிரிவினருக்கும் ஒரே அளவில் 5 சதவீதக் குறைப்பை அறிவித்திருப்பது – சமூக அநீதியாகும். ஒட்டகத்தின் முதுகில் சுமைகளை அதிகம் ஏற்றும்போது ஒட்டகத்தை ஏமாற்ற சுமையிலிந்து ஒரு துரும்பை எடுத்து கீழே போடுவதுபோல் இருக்கிறது, முதலமைச்சரின் இந்த அறிவிப்பு.

எதிர்கொள்ள வேண்டிய நாடாளுமன்றத் தேர்தலில் தமிழக அரசின் இந்த சமூக அநீதி கடும் பாதிப்புகளை உருவாக்கிவிடும் என்று முதல்வர் கருதி, இந்த அறிவிப்பை வெளியிட்டிருக்கக்கூடும். உண்மையில் இந்த 'அரைக் கிணறு தாண்டும்'. அறிவிப்புதான், மேலும் பாதிப்புகளை உருவாக்கும் என்பதை முதலமைச்சர் புரிந்து கொள்ள வேண்டும்.

பல்வேறு மாநிலங்களில் இந்த மதிப்பெண் நிர்ணயம் தளர்த்தப்பட்டுள்ளதை முதலமைச்சர் அறியாமல் இருக்க முடியாது. ஆந்திர மாநில அரசு பிற்படுத்தப்பட்டோருக்கு 50 சதவீதமாகவும், தாழ்த்தப்பட்டோருக்கு 40 சதவீத மாகவும் குறைத்துள்ளது. ஒரிசாவில் 50 சதவீதமாகவும், பீகார், அசாம் மாநில அரசுகள் 55 சதவீதமாகவும் குறைத்துள்ளன. சமூக நீதிக்கு ஏனைய மாநிலங்களுக்கு வழிகாட்ட வேண்டிய தமிழ்நாடு, எதிர்மறையாக செயல்படலாமா என்பதே நமது கேள்வி!

எனவே, முதலமைச்சர் ஜெயலலிதா, இடஒதுக்கீடுப் பிரிவினருக்கு அவர்களுக்கான ஒதுக்கீடுகள் முழுமையாக நிரப்பப்பட வேண்டும் என்ற சமூகநீதிக் கண்ணோட்டத் தோடு மதிப்பெண் வரம்பை தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப் பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்குத் தனித் தனியாக தளர்த்த வேண்டும் என்று வற்புறுத்துகிறோம்.

'சூப்பர் ஸ்பெஷாலிட்டி' மருத்துவமனைக்கான மருத்துவர் தேர்வில் இடஒதுக்கீட்டைப் புறந்தள்ளி அரசு வெளியிட்ட அறிவிப்பைக் கண்டித்து, திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய ஆர்ப்பாட்டங்களில் அரசு மருத்துவமனையிலிருந்தே திறமையான மருத்துவர்களை தேர்வு செய்யலாம் என்ற கருத்தை முன்வைத்தோம். அந்தக் கோரிக்கையை இப்போது தமிழக முதல்வர் ஏற்றுக் கொண்டுள்ளார். அரசின் முடிவை வரவேற்கிறோம்.

இந்த மருத்துவமனையை அரசின் மருத்துவத் துறையின் கீழ் இயங்கும் மருத்துவமனையாக நடத்துவதன் மூலம் இட ஒதுக்கீட்டை உறுதி செய்வதோடு, பணி வாய்ப்புகளும் நிரந்தரமாக உறுதிப்படுத்தப்படும் என்று வலியுறுத்து கிறோம்.

# ஈழத்தில் நடந்தது இனப்படுகொலையே! ஜெர்மனி மக்கள் தீர்ப்பாயம் அறிவிப்பு

2013 டிசம்பர் 7, 8, 9, 10 தேதிகளில் ஜெர்மனியின் ப்ரமன் நகரில் மக்கள் தீர்ப்பாயத்தின் இரண்டாவது அமர்வு விசாரணை நடைபெற்றது.

சிங்கள அரசு புலிகளுக்கு எதிரான யுத்தம் என்று கூறிக் கொண்டு, இலட்சக்கணக்கான தமிழர்களை குழந்தைகள், பெண்கள், ஆயுதம் ஏந்தாத பொது மக்கள் என அனைவரையும் படுகொலை செய்ததால், கொடுந்துயரத்துக்கு ஆளான ஈழத் தமிழர்கள் நேரடி சாட்சியங்களை பிரமாண வாக்குமூலங்கள் மூலம் மக்கள் தீர்ப்பாயத்தில் பதிவு செய்தனர். இனக் கொலை குறித்து தொடர்ந்து ஆய்வு செய்து வரும் மனித உரிமை ஆர்வலர்கள், அனைத்துலக சட்ட வல்லுநர்கள், களப் பணியாளர்கள், ஈழத் தமிழர் ஆதரவு இயக்கங்கள் ஆகியோரின் கருத்து களையும் தீர்ப்பாயம் பதிவு செய்து விசாரணை நடத்தப்பட்டது.

தமிழகத்திலிருந்து மே-17 இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர்களான திருமுருகன் காந்தியும், உமரும் இது குறித்த அறிக்கையை தீர்ப்பாயத்திடம் தந்தனர். மூன்று நாட்கள் நடைபெற்ற விசாரணைக்குப் பின், நான்காம் நாளான டிசம்பர் 10 ஆம் தேதி அன்று மக்கள் தீர்ப்பாயம் தனது தீர்ப்பை வெளியிட்டது.

1. ஈழத் தமிழர்களை தனித்தனியாக கொலை செய்யாமல், தமிழர் இனம் என்ற அடிப் படையில் அந்த சமூகத்தின் அடையாளமே இல்லாமல் அழிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இலங்கை அரசு படுகொலையை நடத்தியுள்ளது.
2. புலிகளோடு சிங்கள அரசு நடத்திய யுத்தத்துக்கு முன்பாகவே, நீண்ட காலமாக தமிழ் இனப் படுகொலையை இலங்கை அரசு நடத்தி வந்துள்ளது. யுத்தத்துக்குப் பின்னரும் தமிழ் இன அழிப்பை இலங்கை அரசு தொடர்ந்து செய்து வருகிறது.
3. உலக நாடுகளின் உதவி இல்லாமல், இந்த இனப்படுகொலை யுத்தத்தை இலங்கை அரசு செய்திருக்க முடியாது. இலங்கை அரசுக்கு, இங்கிலாந்து அரசு ஆயுத உதவி செய்ததோடு, இனக்கொலை நடத்திய சிங்கள அரசுக்கு ஆதரவாகவும் செயல்பட்டு வந்துள்ளது.

தீர்ப்பாயத்தின் நீதிபதிகள் மேலும் குறிப் பிடுகையில், இலங்கை அரசு இனக்கொலை நடத்துவதற்கான இராணுவ பலத்தைக் கொடுக்கும் விதத்தில், அமெரிக்க அரசு இராணுவ உதவி செய்திருக்கிறது. அமைதிக் கான பேச்சு வார்த்தை நடவடிக்கைகளின் போது அமெரிக்க அரசு இலங்கை அரசுக்கு சாதகமாக நடந்து கொண்டதால், 2009 இல் தமிழர்களின் பேரழிவுக்கு அது வழி வகுத்தது.

இந்தத் தமிழ் இனப்படுகொலையில் இந்திய அரசின் பங்கு குறித்து வலுவான சாட்சியங் களையும் ஆவண ஆதாரங்களையும் ஆய்வு செய்த பின், அதனைக் குறித்து முடிவை தீர்ப்பாயம் தெரிவிக்கும்.

ஜெர்மனி மக்கள் தீர்ப்பாயம் ஈழத் தமிழர் இனப் படுகொலை உண்மையை உலகத்துக்கு அறிவித்து விட்டது.

இந்தத் தீர்ப்பை நீதிபதிகளின் ஒருவரான டென்னிஸ் ஹாலிடே என்பவர் ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் துணைப் பொதுச் செயலாளர் என்பது முக்கியத்துவம் பெறுகிறது.

"ஐக்கிய நாடுகள் சபை ஈழத் தமிழர் படுகொலையை தடுக்கத் தவறியதோடு, அப்படுகொலைக்கு உடந்தையாக செயல்பட்டு தன் கடமையில் தவறியது என்றும், சர்வதேச சமுதாயமும் உரிய நடவடிக்கைகளை எடுக்கத் தவறியது" என்றும் டென்னிஸ் ஹாலிடே குற்றம் சாட்டினார்.

ஜெர்மனி தீர்ப்பாய விசாரணையில், தீர்ப்பாயம் "ஈழத் தமிழர்கள்" என்றே இலங்கைத் தீவின் தமிழர்களை குறிப்பிட்டது குறிப்பிடத்தக்கது.

ஜெர்மன் தீர்ப்பாயத்தின் தீர்ப்பு அறிவிக்கப்பட்ட நாள், ஐ.நா. சபை கடைபிடிக்கின்ற உலக மனித உரிமை நாளான டிசம்பர் 10 ஆம் நாள் ஆகும்.

# இடஒதுக்கீட்டை வலியுறுத்தி திருப்பூரில் ஆர்ப்பாட்டம்

27.1.2012 அன்று மாலை 4.30 மணியளவில் திருப்பூர் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக, சென்னை பல்நோக்கு சிறப்பு மருத்துவமனையில் இடஒதுக்கீடு அடிப்படையில் மருத்துவர்களை நியமிக்கக்கோரி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் தமிழக அரசைக் கண்டித்து கண்டன முழக்கங்கள் எழுப்பப்பட்டன. நிகழ்விற்கு இடஒதுக்கீடு குறித்து கருத்துகளை நிகழ்வினை தலைமையேற்று நடத்திய மாநில செயலவைத் தலைவர் சு.துரைசாமி, முன்னிலை வகித்த மண்டல செயலாளர் விசயன், நீதிராசன் (அமைப்பாளர்) இன அழிப்புக்கு எதிரான இஸ்லாமிய அமைப்பை வழக்கறிஞர் உமர்கயான், சுயமரியாதை கலைபண்பாட்டுக் கழகம் கோவை மாவட்ட அமைப்பாளர் சிவா, மதுரை மண்டல செயலாளர் இராவணன், தோழர் முகில் இராசு ஆகியோர் கண்டன உரையாற்றினர். மற்றும் மாவட்ட செயலாளர் அகிலன், மாநகர செயலாளர் ஜீவா நகர் குமார், மாநகர தலைவர் சண்முகம், ஒன்றிய அமைப்பாளர் தண்டபாணி, பொங்களூர் ஒன்றிய அமைப்பாளர் கார்த்திகேயன், பல்லடம் நகர செயலாளர் வடிவேலு, உடுமலை அமைப்பாளர் மலரினியன், ஒன்றிய அமைப்பாளர் குணசேகரன், சு.க.பா.க. மாவட்ட செயலாளர் பாரதிவாசன், சரண்யா, செல்வம், பரிமளராஜன், ஆதி தனபால், முத்து, மாதவன், மு.மணிகண்டன் மற்றும் தோழர்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர்.

# திருவல்லிக்கேணி பகுதி கழக சார்பில் கழக ஏட்டுக்கு 100 சந்தாக்கள்

திருவல்லிக்கேணி பகுதி திராவிடர் விடுதலைக் கழகக் கலந்துரையாடல் கூட்டம் 27.1.2014 அன்று கழகத் தலைமை நிலையத்தில் நடந்தது. தமிழர் திருநாள் விழா, வரவு செலவு கணக்குகளை கழகத் தோழர் குமரேசன் படித்தார். பகுதி கழகப் பொறுப்பாளர்கள் பிரகாசு, அருண், விழாக் குழு பொறுப்பாளர் தமிழ்ச் செல்வன், செந்தில், கார்த்திக் (வி.சி.), தலைமை நிலையச் செயலாளர் தபசி. குமரன், மாவட்ட பொருளாளர் வேழவேந்தன், மண்டல அமைப்புச் செயலாளர் அன்பு தனசேகர் ஆகியோர் உரையைத் தொடர்ந்து பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் நிறைவுரையாற்றினர். கழக ஏட்டுக்கு 100 சந்தாக்களுக்காக ரூ.20,000-த்தைப் பொதுச் செயலாளரிடம் தோழர்கள் வழங்கினர்.

# பாசிசத்தை ஆதரிக்கும் பார்ப்பனிய அமைப்பு பா.ஜ.க.

*காந்தி படுகொலை செய்யப்பட்ட ஜன.30 அன்று சென்னையில் ‘பாப்புலர் பிரன்ட் ஆப் இந்தியா’ அமைப்பு ஏற்பாடு செய்திருந்த பாசிச எதிர்ப்பு பொதுக் கூட்டத்தில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆற்றிய உரையிலிருந்து:*

பாரதிய ஜனதா கட்சி, ஆர்.எஸ்.எஸ். கட்டுப்பாட்டில் செயல்படும் ஒரு அமைப்பு. பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள மோடி, ஆர்.எஸ்.எஸ். அமைப்பால் தேர்வு செய்யப்பட்டவர். மோடி-ஆர்.எஸ்.எஸ். பிரச்சாரகராக இருந்து, பிறகு பா.ஜ.க.வுக்குள் திணிக்கப்பட்டவர். மோடியை பிரதமர் வேட்பாளராக அத்வானி ஏற்க மறுத்தார். உடனே ஆர்.எஸ்.எஸ். தலையிட்டு சமரசம் செய்தது. அத்வானி விருப்பம் இல்லாவிடிலும் ஆர்.எஸ்.எஸ். கட்டளைக்கு அடிபணிந்தார். இப்போது ‘தேசம் - தேச முன்னேற்றம் - வல்லரசு - இந்திய குடிமகன்’ என்ற சொல்லாடல்களை முன் வைத்து பா.ஜ.க.வும் மோடியும் தேர்தலை அணுகுகிறது. தங்களின் ‘மதவாதம் - இந்துராஷ்டிரம்’ என்ற அடிப்படையான கொள்கைகளை தற்காலிகமாக மறைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆர்.எஸ்.எஸ்., இஸ்லாமியர்களை எதிரிகளாகக் கட்டமைத்து இந்துக்களின் ராஷ்டிரத்தை வேத புராண சாஸ்திரங்களின் அடிப்படையில் உருவாக்குவதை இலட்சியமாகக் கொண்டு செயல்படக் கூடிய அமைப்பு. அதற்கு ஆட்சி அதிகாரம் தேவை. அந்த அதிகாரத்தைக் கைப்பற்ற தங்களின் சுதேசி கொள்கைகளையும் காற்றி பறக்கவிட்டு, பன்னாட்டு பகாசுர தொழில் நிறுவனங்களின் ஆதரவோடு களத்துக்கு வந்துள்ளார்கள். இந்திய அதிகாரத்தை இப்போதும் தங்கள் பிடிக்குள் வைத்துள்ள பார்ப்பன அதிகார வர்க்கம் பா.ஜ.கவுக்கும் - கார்ப்பரேட் நிறுவனங்களை இணைக்கும் முயற்சிகளில் இறங்கியிருக்கிறது. இதே சக்திகளோடு தான் காங்கிரசும் கட்டிபுரண்டு உறவாடியது. அந்த உறவுதான் ஊழல்களாக வெளிவந்தன. காங்கிரஸ் மக்கள் வெறுப்பை சந்திக்கும் என்பது உறுதியான நிலையில். அதே சக்திகள் காங்கிரசை கைகழுவி பா.ஜ.க.வை அரவணைக்கத் தொடங்கி விட்டன.

வி.பி.சிங் மண்டல் அறிக்கையை அமுல்படுத்திய போது அதைக் கடுமையாக எதிர்த்து நாடாளுமன்றத்தில் தண்ணீரைக் குடித்துக் கொண்டே நீண்டநேரம் பேசியவர்தான் ராஜிவ் காந்தி; மறந்துவிடக் கூடாது. மண்டல் பரிந்துரையை அமுல்படுத்தியதற்காக ராமன் கோயில் பிரச்சினையைக் கையில் எடுத்துக் கொண்டு வெறியாட்டம் ஆடி, வி.பி.சிங் ஆட்சியைக் கவிழ்த்ததும் பா.ஜ.க. தான். பா.ஜ.க., வி.பி.சிங் ஆட்சிக்குத் தந்த ஆதரவை திரும்பப் பெற்றது. இது வரலாறு. தனியார் துறையில் இடஒதுக்கீட்டு உரிமையைப் பெற்றுத் தருவதாக உறுதியளித்த அய்க்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி, தொழில் நிறுவனங்களின் எதிர்ப்புக்கு அடிபணிந்து அதை கிடப்பில் போட்டதையும் மறந்துவிடக் கூடாது. அர்ஜூன் சிங் மனித வளத் துறை அமைச்சராக இருந்தபோது உயர் கல்வியில் 27 சதவீதம் பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு கொண்டுவர முயற்சித்தபோது, பார்ப்பன-பன்னாட்டு நிறுவனங்களில் எதிர்ப்புக்கு அடிபணிந்து அதை நீர்த்துப் போகச் செய்ததும் இதே அய்க்கிய முற்போக்குக் கூட்டணி தான்!

மண்டல் பரிந்துரையைக் கொண்டுவந்த வி.பி.சிங் ஆட்சியைக் கவிழ்த்த அதே பா.ஜ.க.தான், தமிழ்நாட்டில் மோடி ஒரு பிற்படுத்தப்பட்டவர் என்றும், பிற்படுத்தப்பட்டவரை முதல்வராக்கப் போகிறோம் என்றும் காதில் பூ சுற்றுகிறது. அவர் ஆட்சி செய்யும் குஜராத்தில் பிற்படுத்தப்பட்டோருக்கான உரிமைகளையும் வாரி வழங்கிடவில்லை. மோடியின் குஜராத்தில் அவர் மூன்று முறை அவர் ஆட்சியைக் கைப்பற்றியும், ஒரு முஸ்லீம்கூட அவரால் சட்டமன்ற உறுப்பினர் பதவிக்கு நிறுத்தப்பட்டதில்லை. குஜராத் கலவரத்தில் மோடி பொடாவில் கைது செய்த அத்தனை பேரும் இஸ்லாமியர்களே! படுகொலை செய்த வன்முறையாளர்களைக் காப்பாற்றவே அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தியவர் மோடி.

இப்போது ‘இந்தியா’ என்ற நாட்டை வல்லரசாக்கிக் காட்டுகிறேன் என்று மோடி சூளுரைக்கிறார். ஒரு கேள்விக்கு பதில் சொல்ல வேண்டும். பா.ஜ.க.வானாலும் சரி, ஆர்.எஸ்.எஸ். அதன் துணை அமைப்புகளானாலும் சரி, எந்த அமைப்பாவது ‘இந்தியா’ என்ற பெயரைப் பயன்படுத்தியிருக்கிறதா? ஏன் பயன்படுத்தவில்லை? அதற்கு பதில் சொல்லத் தயாரா? அவர்கள் சொல்ல மாட்டார்கள். நாங்கள் அதற்கான காரணத்தைக் கூறுகிறோம். பா.ஜ.க.வும், ஆர்.எஸ்.எஸ். சும் ‘இந்தியா’வை ஏற்கவில்லை. அவர்கள் ‘பாரத்’, ‘பாரதியம்’ என்பதைத்தான் ஏற்கிறார்கள். இதற்கான காரணத்தை ஆர்.எஸ்.எஸ்.சுக்கு கொள்கைகளை வழங்கிய கோல்வாக்கர் இவ்வாறு விளக்குகிறார்:

“‘பாரத்’ என்பது நமது தாயைக் குறிக்கிறது. ஒரு பெண்ணை - அவளுடைய மகனின் பெயரைச் சொல்லிக் குறிப்பிடுவதே நமது கலாச்சார மரபு. அதன்படி, நீண்ட நெடுங்காலத்துக்கு முன்பு, நமக்கு முன்னால் பிறந்த நமது மூத்த சகோதரன் பரதன். அவன் மாவீரன். வெற்றிகரமான அரசன். இந்து ஆண் மகனின் சின்னம்; மகனின் பெயரால் – தாயைக் குறிப்பிடுவதும், நமது கலாச்சார மரபின்படி – தாய் நாட்டை ‘பாரத மாதா’ என்கிறோம். நாம் அனைவரும் பாரதியர்கள்.

‘பாரதியா’ என்பது நம்முடைய பழமையான பெயர். நமக்கு நினைவு தெரியாத காலம் முதல் இந்தப் பெயர் இருக்கிறது. வேதத்தில்கூட இந்தப் பெயர் இடம் பெற்றுள்ளது. நமது புராணங்கள் கூட நமது தாய்நாட்டை ‘பாரத்’ என்றும் – நமது மக்களை ‘பாரதியர்கள்’ என்றும் சுட்டுகிறது. உண்மையில் – ‘பாரத்’ என்பது – ‘இந்து’ என்பதுதான்! இரண்டுக்கும் ஒரே அர்த்தம்தான் – என்று விளக்குகிறார் கோல்வாக்கர்.

ஆக பாரத நாடு என்பதும் – பாரதிய ஜனதா கட்சி என்பதும், ‘பாரத வங்கி’ என்பதும் (ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா என்பதற்கு அந் நிறுவனம் தந்துள்ள தமிழ்ப் பெயர் இது) இந்து மதத்தோடு தொடர்புடைய குறியீட்டுச் சொற்களேயாகும். ‘இந்து தேசம்’ என்பதன் மறுபெயர்தான் ‘பாரத தேசம்’ என்கிறார் கோல்வாக்கர்!

ஆனாலும், ‘பாரதியம்’ - ‘பாரதம்’ என்ற சொற்கள் சரியான பொருளில் இப்போது பயன்படுத்தப் படாததால் - அதற்குப் பதிலாக ‘இந்து’ என்றே இப்போது குறிப்பிடுவதாகச் சுட்டிக் காட்டுகிறார் கோல்வாக்கர். மேலும் அவர்...

“இன்று, பாரதியம் – பாரத் என்ற சொற்கள் கூட – தவறான பொருளில் பயன்படுத்தப்படுகின்றன. ‘இந்தியா–இந்தியன்’ என்ற சொல்லுக்கு மாற்றாக, அதைப் பயன்படுத்துகிறார்கள். ‘இந்தியன்’ என்ற சொல், இந்த நாட்டில் வாழும் முஸ்லிம், கிறிஸ்தவர், பார்சி போன்ற பல்வேறு சமூகத்தவரையும் சேர்த்துத் தான் குறிக்கிறது. நம்முடைய சமூகமான ‘இந்து’வை மட்டும் குறிப்பதில்லை! நம்முடைய சமூகத்தை மட்டும் குறிக்கும் ‘பாரதிய’ என்ற சொல்லை, மற்ற சமூகத்தினரையும் இணைத்துக் கொள்ளும் சொல்லாகக் குறிப்பிடுகிறார்கள்; எனவேதான், ‘இந்து’ என்ற குழப்பமில்லாத சரியான சொல்லையே இப்போது நாம் பயன்படுத்துகிறோம்” என்கிறார் கோல்வாக்கர்!

ஆக, இந்தியா என்ற சொல்லையே – ‘சங் பரிவாரங்கள்’ ஏற்க மறுக்கின்றன; அதனால் தான் தங்களது அரசியல் கட்சிக்குக்கூட ‘பாரதிய ஜனதா கட்சி’ என்றே பெயர் சூட்டியிருக்கின்றன. இந்தியா என்ற கோட்பாட்டையே – மதவெறிக் கண்ணோட்டத்தில் ஏற்க மறுக்கும் ஒரு கட்சிதான் இந்தியாவின் தேச பக்திக்கு உரிமை கொண்டாடி, நாடகம் நடத்தி வருகிறது.

பா.ஜ.க.வும் - ஆர்.எஸ்.எஸ்.சும் ‘பாசிசம்’ என்று ஹிட்லர், முசோலினி முன் வைத்த இனவெறுப்பு, இன அழிப்புக் கொள்கையின் வாரிசுகள். பார்ப்பன மேலாண்மையை வலியுறுத்தும் ‘இந்து’ சமூக அமைப்பைச் சுட்டிக் காப்பாற்றுவதற்கு பிற மதத்தினரை மதமற்றவர்களை எதிரிகளாகக் கருதி ஒழிப்பதற்கு ஹிட்லர், முசோலினி கொள்கைதான் சரியானது என்பதை ஏற்றுக் கொண்டவர்கள் இவர்கள்!

ஆர்.எஸ்.எஸ். அமைப்புக்கு கொள்கையை வகுத்துக் கொடுத்த கோல்வாக்கர், இதை வெளிப்படையாகவே எழுத்து மூலமாகவே எழுதி வைத்திருக்கிறார்:

“ஜெர்மன் இனப் பெருமை இன்று உலகம் முழுதும் பேசப்படுகிறது. அது தனது இனத்தையும் தூய்மையான கலாச்சாரத்தையும் காப்பாற்றிக் கொள்ளவே ‘செமிட்டிக்’ இனத்தவரான யூதர்களை வெளியேற்றி, உலகத்தையே அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இதுதான் ஒரு இனத்தின் பெருமையை வெளிப்படுத்தும் மிக உயர்ந்தபட்ச நடவடிக்கை. ஆழமான வேறுபாடுகளைக் கொண்ட வெவ்வேறு இனங்களையும், கலாச்சாரங்களையும் ஒன்றுபடுத்தவே முடியாது என்பதை ஜெர்மன் நிரூபித்திருக்கிறது. இந்துஸ்தானத்தில் வாழும் நமக்கு இது ஒரு படிப்பினை” – (கோல்வாக்கர் ‘நாம் அல்லது நமது தேசத்தின் வரையறை’ நூல்)

இந்துக்களை இனமாகக் கட்டமைப்பதே கோல்வாக்கரின் அடிப்படை நோக்கமாக இருந்தது. எனவே இந்தத் தேசம் ‘இந்துக்களின் தேசம்’ என்றார். இந்தத் தேசத்தின் எதிரிகளாக இஸ்லாமியர்களையும் கிறிஸ்தவர்களையும் சித்தரிக்ககிறார்.

“இந்துக்கள்தான் இந்த மண்ணின் பூர்வீகக் குடிகள்; வேறு எங்கிருந்தும் இங்கே வந்துவிடவில்லை; நாம் எங்கிருந்து தோன்றினோம் என்பதை எத்தகைய வரலாற்றுச் சிந்தனைக்குள்ளும் அடக்க முடியாது. நமக்குத் துவக்கமே கிடையாது; நாம் அநாதிகள்” என்கிறார் கோல்வாக்கர். (மேற் குறிப்பிட்ட அதே நூல்)

இப்படி கோல்வாக்கர் கூறும் பூர்வீகக் குடிகள் ஆரியர்கள்தான்! இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்களை ஒதுக்கிய - வர்ணாஸ்ரமத்தை ஏற்றுக் கொண்ட ஆரிய தேசத்தை அமைப்பதையே லட்சியமாகக் கொண்டவர்கள்.

**முசோலினியுடன் சந்திப்பு**

இது தொடர்பாக மற்றொரு வரலாற்றுத் தகவலையும் சுட்டிக் காட்ட முடியும்.

ஆர்.எஸ்.எஸ். அமைப்பை நாக்பூரில் உருவாக்கிய அய்ந்து பார்ப்பனர்களில் ஒருவரான பி.எஸ். மூஞ்சே, 1930இல் லண்டன் வட்டமேஜை மாநாட்டுக்குச் சென்றபோது, அங்கிருந்து இத்தாலிக்குச் சென்று பாசிசத் தலைவர் முசோலினியை சந்தித்துப் பேசியதை கிறிஸ்டோப் ஜாபர்லெட் தனது ஆய்வு நூலில் (இந்துதேசிய இயக்கமும்,இ இந்திய அரசியலும்) சுட்டிக் காட்டியிருக்கிறார்.

இதனைத் தொடர்ந்து மார்சியா காசலோரி எனும் இத்தாலிய ஆய்வாளர், இது தொடர்பாக இத்தாலி மற்றும் மும்பை ஆவணக் காப்பகங்களில் உள்ள ஆய்வேடுகளைப் படித்து ‘எக்னாமிக் அண்ட் பொலிட்டிக்கல் வீக்லி’ இதழில் (ஜன. 22, 2000) ஆய்வுக் கட்டுரை ஒன்றை எழுதியிருக்கிறார்.

வட்ட மேஜை மாநாட்டுக்குச் சென்ற பி.எஸ். மூஞ்சே, 1931இல் இத்தாலிக்குச் சென்று முசோலினியைச் சந்தித்தார். முசோலினி இயக்கம் நடத்திய பல்வேறு அமைப்புகள், நிறுவனங்களை நேரில் பார்த்து 13 பக்கங்களுக்குக் குறிப்புகள் எழுதியிருக்கிறார் மூஞ்சே. 1931 மார்ச் 19 ஆம் தேதி மாலை 3 மணியளவில் வெனிஷீய அரண்மனையில் இத்தாலிய சர்வாதிகாரி முசோலினியை சந்தித்து, அவர் நடத்தி வந்த பாசிச அமைப்புகளை வெகுவாகப் பாராட்டினார்.

“வளரும் நாடுகளுக்கு இதுபோன்ற இராணுவ அமைப்புகள் மிகவும் தேவை. குறிப்பாக இந்தியாவுக்குப் புத்துயிர் ஊட்ட இதுபோன்ற இராணுவ அமைப்புகள் அவசியம் தேவை. இதே நோக்கில் நானாகவே சிந்தித்து, எங்கள் நாட்டில் ஏற்கனவே ஒரு அமைப்பை நான் உருவாக்கியுள்ளேன். வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் உங்கள் நாட்டு இராணுவ அமைப்புகள் பற்றிப் புகழ்ந்து பேசுவேன்” என்று கூறி விடைபெறுகிறார் மூஞ்சே.

இளைஞர்களிடம் பாசிசக் கருத்துக்களைத் திணிப்பதுதான் இந்நிறுவனங்களின் நோக்கமாகும்.

(4ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION 05.02.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# தலைநகரில் தமிழர் திருநாள் புத்தாண்டு விழா (ஜனவரி 12)





















(முதல் பக்கத் தொடர்ச்சி)

காட்சியும் பணிந்தது; வீரபாண்டியன் நிறுத்தப்பட்டு விட்டார்.

- ‘இந்து’ ஏட்டின் தலைமை ஆசிரியராக பணியாற்றியவர் சித்தார்த்த வரதராஜன். கடந்த அக்டோபர் மாதம் பதவியிலிருந்து விலகிவிட்டார். “கொள்கை ரீதியாக மோடியை ‘இந்து’ எதிர்க்கிறது. ஆனால், தேசிய அரசியலில் வளர்ந்து வரும் மோடிக்கு உரிய முக்கியத்துவம் ‘இந்து’வில் தரப்படவில்லை. இதற்கு சித்தார்த் வரதராஜன் பின்பற்றிய நெறிமுறைகளே காரணம்” என்று குற்றம் சாட்டியுள்ளார் ‘இந்து’வின் தலைமை ஆசிரியராக மீண்டும் பொறுப் பேற்றுள்ள இரவி. பத்திரிகை அதிபர்கள் எந்தப் பிரச்சினைக்கும் விலை கொடுக்கத் தயாராக இல்லை. ஆபத்து என்றால் சரணடைந்துவிடுவார்கள் என்கிறார், சித்தார்த் வரதராஜன்.

- இந்துத்துவா எதிர்ப்புக் கட்டுரைகள் எழுதியதற்காக ‘ஓப்பன்’ ஆங்கில் வார இதழில் அரசியல் பிரிவு ஆசிரியர் ஹர்தோஷ்சிங்பால் பதவி விலகுமாறு நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது. மோடியை மட்டுமல்ல, ராகுல் காந்தியையும் அரசியல் ரீதியாக விமர்சித்து எழுதி வந்தவர் இவர். அரசியல் அழுத்தம் காரணமாகவே நான் நீக்கப்பட்டேன் என்கிறார் ஹர்தேஷ்சிங்.

- ரிலையன்ஸ் அம்பானி குழுமத்தால் நடத்தப்படும் 18 ஊடகங்களில் ஒன்று ‘ஃபோர்ப்ஸ்’ பத்திரிகை. மோடிக்கு ஆதரவாக செயல்பட வேண்டும் என்று 18 ஊடகங்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளன. மோடியை உயர்த்திப் பிடிக்கும் அனைத்து பதிவுகள், ஆவணங்களைப் பயன்படுத்துவதோடு, மோடிக்கு எதிரான கருத்துகளை முறியடிக்க வேண்டும் என்றும் ரிலையன்ஸ் குழுமம் அறிவுறுத்தியுள்ளது. இந்த நெருக்குதலுக்கு தாக்குப் பிடிக்க முடியாமல் ‘ஃபோர்ப்ஸ்’ இதழின் 4 ஆசிரியர்களில் ஒருவரான இந்திரஜித் குப்தா, கடந்த ஆண்டு பதவி விலகிவிட்டார்.

- சமூக வலைதளங்களில் ஒன்றான ‘டிவிட்டர்’ செய்திப் பிரிவு தலைமை ஆசிரியராக இருப்பவர் ரஹீல்குர்ஷித். அவர் எப்போதோ பல ஆண்டுகளுக்கு முன்பு மோடியை விமர்சித்து பதிவேற்றியதைத் தேடிப் பிடித்து, அவரை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று பா.ஜ.க. ஆதரவு சக்திகள் கையெழுத்து இயக்கம் நடத்தி வருகின்றன. ‘அவுட் லுக்’ ஏடு, இத் தகவல்களை வெளியிட்டுள்ளது. ஊடகங்கள் மிரட்டப்படுவது இப்போதே தொடங்கிவிட்டது. இவர்கள் அதிகாரத்துக்கு வந்தால் என்னவாகும்?

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதை முன்மாதிரியாகக் கொண்டே ஆர்.எஸ்.எஸ். பயிற்சி அமைப்புகளை இந்தியாவில் உருவாக்கினர்.

மூஞ்சே இந்தியாவுக்குத் திரும்பிய பிறகு ஹெட்கேவருடன் இணைந்து பாசிசம் பற்றித் தீவிரமாக விவாதித்தார். 1934இல் பாசிசமும்-முசோலினியும் என்ற தலைப்பில் மாநாடு ஒன்றை ஏற்பாடு செய்தனர். இந்த மாநாட்டுக்கு ஏற்பாடு செய்தவர் காவ்தே சாஸ்திரி என்ற பார்ப்பனர், ‘தி மரார்த்தா’ என்ற பத்திரிகைக்கு மூஞ்சே ஒரு பேட்டியளித்தார். “இந்தியாவில் இராணுவ ரீதியான இளைஞர் இயக்கம் அமைக்கப்பட வேண்டும். ஜெர்மனி இளைஞர் இயக்கத்தைப் போலவும், இத்தாலியில் உள்ள பலில்லா இயக்கத்தைப் போலவும் (இராணுவப் பயிற்சியுடன் பாசிச சிந்தனைகளையும் பயிற்றுவிக்கும் இயக்கம்) அந்த இயக்கம் அமைய வேண்டும். இந்த இயக்கங்களை நானே நேரில் சென்று பார்வையிட்டேன். என்னுள் மிகப் பெரும் தாக்கத்தை இந்த இயக்கங்கள் உருவாக்கிவிட்டன” என்று அந்தப் பேட்டியில் மூஞ்சே கூறினார்.


> **“இந்து தர்ம சாஸ்திரங்களின் அடிப்படையில் இந்துயிசக் கோட்பாட்டை உருவாக்கி இந்தியா முழுவதும் பரப்புவதற்கான திட்டம் ஒன்றை ஆலோசித்து வருகிறேன். ஆனால் சிவாஜி, முசோலினி அல்லது ஹிட்லரைப் போன்ற ஒரு இந்து சர்வாதிகாரியின் கீழ் நமக்கு சுயராஜ்யம் கிடைத்தால்தான், இந்தத் திட்டத்தை அமுல்படுத்த முடியும். அதற்காக, சர்வாதிகாரிகள் உருவாகிறவரை, நாம் கைகளைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்க முடியாது. நாம் விஞ்ஞான ரீதியாக ஒரு திட்டத்தை உருவாக்கிப் பிரச்சாரத்தைத் தொடங்க வேண்டும்”** என்று ஹெட்கேவர், கோகலே ஆகியோரை சந்தித்துப் பேசும்போது மூஞ்சே கூறுகிறார்.

பிரிட்டிஷ் ஆட்சியின் உளவுத் துறை அறிக்கைகளும், மூஞ்சேயின் இந்தத் திட்டங்களை உறுதி செய்கின்றன. “எதிர்கால இந்தியாவில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பு - இத்தாலி ‘பாசிச’மாகவும், ஜெர்மனி நாசிசமாகவும் தன்னை உறுதிப்படுத்திக் கொள்ளும். இது மிகைப்படுத்தப்பட்டதாகக் கருத வேண்டாம்” என்று பிரிட்டிஷ் உளவுத் துறை அறிக்கையும் இந்த ஆபத்தைப் பதிவு செய்திருக்கிறது.

இவை எல்லாம் ஏதோ கடந்தகால வரலாறுகள் அல்ல. இப்போதும் இவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிற கொள்கைகள்தான். பா.ஜ.க. ஆட்சி செய்த மாநிலங்களில் அமுல்படுத்தப்பட்ட கொள்கைகளே இதற்கு சான்றுகள்!

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 6th February 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | பிப்ரவரி 13, 2014 | புரட்சி 13 | முழக்கம் 05 | விலை: ரூ.3.00


## வினாக்கள்... விடைகள்...!

+ நாய் வளர்த்தால் குடும்பப் பிரச்சினை வராது; அது குடும்பத்தில் மகிழ்ச்சியைத் தருகிறது.

**– அமைச்சர் ஜெய்பால் அரசு விழாவில் பேச்சு**

நல்ல யோசனை. அப்படியே அம்மா விடம் சொல்லி விலை இல்லா நாய் வழங்கும் திட்டத்தை அறிவிக்கச் சொல்லுங்க. தேர்தலில் குடும்பம் குடும்பமா மகிழ்ச்சியா வாக்களிப் பாங்க!

+ மும்பையில் ஏழுமலையான் கோயில் கிளையை கட்ட – மகாராஷ்டிரா அரசிடம் நிலம் வாங்க தேவஸ்தானம் முடிவு. **– செய்தி**

அரசிடம் நிலம் வாங்கிடுவீங்க! ஏழுமலையானை யாரிடமிருந்து வாங்கப் போறீங்க?

+ முடிகொட்டும் புற்று நோயாளிகளுக்கு 'விக்' தயாரிச்சு சென்னை கல்லூரி மாணவிகள் தங்கள் தலையை மொட்டைப் போட்டு முடிக் கொடை வழங்கினார்கள். **– செய்தி**

"காணிக்கை"யை, "கொடை"யாக மாற்றிய சகோதரிகளே! நீங்களே அழகானவர்கள்!

+ கெஜ்ரிவால் ஆட்சிக்கு காங்கிரஸ் ஆதரவைத் திரும்பப் பெற வேண்டும்; சென்னையில் ஆம் ஆத்மி கட்சி அலுவலகம் முன் காங்கிரஸ் போராட்டம். **– செய்தி**

ஒரு சந்தேகம்! இதுக்குப் போராட வேண்டிய இடம் காங்கிரஸ் கட்சி அலுவலகம் தானே? அது சரி, எவ்வளவு காலத்துக்குத்தான் காங்கிரசுக்காரர்கள், காங்கிரஸ் அலுவலகத்திலே போராடிக் கொண்டிருக்க முடியும்?

+ ஒவ்வொரு இந்தியனுக்கும் வகுப்பு, ஜாதி, இனம் பற்றி பார்க்காமல் சமத்துவத்தை வழங்குவேன்.

**– மோடி குடியரசு நாள் செய்தி**

'மதம்' என்ற வார்த்தையை மட்டும் கவனமாக தவிர்த்துவிட்டீர்களே சும்மா சொல்லக் கூடாது; கொள்கை யில் உறுதியாகத்தான் நிக்குறீங்க...

+ டெல்லி மாநில ஆட்சிக்கு காவல்துறை அதிகாரம் கேட்டு போராடிய முதலமைச்சர் கெஜ்ரிவால் மீது காவல் துறை வழக்கு. **– செய்தி**

காவல்துறையின் வழக்கை வேணும்னா வாங்கிக்கீங்க... ஆனால், அதிகாரத்தை வழங்க முடியாதுன்னு சொல்றாங்க!

+ உத்திரபிரதேச மாநில அமைச்சர் அசம்கான் மாட்டுப் பண்ணையில் காணாமல் போன ஏழு எருமை மாடு களைத் தேட போலீஸ் தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளன. **– செய்தி**

தனிப்படைகள் போதாது; ஹெலி காப்டரில் போய் தேடுங்கள்! காணாமல் போனது சாதாரண எருமை அல்ல! அமைச்சர் வீட்டு எருமை!

+ இந்தியப் பொருளாதாரம் இயற்கை யாகவே பெண் தன்மை கொண்டது.

**– பா.ஜ.க. ஆடிட்டர் குருமூர்த்தி**

ஓகோ! 'அடிமைப் பொருளாதாரம்' என்பதை 'இந்துத்வா' மொழியில் இப்படியும் அழைக்கலாமோ! புரியுது!

### உலகத் தமிழர்களின் ஒற்றை கோரிக்கை

# இலங்கை போர்க் குற்றங்களுக்கு பன்னாட்டு விசாரணை!

மீண்டும் மார்ச் மாதம் அய்.நா. மனித உரிமைக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை அமெரிக்கா கொண்டு வரப் போவதாக செய்திகள் வருகின்றன. அமெரிக்க தீர்மானத்தை ஆதரிப்பதா? எதிர்ப்பதா என்ற இரண்டு கேள்விகளுக்குள் பிரச்சினைகளை முடித்து விடுவது சரியான அணுகுமுறையாக இருக்க முடியாது. அமெரிக்க தீர்மானத்தின் உள்ளடக்கத்தை ஆய்வுக்கு உட்படுத்திட வேண்டியது அவசியமாகும்.

ஈழத்தில் இனப்படுகொலை நடந்து முடிந்த வுடனேயே 2009இல் அய்.நா. மனித உரிமைக் குழுவில் சுவிட்சர்லாந்து ஒரு தீர்மானத்தை முன்மொழிந்தது. அந்தத் தீர்மானம், இனப்படுகொலை என்றுகூட குறிப்பிடப்படவில்லை. மனித உரிமை மீறல் பற்றி விசாரணை நடத்த வேண்டும் என்று கோரியது. அந்தத் தீர்மானத்தை முடக்கி தோல்வியடையச் செய்வதில் இந்தியா, அய்.நா.வில் பல நாடுகளுடன் தொடர்பு கொண்டு இலங்கைக்காக ஆதரவைக் கேட்டது. தீர்மானத்தை முடக்கியதோடு மட்டுமல்லாமல், இலங்கை அரசு, "பயங்கரவாதத்தை" ஒழித்துவிட்டதைப் பாராட்டி, ஒரு பாராட்டுத் தீர்மானத்தைக் கொண்டுவர ஏற்பாடு செய்தது. அய்.நா.வில் அத்தீர்மானம் நிறைவேறியது.

2012 ஆம் ஆண்டில் அய்.நா.வில் அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானம், மனித உரிமை மீறல்கள் குறித்து இலங்கை அரசே விசாரிக்க வேண்டும் என்றுதான் கூறியது. இதை ஆதரிப்பதில்கூட இந்தியா தயக்கம் காட்டியது. அந்த விசாரணைக்கு அய்.நா. தலையிட்டு உதவும் என்றிருந்த வாசகத்தையும் இந்தியா நீக்க வேண்டும் என்று கூறியது. இலங்கை அரசின் அனுமதியுடன் அய்.நா. தலையிடலாம் என்று அந்த வாசகம் திருத்தப்பட்டது. அதன் பிறகு இலங்கை அரசே நியமித்துக் கொண்ட விசாரணை ஆணையத்தின் (LLRC) பரிந்துரைகளை நிறைவேற்ற வேண்டும் என்று கோரிக்கை வைக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2013 ஆம் ஆண்டிலும் இதே போன்ற நிலைதான். பன்னாட்டு சட்டமுறைகளுக்கு எதிரான மனித உரிமை மீறல் குறித்து இலங்கை அரசே நம்பகத் தன்மை கொண்ட சுதந்திரமான அமைப்பைக் கொண்டு விசாரணை நடத்த வேண்டும் என்று அய்.நா.வில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானம் நிறைவேறியது. அத் தீர்மானத்தில் அய்.நா. அதிகாரிகள் இலங்கைக்கு நேராகச் சென்று விசாரணை நடத்தலாம் என்றும், இலங்கை அரசின் செயல்பாடுகள் திருப்தி தரவில்லை என்றும் இடம் பெற்றிருந்த வாசகங்களை இந்தியா தலையிட்டு நீக்கியது.

2009இல் இலங்கைக்கு எதிராக 12 நாடுகள் ஆதரவாக வாக்களித்தன. 2012இல் இது 24 ஆகவும், 2013இல் 25 ஆகவும் உயர்ந்தது. கடைசியாக இலங்கைக்கு எதிராக வாக்களித்த நாடுகள் ஆஸ்திரேலியா, பெனின், சிலி, கோஸ்டாரிகா, செக் குடியரசு, கவுதமேலா, இந்தியா, இத்தாலி, லிபியா, பெரூ, போலந்து, மால்டோவா, ருமேனியா, ஸ்பெயின், சுவிட்சர்லாந்து, அமெரிக்கா, அர்ஜென்டினா, பிரேசில், கோடி டி ஐவரி, எஸ்டோனியா, ஜெர்மனி, அயர்லாந்து, மாண்டிநீக்ரோ, தென் கொரியா, சியரலியோனி ஆகிய நாடுகள்.

இலங்கைக்கு 2009 இல் 29 நாடுகள் வாக்களித்தன. 2012 இல் இது 15 ஆகவும், 2013இல் 13 ஆகவும் குறைந்தது. கடைசியாக ஆதரவளித்த நாடுகள் காங்கோ, ஈகுவேடார், இந்தோனேசியா, குவைத், மாலத் தீவு, மொருசியானா, பாகிஸ்தான், பிலிப்பைன்சு, கத்தார், தாய்லாந்து, உகாண்டா, அரபு, எமரேட்ஸ், வெனிசுலா.

இப்போது இலங்கையின் போர்க் குற்றங்கள் குறித்து சுதந்திரமான பன்னாட்டுப் புலனாய்வு விசாரணை வேண்டும் என்ற கோரிக்கை முன்னெழுந்துள்ளது. பிரித்தானியா தமிழ் அமைப்பு பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி வருகிறது. அய்.நா.வின் மனித உரிமை ஆணையர் நவநீதம் பிள்ளை இலங்கைக்கு நேரடிப் பயணம் மேற்கொண்டு ஆய்வு செய்து வெளியிட்ட அறிக்கையிலும் இதை வலியுறுத்தியுள்ளார்.

எல்லாவற்றுக்கும் மேலாக ஈழத் தமிழர் பிரச்சினையில் பேசக்கூடிய அதிகாரம் பெற்ற தமிழ் ஈழ மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட வடக்கு மாகாண கவுன்சில் போர்க் குற்றங்கள் குறித்த பன்னாட்டுப் புலனாய்வை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றி யுள்ளது.

புலம் பெயர்ந்த தமிழர்களின் ஒரே கோரிக்கையாக இது வடிவம் பெற்றுள்ளது. இதற்கு மாற்றாக 'இனப் படுகொலை' நிகழ்ந்துள்ளதை தீர்மானமாக ஏற்க வேண்டும் என்று சில தரப்பில் கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன. 'இனப் படுகொலை' என்ற முடிவுக்கு வந்து விட்டாலே தனித் தாயகம் என்ற கோட்பாடு அதனுடன் இணைந்து நிற்பதால் சர்வதேச சமூகம் அந்த எல்லைக்கு வரும் என்று எதிர்பார்க்க முடியாது. அதற்கு முதற்படியாக 'பன்னாட்டு புலனாய்வு' என்ற கோரிக்கை இருக்கும். பன்னாட்டு புலனாய்வு விசாரணையில் போர்க் குற்றங்கள் மாந்த நேயத்துக்கு எதிரான குற்றங்கள் விசாரிக்கப்பட்டால், அது, 'இனப் படுகொலை' என்ற முடிவுக்குத்தான் இழுத்துச் செல்லும்.

எனவே, போர்க் குற்றங்கள் குறித்த சுதந்திரமான பன்னாட்டு புலனாய்வு விசாரணை என்ற ஒற்றைக் கோரிக்கையை தமிழர்களின் முழக்கமாக முன்வைக்க வேண்டும் என்ற புலம்பெயர்ந்த தமிழர்களின் கோரிக்கைக்கு நாம் வலிமை சேர்க்க வேண்டும். அதற்கு மாறாக இலங்கையின் உள்நாட்டு விசாரணையையே வலியுறுத்துவதாக அமெரிக்கா தீர்மானம் மீண்டும் கூறினால், அதை ஆதரிப்பதும் ஒன்றுதான், எதிர்ப்பதும் ஒன்றுதான். கண் துடைப்பு நாடகமாகவே இருக்கும்.

அமெரிக்காவின் தீர்மானம் பன்னாட்டு விசாரணையை வலியுறுத்துவதாக இருந்தால் அதை ஆதரிப்பதே சரியான நிலைப்பாடாக இருக்க முடியும். தீர்மானத்தைக் கொண்டு வருவது அமெரிக்கா என்பதால் எதிர்க்க வேண்டும் என்ற நிலைப்பாடு சரியாக இருக்க முடியாது. அமெரிக்காவின் வஞ்சகமும் அடாவடியும் 'பெரிய அண்ணன்' அணுகுமுறையும் மறுக்க முடியாத உண்மை தான். இதற்க மாறாக இந்தியாவே இப்படி ஒரு தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டும் என்று கூறுவதில் நியாயம் இருக்கிறது. ஆனால், இந்தியா கொண்டு வருமா என்பதே கேள்வி.

'காமன்வெல்த் மாநாட்டில் சடங்குத்தனமான எதிர்ப்பைக் காட்டி இந்தியா நடத்திய நாடகத்தை நாடு பார்த்தது. தமிழ் ஈழத்தில் இனப் படுகொலை போர்க் குற்றங்களை இந்தியா ஒப்புக் கொள்வதற்கு பார்ப்பன அதிகார வர்க்கம் அனுமதிக்காது. இந்தியாவில் அதையே காஷ்மீரிலும் வடகிழக்கு மாநிலங்களிலும் இந்தியா நடத்திக் கொண்டிருக்கும்போது எப்படி ஒப்புக் கொள்வார்கள்? இந்த அரசியல் பின்னணியில் 'எதார்த்த கள நிலையை' கவனத்தில் கொண்டுதான் முடிவுகளைத் தீர்மானிக்க வேண்டியது அவசியமாகிறது.

இலங்கையின் போர்க் குற்றங்களுக்கு பன்னாட்டு விசாரணை வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்துவதே இப்போதைக்கு சரியானதாக இருக்கும்.

**– இரா**

# பிப்.14 காதலர் நாள் – சிந்தனைகள்

### காதல் பற்றி பெரியார்

*உணர்ச்சிகளால் உந்தப்படும் காதலை மறுக்கும் பெரியார், அறிவார்ந்த புரிதலோடுக் கூடிய காதலை வரவேற்கிறார். காதல் பற்றி பெரியார் கருத்து.*

“உண்மையில் காதல் மணம் என்றால் பெண்களும் ஆண் களும் சம நிலையில் பழகும் வாய்ப்புத் தந்து, ஒருவருடைய குணா குணங்களை மற்றவர் அறியும் சமயம் கிடைத்து ஒருவருடைய வாழ்க்கைக்கு ஒருவர் இன்றியமையாதவர் என்ற நிலையில் காதல் கொள்வதுதான் உயர்ந்த காதலாகும்!” **– குடிஅரசு 21.7.45**

“திடீரென்று காதல் கொள்வது, பிறகு கஷ்டப்படுவது, கேட்டால் காதலுக்காக என்று சொல்வது; என்ன நியாயம்? இது பலமற்ற சபலத்தனம். காதலுக்காகத் துன்பத்தை அடைவது முட்டாள்தனம். காதலும் கடவுளும் ஒன்று என்று சொல்வது இதனால்தான். காதலும் கடவுளும் ஒன்று என்றால் - காதலும் பொய் கடவுளும் பொய் என்றுதான் அர்த்தம்.” **– விடுதலை 24.5.47**

“ஒரு பெண்ணும் ஆணும் சேர்ந்து பழகி ஒருவரையொரு வர் அறிந்து கொண்ட பிறகுதான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும். ஆண்களோடு சாதாரணமாகப் பெண்களைப் பழகச் சொல்ல வேண்டும். யோக்கியனா? கோபக்காரனா? பைத்தியக்காரனா? வேடக்காரனா? குடிகாரனா? என்று பெண்ணுக்கு முன்னரே தெரிய வேண்டாமா? பழகினால்தானே தெரியும். திடீரென்று ஒருவரையொருவர் முடிச்சு போடலாமா? அன்பு, குணம், பழக்க வழக்கம் இவைகள் உணர்ந்து ஒருவருக்கொருவர் நண்பர்களாகப் பழக வேண்டும். உடல் சேர்க்கை வேண்டும் என்று நான் கூறவில்லை. இதுதான் நான் சொல்லும் காதல்-ஆசை-இஷ்டம்.”
**– விடுதலை 24.5.47**

“திருமணம் அல்லது கல்யாணம், கன்னிகாதானம் இது போன்ற நிகழ்ச்சிகள் தமிழ் மக்களாகிய நமக்குக் கிடையாது. நம்மவர்களுக்கெல்லாம் மண வாழ்க்கை இல்லை; காதல் வாழ்க்கைத்தான் இருந்தது.”
**– விடுதலை 12.2.68**

*பிப்.14 – உலகக் காதலர் நாள்! ஜாதி எதிர்ப்பு – பெண்ணுரிமை – பகுத்தறிவுக் கண்ணோட்டத்தில் புரிதலோடு உருவாகும் காதலைப் பேசும் – சில கவிதைகள்.*



### ஒரே மதம்: ஒரே ஜாதி

உனக்கும் எனக்கும்
ஒரே ஊர் –
வாசுதேவ நல்லூர்...
நீயும் நானும்
ஒரே மதம்...
திருநெல்வேலிச்
சைவப் பிள்ளைமார்
வகுப்பும்கூட....
உன்றன் தந்தையும்
என்றன் தந்தையும்
சொந்தக் காரர்கள்...
மைத்துனன் மார்கள்.
எனவே
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம்
தாம்கலந் தனவே.

**– மீரா**

### ‘சாமி’க்கு மாலை போட...

என்னை விட்டுவிட்டு
சாமிக்கு மாலைபோட
உனக்கு உரிமை
உண்டென்றால்
உன்னை விட்டுவிட்டு
வேறு ஆசாமிக்கு
மாலைபோட
எனக்கும் உரிமை
உண்டுதான்

**– அறிவு மதி**

### இல்லாத போது...

நான் உன்னை நேசிக்கிறேன்
ஏற்றுக் கொள்கிறேன்
நான் உன்னைப் புரிந்து
கொள்கிறேன்
நான் உன்னை சுதந்திரம்
உள்ளவளாக்குகிறேன்
நீ இங்கே
இல்லாதபோது மட்டும்

**– மனுஷ்ய புத்திரன்**

### அலையும் மீன்

அகப்பட்டுக் கொள்ளத்தான்
இந்த மீன்
அலைகிறது!
தொட மாட்டோம் என்று
தூண்டில்கள்
சொல்லிவிட்ட பிறகும்!

**– மு. மேத்தா**

### ஆண் யாழ் வாசித்து...

“ஆண் ஒருவனுக்கு
துன்பம் வராதா?
தான் யாழ் இசைத்து
இன்பம் சேர்க்க மாட்டோமா”
என்று இவளுக்கு
கிறக்கம் ஏற்படும்.

அம்மாவிடம் சொல்வாள்.
அம்மா சிரிப்பாள்.

ஒரு ஆண் யாழ் வாசித்து
அவள் துன்பத்தை போக்கி
இன்பம் சேர்ப்பதாக
ஏதாவது கற்பனை
அவளுக்குத் தோன்றுகிறதா
என்று கேட்டாள் அம்மா
ஒரு முறை.

இவள் இல்லையென்றாள்.

அவள் யோசிக்க வேண்டும்
என்றாள் அம்மா.

**– அம்பை எழுதிய பிரசுரிக்கப்படாத கைப்பிரதி என்னும் சிறுகதையில்**

### உடன்கட்டை ஏற முடியாது...

அருமைக் காதலனே!
நட்சத்திரங்களை
எழுத்துக் கூட்டிப் பார்த்தால்
உன் பெயர்தான் வருகிறது.

உனக்குப் பிடிக்கும்
என்பதாலேயே
ஷெனாய் இசையும்,
பருப்புச் சாதமும்
என் பாசத்துக்குரியவை
ஆகிவிட்டன.

உன் இதயத்து வால்வுகளில்
என் நினைவு துடிப்பது
தெரியும். ஆயினும்
எனக்கென்று சில குணங்கள்,
ஆசாபாசங்கள், லட்சியங்கள்
இருப்பதை நீ
உணர்வதேயில்லை.

காதலிக்கு மூளை இருக்கிறது
என்பதே கசப்பான
உண்மையாய் இருக்கிறது
உனக்கு.
அந்த மூளை வேலை செய்கிறது
என்பது அவமானமாய்த்
தோன்றுகிறது உனக்கு.

உனக்கு கீழ்ப்பட்டு
உன்னையே மையமாக வைத்து
என் வாழ்க்கை
இருக்க வேண்டும் என
விரும்புகிறாய் நீ.

என் மனதை, உணர்ச்சிகளை
எரித்து என்னை
இயந்திரமாக்கப் பார்க்கிறாய்.
அதுவே நல்ல
இல்லறம் என்கிறாய்.

உடலை எரிப்பதற்கு
சதி என்றால்
இதற்குப் பெயர் என்னவோ?

மன்னித்து விடு...
என்னால் உடன்கட்டையேற
முடியாது
உடலளவிலும் சரி
மனதளவிலும் சரி.

**– நாகராணி**

# உயிர் தோன்றியது கடவுள் சக்தியால் அல்ல!

உலகப் புகழ் பெற்ற தனது மூலதனம் நூலை “உங்களுடைய தீவிர அபிமானி” என்று கையெழுத்திட்டு கார்ல் மார்க்ஸ் ஒருவருக்கு அனுப்பி வைத்தார். அந்த நபர் “பரிணாமவியலின் தந்தை” சார்லஸ் டார்வின். டார்வின் எழுதிய “உயிரினங்களின் தோற்றம்” என்ற நூலைப் படித்துவிட்டு, வரலாற்றுப் பொருள் முதல் வாதத்துக்கு அந்த நூல் அடிப்படையாக இருந்ததாக மார்க்ஸ் குறிப்பிட்டுள்ளார். டார்வின் கண்டறிதல் அந்த அளவுக்குத் தாக்கம் செலுத்தியிருந்தது.

கடவுளே மனித இனத்தைத் தோற்றுவித்ததாக நம்பப்பட்டு வந்த நிலையில், “இல்லை, அனைத்து உயிரினங்களும் இயற்கை நடைமுறையின் ஒரு பகுதியாகப் பரிணாம வளர்ச்சியில் உருவானவை” என்பதை அறிவியல் ஆதாரங்களுடன் டார்வின் நிறுவினார். அதற்காக இன்றுவரை தூற்றப்பட்டு வருகிறார். அறிவியல் உலகின் இரண்டாவது புரட்சி என்று டார்வின் பரிணாமவியல் தத்துவத்தைக் கூறலாம்.

பூவுலகில் உயிரும் மனித இனமும் எங்கிருந்து வந்தன என்ற அடிப்படைக் கேள்விக்கான விடையை, பரிணாம வளர்ச்சிக் கொள்கை சொல்கிறது. சரி, பரிணாம வளர்ச்சிக் கொள்கையின் அடிப்படைக் கோட்பாடுகள் என்ன?

பரிணாம வளர்ச்சிக் கொள்கை மிகவும் எளிமையானது. அது வலியுறுத்தும் 3 முக்கிய அம்சங்கள்:

ஓர் உயிரினத்தின் மரபணு, திடீர் மாற்றம் அடைவதற்கு வாய்ப்பு உண்டு. ஓர் உயிரினத்தின் மரபணுவில் ஏற்படும் இந்த திடீர் மாற்றம், அதனுடைய வாரிசின் மீது தாக்கம் செலுத்துகிறது. உடனடியாகவோ அல்லது பல தலைமுறைகளுக்குப் பிறகோ இந்த தாக்கங்கள் நிகழலாம்.

ஒரு திடீர் மாற்றம் நல்ல விளைவையும் ஏற்படுத்தலாம், தீமையான விளைவையும் ஏற்படுத்தலாம். எந்தத் தாக்கமும் இல்லாமலும் போகலாம். அந்த மாற்றம் தீமையானதாக இருக்கும் பட்சத்தில், ஓர் உயிரினத்தின் வாரிசு தொடர்ந்து வாழ்வதோ, இனப் பெருக்கம் செய்வதோ சாத்தியமில்லை. அதே நேரம், திடீர் மாற்றம் நல்ல விளைவைத் தரும் பட்சத்தில், மாற்றம் அடைந்த வாரிசு, மற்ற வாரிசுகளைவிடச் சிறந்த ஒன்றாக இருக்கும். அதனால், அதிக இனப்

(4 ஆம் பக்கம்)

# ‘ஆனந்த விகடனு’க்கு பெரியார் பேட்டி

## “எங்க வூட்டு மோர், எங்க வூட்டு தண்ணீரை சுத்தப்படுத்திடுமா?”

*மறைந்த பத்திரிகையாளர் சாவி, தந்தை பெரியாரை திருச்சி பெரியார் மாளிகையில் சந்தித்து எடுத்த இந்தப் பேட்டி, 4.4.1965 ‘ஆனந்த விகடன்’ இதழில் வெளி வந்துள்ளது. அப்பேட்டியை மீண்டும் 15.1.2014 இல் அந்த ஏடு மறு வெளியீடு செய்துள்ளது. பல்வேறு வரலாற்றுத் தகவல்கள் அடங்கிய அந்த சந்திப்பை ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ பதிவு செய்கிறது.*

திருச்சி பெரியார் மாளிகைக்குள் காலடி எடுத்து வைக்கும்போதே, எங்கள் பார்வையில் பட்ட கறுப்புச் சட்டை இளைஞர், “ஐயா, உள்ளேதான் இருக்கார். நீங்க வரப்போறீங்கன்னு சொல்லியிருக்கேன். உள்ளே போங்க” என்று புன்சிரிப்போடு வழி காட்டுகிறார்.

உள்ளே... கட்டிலின் மீது சம்மணமிட்டு அமர்ந்திருந்த பெரியாரைப் பார்த்ததும், ‘வணக்கம் ஐயா!’ என்று கும்பிடுகிறோம்.

“வாங்க... வாங்க... ரொம்ப சந்தோசம்...” எங்களை மிக்க மகிழ்ச்சியுடன் வரவேற்றபடியே, “இப்படி உட்காருங்க” என்கிறார்.

சாதாரண வெள்ளைப் பனியன். நாலு முழம் வேட்டி. வயிற்றின் நடுப் பாதியில் வேட்டியின் இரு முனைகளையும் பனியனுக்கு மேல் கட்டியிருக்கிறார். அந்த முனைகள் இரண்டும் அவ்வப்போது தளர்ந்துபோகும் நேரங்களில் கைகள் தாமாகவே அவற்றை இறுக்கி விடுகின்றன. நாய் ஒன்று வீட்டுக்குள்ளேயே குறுக்கும் நெடுக்கும் அலைகிறது. சிற்சில சமயங்களில் பலமாகக் குரைத்து வீட்டையே அதிர வைக்கிறது. பெரியாரின் பேச்சு எதனாலும் தடைபடவே இல்லை.

**“ஆனந்த விகடன் பத்திரிகையிலிருந்து வந்திருக்கோம்.”**

“தெரியுமே. வாசன் அவங்களை எனக்கு ரொம்பக் காலமாகத் தெரியும். நான் ‘குடிஅரசு’ பத்திரிகை ஆரம்பிச்ச காலத்திலே அடிக்கடி சந்திச்சுக்குவோம். ‘கல்கி’ கிருஷ்ணமூர்த்தியும் என்கிட்டேதான் கதர் போர்டிலே கிளார்க்கா இருந்தார். ரொம்ப யோக்யமானவரு. கதர் போர்டு ஆட்டம் கொடுத்ததும், நான்தான் திரு.வி.க.வுக்கு கடுதாசி கொடுத்தனுப்பிச்சேன். ‘நவசக்தி’யிலே சேர்ந்து கொஞ்ச நாளைக்கு வேலை செஞ்சாரு. அப்புறம்தான் விகடன்லே சேர்ந்துட்டார்.”

**“ராஜாஜியோடு தங்களுக்குப் பழக்கம் ஏற்பட்டது எப்போது?”**

“அதுவா? அந்தக் காலத்துலே ஈரோட்லே பி.வி. நரசிம்மய்யர்னு எனக்கு ரொம்ப வேண்டிய வக்கீல் ஒருத்தர் இருந்தார். ஈரோட்லே நான் சேர்மனா இருந்தப்போ, குடியானவங்க வழக்கெல்லாம் என்கிட்டே நிறைய வரும். அந்த கேஸ் எல்லாம் அவருக்கு அனுப்புவேன். யாருக்கு? நரசிம்மய்யருக்கு. நான் சேர்மனா வர்றது சில பேருக்குப் பிடிக்கலே. பொறாமையினாலே எம் பேரிலே கலெக்டருக்கு பெட்டிஷன் எழுதிப் போட்டாங்க. சேர்மன் பதவின்னா இப்ப மாதிரி எலெக்‌ஷன்ல ஜெயிச்சதும் நேராப் போயி சேர்ல உட்கார்ந்துட முடியாது. கலெக்டர் சிபாரிசு செய்யணும்னு வெச்சிருந்தாங்க. அந்தச் சமயத்துலே சர். பி.ராஜகோபாலாச்சாரிங்கிறவர் சப்-கலெக்டரா இருந்தார். அவருக்கு என்னைப் பத்தி நல்லாத் தெரியுமானதாலே, பெட்டிஷனைப் பொய்னு தள்ளிட்டு என்னை சேர்மனாக்கிவிட்டார்.”

**“ஆமாம். அந்த மாதிரி உங்களைப் பற்றித் தவறா பெட்டிஷன் எழுதிப் போட்ட ஆசாமி யார்?”**

“சீனிவாச முதலின்னு ஒரு வக்கீல். ஒரு நான் பிராமின் வக்கீலாயிருக்காரே, முன்னுக்குக் கொண்டாருவோம்னு நான்தான் அவரை முன்னுக்குக் கொண்டுவந்தேன். ஆனால், அவரே என் பேரில் பெட்டிஷன் கொண்டு வந்தார். அப்ப ராஜகோபாலாச்சாரி சேலத்துலே வக்கீல். கெட்டிக்கார வக்கீல்னு சொல்வாங்க. அதனாலே என்கிட்டே வர்ற கேஸெல்லாம் அவருக்கு அனுப்பி வைப்பேன். அந்தப் பழக்கத்துலே அவர் வரப்போக இருந்தாரு. எங்க வூட்டுக்கு அடிக்கடி வருவார். அவரும் அப்ப சேலத்துலே சேர்மன்.”

**“எந்த வருஷம் அது?”**

“தொள்ளாயிரத்துப் பத்தொன்பதுனு ஞாபகம்...”

**“வரதராஜுலு நாயுடு கேஸ் சம்பந்தமா அவர் மதுரைக்குப் போறப்ப நீங்களும் கூடப் போறது உண்டு இல்லையா?”**

“ஆமா; போயிருக்கேன். ‘நீ சேர்மன் பதவியை விட்டுட்டு காங்கிரஸ்ல சேர்ந்துடு. நானும் விட்டுடறேன். ரெண்டு பேரும் சேர்ந்து பொதுப் பணி செய்யலாம்’னார். வரதராஜுலு நாயுடுவும் வற்புறுத்தினார். சரின்னு விட்டுட்டேன். அப்ப காங்கிரஸ் சத்தியமூர்த்தி ‘குரூப்’ கையிலே இருந்தது. அமிர்தசரஸ் காங்கிரசின்போது காங்கிரஸ் பிளவுபட்டு ரெண்டு குரூப்பாப் பிரிஞ்சுட்டது. சத்திய மூர்த்தி, ரங்கசாமி ஐயங்கார், திலகர் இவங்க ஒரு ‘குரூப்’... காந்தி, ராஜகோபாலாச்சாரி, டாக்டர் ராஜன் இவங்களெல்லாம் ஒரு ‘குரூப்’’.

நான் காங்கிரஸ்ல சேர்ந்ததே அமிர்தசரஸ் காங்கிரசுக்கு அப்புறம்தான். அதுவரைக்கும் ராஜகோபாலாச்சாரியும் நானும் நண்பர்கள்தான். அப்புறம்தான் சேர்ந்து வேலை செஞ்சோம்.”

**“அதுக்கப்புறம் என்ன ஆச்சு?”**

“எங்க நட்பு வளர்ந்தது. காங்கிரசும் வளர்ந்தது. எங்களுக்குள்ளே ஒற்றுமையாயிருந்தோம். நான் கோவை ஜில்லா காங்கிரஸ் காரியதரிசி. அப்பவெல்லாம் செகரெட்டரி தான்; பிரசிடென்ட் கிடையாது. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி வந்தது. அப்பவும் நான்தான் செகரெட்டரி.”

**“ஆமாம்; ராஜாஜி உங்களை எதுக்கு காங்கிரஸுக்கு இழுத்தார்?”**

“ஐஸ்டிஸ் பார்ட்டிக்கு எதிரா காங்கிரஸ் வளர்றதுக்கு காங்கிரஸ்ல நான் பிராமின்ஸ் இருக்காங்கன்னு காட்டிக்க வேண்டியிருந்தது.

**“உங்களோடு வேறு யாரும் இல்லையா?”**

“இருந்தாங்க... திரு.வி.க.வும் வரதராஜுலு நாயுடுவும் இருந்தாங்க. எங்க மூணு பேரையும்தான் எந்தக் கூட்டத்துலேயும் முதல்லே பேச விடுவாங்க. வரதராஜுலு நாயுடு பேச்சில் வசவு இருக்கும். திரு.வி.க. பேச்சு தித்திப்பா இருக்கும். நல்ல தமிழ் பேசுவார். என் பேச்சில் பாயின்ட் இருக்கும். பாயின்ட்டாப் பேசி கன்வின்ஸ் பண்ணுவேன். நாங்க மூணு பேரும் பேசினப்பறம்தான், சத்தியமூர்த்தி, ராஜகோபாலாச்சாரி எல்லாம் எழுந்து பேசுவாங்க.”

**“இந்த ‘பிராமின்-நான்பிராமின்’ தகராறு முதல் முதல் எப்ப ஏற்பட்டது?”**

“எப்படி வந்தது வினைன்னா - வ.வே.சு. ஐயரால் வந்தது. சேரன்மாதேவியில் ‘நேஷனல் காலேஜ்னு’ ஒண்ணு ஆரம்பிச்சு, வீரர்களை உற்பத்தி செய்யப் போறதாச் சொன்னாங்க. பரத்வாஜ் ஆசிரமமோ என்னவோ அதுக்குப் பேர். அந்த குருகுலத்துக்கு எல்லாரும் ஆதரவு கொடுத்தாங்க. சிங்கப்பூர், மலேயாவில் இருந்தெல்லாம் பணம் வசூல் செஞ்சாங்க. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியிலே யிருந்தும் பணம் கேட்டாங்க. நான் அப்ப தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி செகரெட்டரி. ராஜாஜி ‘நாயக்கரைக் கேளு’ன்னுட்டார். வ.வே.சு. ஐயர் வந்து உட்கார்ந்துக்கிட்டு இருபதாயிரம் வேணும்னார். நான், ‘முதல்லே பத்தாயிரம் இருக்கட்டும், அப்புறம் பார்க்கலாம்னு’ சொன்னேன். ராஜாஜி சரின்னுட்டார்.”

வ.வே.சு. ஐயர் அன்னிக்கு சாயந்திரமே பணம் வேணும்னு அவசரப்படுத்தினார். ஐயாயிரம்தான் கொடுத்தனுப்பிச்சேன்..

**“பத்தாயிரம் இருக்கட்டும்னு சொன்னீங்களே...”**

“ஆமாம்; அப்படித்தான் சொன்னேன். ஆனா, எனக்கென்னவோ சரியாப்படலே. அதனாலே ஐயாயிரம்தான் கொடுத்தேன். நான் சந்தேகப்பட்டதுக்குத் தகுந்தாப்பலேயே காரியம் நடந்துட்டுதே!”

**“என்ன ஆச்சு?”**

“முதல் மந்திரியாயிருந்தாரே ஓ.பி.ஆர். ரெட்டியார்....” (ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார்)

“ஆமாம்...”

“அவர் மகன் அந்தக் குருகுலத்துலே படிச்சுட்டிருந்தான். அடுத்த மாசமே அவன் வந்து கம்ப்ளெய்ன்ட் சொன்னான். ‘என்னடா?’னு கேட்டோம். ‘குருகுலத்துலே பார்ப்பனப் பிள்ளைங்களையும் எங்களையும் வித்தியாசமா நடத்துறாங்க. அவங்களுக்கு இலை போட்டு சாப்பாடு. எங்களுக்கு பிளேட். அவங்களுக்கு உப்புமா. எங்களுக்கு பழைய சோறு. அவங்க உள்ளே படுக்கணும். நாங்க வெளியே படுக்கணும். அவங்களுக்கு ஒரு பிரார்த்தனை. எங்களுக்கு ஒரு பிரார்த்தனை’னான். அவ்வளவுதான். ஜாதி வேற்றுமையை வளர்க்கிற குருகுலத்துக்கு இனி பணம் கிடையாதுன்னுட்டேன். அத்தோடு இந்த சங்கதியைப் பற்றி ராஜகோபாலாச்சாரிக்குத் தெரியப்படுத்தினேன். அவர் உடனே வ.வே.சு. ஐயரைக் கூப்பிட்டு விசாரிச்சாரு. ‘என்ன இது? காலம் என்ன? இதான் தேசியமா? தேசாபிமானமா? கொஞ்சம்கூட நல்லாயில்லேனு கோபிச்சுக்கிட்டார்.”

**“வ.வே.சு. ஐயர் அதுக்கு என்ன சொன்னார்?”**

“என்ன சொன்னாரு! ‘நான் என்ன செய்யட்டும்? குருகுலம் ஆரம்பிச்சிருக்கிற இடம் ஒரு வைதீக சென்டர். அதனாலே அந்த இடத்துல அப்படி நடக்க வேண்டி வந்துட்டுதுனு’ சமாதானம் சொன்னார். அப்ப ரெண்டு ஜாயின்ட் செகரெட்டரிங்க. கே.எஸ். சுப்பிரமணியம்னு கடையத்துக்காரர் ஒருத்தர். அவர் ஒரு செகரெட்டரி. வ.வே.சு. ஐயர், எனக்குத் தெரியாம அவர் கிட்டே போய் இன்னொரு ஐயாயிரத்துக்கு செக்கை வாங்கிட்டுப் போயிட்டார். அதுக்குப் பின்னாலே ஒரு மாசம் கழிச்சுத்தான் இந்த சங்கதி அம்பலத்துக்கு வந்தது.”

**“கடையத்துக்காரர் எப்படி செக் கொடுக்கலாம்?”**

“செகரெட்டரி டு சைன்ங்கிறது ரெசல்யூஷன். கடையத்துக்காரர் ஒரு செகரெட்டரிங்கிறதால, அவர் கிட்டே தந்திரமா கையெழுத்து வாங்கிட்டுப் போயிட்டார்.”

**“அந்தக் கடையத்துக்காரர் இப்போ எங்கே இருக்காரு?”**

“அவரா! அவர் அப்ப எடுத்த ஓட்டம் தான். அப்புறம் எங்கே போனாரோ? ஆசாமி திரும்பி வரலே.”

ராஜாஜிக்கு அப்பவே எல்லாம் புரிஞ்சு போச்சு, கோளாறுன்னு வந்துட்டுதுன்னு. அதுக்கப்புறம் நான் சும்மா இருக்க முடியுமா? அந்த விஷயத்தை ஒரு முக்கியப் போராட்டமா எடுத்துக்கிட்டேன். அதுக்கு சேரன்மாதேவி குருகுலப் போராட்டம்னு பேர். டாக்டர் வரதராஜுலு நாயுடு, திரு.வி.க. இவங்க ரெண்டு பேரும் எனக்கு ஆதரவு கொடுத்தாங்க. வரதராஜுலு நாயுடுவே இந்தப் போராட்டத்தை நடத்தினார். குருகுலம் ஒழிஞ்சது.”

**“ராஜாஜி உங்க போராட்டத்தில் சேர்ந்தாரா?”**

“சொல்லிக்கிட்டு வர்றேனே கேளுங்க... வரதராஜுலு நாயுடு காங்கிரஸ் கொள்கைக்கு விரோதமா வகுப்பு உணர்ச்சியைத் தூண்டுற மாதிரி நடந்துக்கிறார்னு அடுத்த கமிட்டி மீட்டிங்ல ராஜாஜி ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். எனக்கு அது சரியாப்படலே. வோட்டுக்கு விட்டாங்க. ஈக்வல் ஓட்டாச்சு. நான் தலைவன்கிற முறையில் ஒரு வோட்டைப் போட்டு ராஜாஜி தீர்மானத்தைத் தோற்கடிச்சேன். ராஜாஜி ராஜினாமா பண்ணிட்டார். என்.எஸ்.வரதாச்சாரி, சாமிநாதன் சாஸ்திரி, டாக்டர் ராஜன், கே. சந்தானம், ஹாலாஸ்யம் இவங்களெல்லாம் ராஜாஜி பக்கம் சேர்ந்துட்டாங்க. நான், ஓமந்தூர் ராமசாமி செட்டியார், வரதராஜுலு நாயுடு எல்லாம் ஒரு பக்கம். எங்களுக்குள் ஏற்பட்ட கருத்து வேற்றுமை பச்சையா நான் கண்டிக்கிற அளவுக்கு வளர்ந்துட்டுது...”

“க்ளிக்!” போட்டோகிராபர் படமெடுத்துக் கொள்கிறார்.

இந்தச் சமயம் கறுப்புச் சட்டை அணிந்த

(4ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION 12.02.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# பிப்.25இல் மேட்டூரில் இரு பெரும் விழாக்கள்!

**கொள்கை உறவுகளே! தோழமை நெஞ்சங்களே!**

மேட்டூர் பெரியார் இயக்கத்தின் கொள்கைப் பாசறை; தோழர் கொளத்தூர் மணி தலைமையில் சுமார் 40 ஆண்டுகாலமாக நமது சமுதாயத்தின் உரிமைகளுக்காகத் தொடர்ந்து பணியாற்றுகிறோம்! தாங்கள் அறிவீர்கள்.

இது ஒரு தொடர் ஓட்டம். பெரியார் தந்த கொள்கைச் சுடரை ஏந்தி ஓடுகிறோம். திராவிடர் கழகமாக, பெரியார் திராவிடர் கழகமாக - இப்போது திராவிடர் விடுதலைக் கழகமாக பயணம் தொடருகிறது. அண்மைக் காலமாக கடந்து வந்த பாதையின் - சில சுவடுகள் இதோ:

- 2007இல் ஜாதி-தீண்டாமைக்கு எதிராக பரப்புரைப் பயணம். இறுதியில் தீண்டாமையை அடையாளப்படுத்தும் தேனீர்க் கடை இரட்டைக் குவளைகளை உடைத்து - கைது.
- 2010இல் இரட்டை சுடுகாடுகளை இடிக்கும் போராட்டம் - கைது.
- 2012இல் ஜாதிய வாழ்வியலை எதிர்த்து ஊர்-சேரி பிரிவினைக்கு எதிராகப் பரப்புரைப் பயணம்.
- 2013இல் 40 நாட்கள் சுயமரியாதை சமதர்மப் பரப்புரைப் பயணம். ஜாதி மறுப்புத் திருமணத் தம்பதியினருக்கு கல்வி, வேலை வாய்ப்புகளில் தனி ஒதுக்கீடு கோரியும், நமது தாயகமாம் தமிழகத்தின் தொழில் - இயற்கை வளங்களைச் சுரண்டி வரும் பார்ப்பன-பன்னாட்டு சுரண்டலை எதிர்த்தும் - மக்களிடையே விழிப்புணர்வு பரப்புரை.
- தமிழகத்தில் ஜாதி மறுப்புத் திருமணங்களுக்கு எதிராக தீண்டாமை ஒடுக்குமுறைகளை நியாயப்படுத்த முன் வந்த, ஜாதி வெறி சக்திகளை எதிர்த்துப் போராட்டம், இயக்கம் - தோழர்கள் கைது.
- ஈழத் தமிழர் விடுதலைக்கான தொடர் போராட்டங்கள்; அதற்காக அடக்குமுறை சட்டங்களின் கீழ் கைது; பல மாதங்கள் சிறை வாசம்.
- அரசின் தடைகளைத் தகர்த்து, காவல் நிலையங்களில், அலுவலகங்களில் மதச் சடங்குகளை நடத்துவதற்கு எதிராக நேரடி போராட்டம் - தோழர்கள் கைது.

- இதன் தொடர்ச்சியாய் இப்போது ஜாதி மறுப்புத் திருமணங்களை வலியுறுத்தி, தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிராக சுயமரியாதை - சமதர்ம பரப்புரைக்கான 10 நாட்கள் இரண்டாம் கட்டப் பயணம் தொடங்கியுள்ளோம்.

**மே 25இல் - மேட்டூரில் நிறைவு விழா!**

கழகத்தின் வார ஏடாக 13 ஆண்டுகளாக வெளிவரும் 'புரட்சிப் பெரியார் முழக்கம்' வெளியிட்டுள்ள

**'ஜாதி எதிர்ப்பு' மலர் வெளியீட்டு விழா!**

- ஜாதிக்கு ஆதாரமான மனுசாஸ்திரம் - பார்ப்பனியம் - சமூக அமைப்பு குறித்த ஏராளமான தகவல்கள்; அரிய கட்டுரைகள்; திராவிடர் விடுதலைக் கழகத்தின் தொடர் செயல்பாடுகள்; கழகம் நடத்திய ஈரோடு மாநாட்டு உரைகள் அனைத்தையும் உள்ளடக்கிய ஆவணமாக வெளி வந்திருக்கிறது.

நாட்டில் தேர்தல் களம் சூடுபிடித்து நிற்கிறது. தேர்தல் வரும்; போகும். ஆனால் -

சமுதாயத்தில் ஆழமாக வேர் பிடித்து நிற்கும் நோய்களான ஜாதியம் - மூட நம்பிக்கை - பெண்ணடிமை - பறி போகும் தமிழர் உரிமைகள் - நம்மை இழிவுபடுத்தும் பார்ப்பனிய பண்பாட்டு ஆதிக்கங்களை எதிர்த்துக் களத்தில் நிற்கிறது திராவிடர் விடுதலைக் கழகம்!

எங்களை பெரியார் தத்துவம் மட்டுமே இயக்கிக் கொண்டிருக்கிறது!

**எங்களின் இந்த தொடர் களப்பணிகளுக்கு பலம் - உங்களின் ஆதரவும் -**

**ஆதரவு சக்திகளும் - தோழமை அரவணைப்புமே!**

**நிதி உதவி தாருங்கள்!**

**ஆதரவுக் கரம் நீட்டுங்கள்!**

**நம் தமிழர் சமுதாயத்தின் மான மீட்புப் பணிக்கு உங்கள் பங்களிப்பையும் வழங்கிடுங்கள்!**

**- திராவிடர் விடுதலைக் கழகம்**
**(சேலம் மேற்கு மாவட்டம்)**

---

*(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

*இளைஞர் பெரியசாமி, காபி கொண்டுவந்து எங்கள் முன் வைக்கிறார். நானும் நண்பர் மணியனும் அந்தக் காபியை எடுத்து அருந்துகிறோம்.*

*"சாதி வேற்றுமையெல்லாம் இப்போ ரொம்பக் குறைஞ்சுபோச்சு. முப்பது வருஷங்களுக்கு முன்னாலே பிராமணர்கள் யாராவது உங்க வீட்டில் இந்த மாதிரி வந்து சாப்பிட்டிருக்காங்களா?" - இவ்வாறு நான் கேட்டதும் பெரியார் ஒரு கணம் என்னை உற்றுப் பார்க்கிறார்.*

*"வெங்காயம்! அதுக்கு இத்தனை வருஷமா நான் செய்துக்கிட்டு வர்ற பிரச்சாரம்தான் காரணம். இன்னும் ரொம்ப மாறணும். புத்தனுக்கு அப்புறம் பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்தவன் யாரு? நான் ஒருத்தன் தானே!"*

*உணர்ச்சியுடன் பேசிக் கொண்டிருக்கும் பெரியாரின் கைகள், தளர்ந்துவிட்ட வேட்டியின் முடிகளைத் தாமாகவே இறுக்கிக் கட்டுகின்றன.*

*"அந்தக் காலத்துல எங்க வீட்டுக்கு ஒரு ஐயர் வருவார். எங்க அம்மா ரொம்ப ஆசாரம். ஒருநாள் அந்த ஐயர் தாகத்துக்குத் தண்ணி வேணும்னு கேட்டார். குடுத்தோம். அந்த தண்ணியைக் குடிக்க வேண்டியது தானே? கொஞ்சம் மோர் இருக்குமானு கேட்டார். மோர் கொண்டுவந்து கொடுத்தோம். அந்தத் தண்ணியிலே கொஞ்சம் மோரை ஊத்திக் குடிச்சாரு. அந்த மோர், அந்தத் தண்ணியைச் சுத்தப்படுத்திட்டுதாம். அதெப்படி சுத்தப்படுத்தும்? தண்ணி எங்க வூட்டுது. மோரும் எங்க வூட்டுது. எங்க வூட்டு மோர், எங்க வூட்டுத் தண்ணியைச் சுத்தப்படுத்திடுமா?" - சிரிக்கிறார் பெரியார்.*

**(அடுத்த இதழில்)**

---

*(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

*பெருக்கம் செய்யும். இதன் மூலம், அந்த சாதகமான திடீர் மாற்றம் பரவலாகும். தீமை பயக்கும் திடீர் மாற்றங்கள் நீக்கப்பட்டு, நல்ல மாற்றங்கள் பரவலாவதற்குக் காரணம் இயற்கைத் தேர்வு.*

*சாதாரணமாக ஆயிரக்கணக்கான தலைமுறைகளுக்கு ஒரு முறைதான் திடீர் மாற்றம் நிகழ வாய்ப்பு இருக்கிறது. இனப் பெருக்கத்தின்போது பெற்றோர் இருவரிடமும் விந்தும் சினை முட்டையும் உருவாகும்போது, அவர்களது மரபணுக்களில் உள்ள குரோமோசோம்கள் (அதில்தான் டி.என்.ஏ. இருக்கிறது) பிரிக்கப்பட்டும் உடைக்கப்பட்டும் அவற்றில் சேர்க்கப்படுகின்றன. பிறகு அந்த விந்தும், சினைமுட்டையும் கூடும்போது சில மரபணுக்கள் அப்பாவிடம் இருந்தும், சில மரபணுக்கள் அம்மாவிடம் இருந்தும் தான்தோன்றித்தனமாகச் சேர்கின்றன. இதன் காரணமாக வாரிசுக்கு வித்தியாசமான இணை மரபணுக்கள் தோன்றியிருக்கும்.*

*இப்படி இணை மரபணுக்கள் உருவாகும்போது திடீர் மாற்றங்கள் நீண்ட காலத்துக்கு நிகழ்ந்து, அது தொடர்ந்து கொண்டே இருந்தால், அதன் மூலம் புதிய உயிரினவகை தோன்றும். கோடிக்கணக்கான ஆண்டுகளில் நிகழ்ந்த திடீர் மாற்றங்கள், இயற்கைத் தேர்வு ஆகிய இரண்டு நடைமுறைகளும், பூமியில் இன்றைக்கு நாம் பார்த்துக் கொண்டிருக்கும் உயிரினங்கள் அனைத்தையும் உருவாக்கியுள்ளன. மிகவும் சிறிய நுண்ணுயிரியான பாக்டீரியா முதல் மனிதர்கள் வரை, நம்மைச் சுற்றியுள்ள அனைத்தும் இதில் அடக்கம்.*

*மரபணுக்களில் திடீர் நிகழ்வதற்கான காரணம் என்ன? ஓர் உயிரினம் வாழும் சுற்றுச் சூழலில் உணவு, வாழிடம், இயற்கை நிகழ்வுகள் போன்ற பல்வேறு நெருக்கடிகள் இதில் தாக்கம் செலுத்துகின்றன. இந்த புற நெருக்கடிகளால்தான் திடீர் மாற்றம் தூண்டிவிடப்படுகிறது. அதுவே மரபணு மாற்றத்துக்கு வித்திட்டு, பிறகு இயற்கைத் தேர்வுக்கு இட்டுச் சென்று தனி உயிரின வகைகளையும் துணை உயிரின வகைகளையும் உருவாக்குகிறது. இதற்கு எடுத்துக்காட்டாக, காக்கை குடும்பத்தைச் சேர்ந்த காட்டில் வாழும் அண்டங்காக்கையையும், நகரத்தில் நாம் பார்க்கும் சாதாரண காக்கையையும் குறிப்பிடலாம்.*


*எல்லாம் சரி, உலகில் முதல் உயிர் தோன்றியது எப்படி?*

*பரிணாமவியல் கொள்கையின்படி, கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன், வேதிப் பொருட்கள் தான்தோன்றித்தனமாகச் சேர்ந்ததால், தன்னையே பிரதி செய்துகொள்ளும் மூலக் கூறுகள் முதலில் உருவாகின. அவையே பின்னர் நுண்ணுயிரிகளாக உருமாறின. உயிரின் இந்தச் சிறு பொறிதான், இன்றைக்கு நாம் பார்த்துக் கொண்டிருக்கும் அனைத்து உயிரினங்களுக்குமான கவிதை.*

**'தி இந்து'**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 13th February 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | பிப்ரவரி 20, 2014 | புரட்சி 13 | முழக்கம் 06 | விலை: ரூ.3.00


## தமிழக அரசின் அத்துமீறல்களுக்கு துணை போகும் ‘அறிவுரைக் குழுமம்’: கழகத் தலைவர் கொளத்தூர் மணி கடும் கண்டனம்

# சேலம் சிறை வாசலில் உற்சாக வரவேற்பு

***தேசிய பாதுகாப்புச் சட்டம் போன்ற அடக்குமுறை சட்டங்களை இனி எவர் மீதும் பயன் படுத்தக் கூடாது என்று சேலம் சிறையிலிருந்து விடுதலையானவுடன் சிறைவாசலில் அளித்த பேட்டியில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி வலியுறுத்தினார்.***



இந்தச் சட்டங்கள் முறைகேடாகவே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. முறையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதா என்று கண்காணிப்பதற்காக ஓய்வு பெற்ற நீதிபதிகளைக் கொண்ட ‘அறிவுரைக் குழுமம்’ ஒன்று செயல்படுகிறது. அந்த குழுமம் கண்காணிப்பு வேலை செய்யாமல் கண்களை மூடிக் கொண்டே ஆட்சியாளர்கள் முறைகேடாக பயன்படுத்தும் அடக்குமுறை சட்டங்களுக்கு ஒப்புதல் வழங்குவது ஜனநாயகத்துக்கே அவமானம். ஓய்வு பெற்ற மூத்த நீதிபதிகள் இப்படி முறைகேட்டுக்கு துணை போய்க் கொண்டிருக்கும் போது உயர்நீதிமன்றத்தின் இளம் நீதிபதிகள் இந்த அடக்குமுறை சட்டங்கள் முறை கேடாகப் பயன்படுத்துவதை நீக்கம் செய்து விடுகிறார்கள். இதைத் தங்களுக்கு நேர்ந்த அவமானமாகக்கூட இந்த ஓய்வு பெற்ற நீதிபதிகள் கருதிப் பார்க்க மறுப்பது வெட்கக் கேடானது என்றார் கொளத்தூர் மணி. காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது என்று நாங்கள் குரல் கொடுத்தோம்; தொடர்ந்து ஈழ விடுதலைக்கு ஆதரவாகக் குரல் கொடுப்போம் என்றும் கூறினார்.

தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்ட நங்கவள்ளி தோழர்கள், கிருட்டிணன், அருண்குமார், சேலம் அம்பிகாபதி ஆகியோரும் விடுதலையானார்கள். பிப். 15 ஆம் தேதி காலை 9.15 மணியளவில் சிறையிலிருந்து வெளிவந்த தோழர்களை உணர்ச்சி முழக்கமிட்டு ஆடை போர்த்தி தோழர்கள் வரவேற்றனர். விடுதலையாகும் சேதி அறிந்து தமிழகம் முழுதுமிருந்தும் தனி வாகனங்களில் தோழர்கள் திரண்டனர். கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்தரன், பொருளாளர் இரத்தினசாமி, செயலவைத் தலைவர் திருப்பூர் துரைசாமி, பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன், புதுவை மாநில கழகத் தலைவர் லோகு. அய்யப்பன் உள்ளிட்ட கழகப் பொறுப்பாளர்களும், வழக்கறிஞர் அருண், திருமூர்த்தி, ஆனந்தராஜ், மாயன், கவுதம பூபாலன் மற்றும் ம.தி.மு.க. தோழர்களும் தமிழகம் முழுதுமிருந்தும் நூற்றுக்கணக்கில் கழகத் தோழர்களும் சேலத்தில் குவிந்தனர்.

120 வாகனங்கள் அணி வகுக்க, பறை இசை ஒலிக்க, ஊர்வலமாகப் புறப்பட்டு, புரட்சியாளர் அம்பேத்கர் சிலைக்கும் தந்தை பெரியார் சிலைக்கும் கழகத் தலைவர், விடுதலையான தோழர்கள் மாலை அணிவித்தனர். அங்கிருந்து வாகனப் பேரணியாக ம.தி.மு.க. வழக்கறிஞர் ஆனந்தராஜ் இல்லம் சென்றனர். ம.தி.மு.க.வைச் சார்ந்த வழக்கறிஞர் ஆனந்த ராஜ், கழகத் தலைவர் கைதான நாளிலிருந்து விடுதலை பெறும் வரை ஒவ்வொரு நாளும் சந்தித்து வழக்கு தொடர்பாக கடுமையாக செயல்பட்ட தோழர் ஆவார். அண்மையில் வழக்கறிஞர் ஆனந்தராஜ் தந்தை மரணமடைந்துள்ள நிலையில் அவரது இல்லம் சென்று ஆனந்தராஜ் மற்றும் குடும்பத்தினருக்கு தோழர்களுடன் கழகத் தலைவர் ஆறுதல் கூறினார்.

தொடர்ந்து கைது செய்யப்பட்ட தோழர்கள் நங்கவள்ளி அருண்குமார், கிருட்டிணன், சேலம் அம்பிகாபதி அவர்களின் இல்லத்துக்குச் சென்று, அவர்களின் குடும்பத்தினரிடம் தோழர்களை ஒப்படைத்தனர். குடும்பத்தினர் கழகத்தினரை அன்புடன் வரவேற்றனர். ஆதரவாளர்கள், தோழர்கள் தந்த வரவேற்பையேற்று பிற்பகல் 4 மணியளவில் கழகத் தலைவர், தோழர்கள் வந்த வாகனங்கள் அணிவகுப்பாக மேட்டூர் வந்து சேர்ந்தன.



மேட்டூர் பெரியார் படிப்பகத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணிக்கு எழுச்சியான வரவேற்பு அளிக்கப்பட்டது. பிற்பகல் 4 மணியளவில் மேட்டூர் நகராட்சி திருமண மண்டபத்தில் தோழர்கள் அனைவருக்கும் தோழர்கள் உணவு ஏற்பாடு செய்திருந்தனர். மயிலாடுதுறை, மன்னார்குடி, புதுவை, கிருட்டிணகிரி, ஈரோடு, கோபி, திருப்பூர், கோவை, சேலம், மேட்டூர், சென்னை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலிருந்து தோழர்கள் திரண்டு வந்து வரவேற்ற காட்சி உணர்ச்சிமயமாக இருந்தது.

**– நமது செய்தியாளர்**

## பரப்புரைப் பயணம் தொடங்கியது

இரண்டாம் கட்ட சுயமரியாதை சமதர்மப் பரப்புரைப் பயணம் - ‘அகமணமுறையை ஒழிப்போம்’ என்ற முழக்கத்தை முன் வைத்து 16.2.2014 பிற்பகல் 3 மணியளவில் காரைக்குடி பழைய பேருந்து நிலையம் அருகிலிருந்து தொடங்கியது. செயலவைத் தலைவர் திருப்பூர் துரைசாமி பயணத்தைத் தொடங்கி வைக்க, பேராசிரியர் அரசு. முருகானந்தம், உறவு பாலா வாழ்த்திப் பேசினர். 5 பெண்கள் உள்பட 25 தோழர்களுடன் பயணம் புறப்பட்டது. பொள்ளாச்சி விஜயராகவன் - பேச்சாளர், வீதி நாடகக் குழுவினர், வீதி நாடகம், கலை நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றார்கள்.

### கழகத் தலைவர் – தோழர்கள் மீதான

# தேசியப் பாதுகாப்புச் சட்டத்தை உயர்நீதிமன்றம் ரத்து செய்தது

கழகத் தலைவர் கொளத்தூர் மணி மற்றும் கழகத் தோழர்கள் அருண்குமார், அம்பிகாபதி, கிருட்டிணன் ஆகியோர் மீது தமிழக அரசு பொய்யாக போட்டிருந்த தேசிய பாதுகாப்புச் சட்டத்தை சென்னை உயர்நீதிமன்றம் 13.2.2014 அன்று ரத்து செய்தது. இது தொடர்பான விசாரணை உயர்நீதிமன்ற நீதிதிகள் இராஜேசுவரன், பிரகாஷ் ஆகியோர் அடங்கிய அமர்வுக்கு முன் பிப்.12 ஆம் தேதி வந்தது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி சார்பில் மூத்த வழக்கறிஞர் வைகை வாதிட்டார்.

அவர் தனது வாதத்தில், “பொது ஒழுங்கு சீர்குலைவு நடக்கும்போது மட்டுமே தேசியப் பாதுகாப்புச் சட்டத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று சட்டம் தெளிவாகக் கூறுகிறது. இந்த வழக்கில் அப்படி எந்த சீர்குலைவும் நடைபெறாதபோது சட்டம் முறை கேடாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒரு மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு சீர்குலைவு என்பது வேறு; பொது ஒழுங்கு சீர்குலைவு என்பது வேறு. காவல்துறையின் குற்றச்சாட்டில்கூட பொது ஒழுங்கு சீர்குலைந்திருக் கிறது என்ற எந்தக் குறிப்பும் இல்லை. குற்றம் சாட்டப் பட்டவர்கள் பிணையில் வெளிவந்து விடக் கூடாது என்பதற்காக தேசியப் பாதுகாப்புச் சட்டம் பயன்படுத்தப்பட்டதாக காவல்துறை கூறுவது சட்ட மீறலாகும். இந்த நோக்கத்தில் தேசியப் பாதுகாப்புச் சட்டங்களைப் பயன்படுத்தக் கூடாது என்று ஏற்கனவே பல தீர்ப்புகளில் உச்சநீதிமன்றம் கூறியுள்ளது. வருமான வரித் துறை அலுவலகத்தில் விடியற்காலை 4 மணிக்கு ஒரு சாக்குப் பைக்கு நெருப்பூட்டி வளாகத்துக்குள் வீசி எறிந்ததாக சொல்லப்படுகிறது. இந்தச் செயலால் எந்த சேதமும் ஏற்படவில்லை. காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா பங்கேற்கக்கூடாது என்று எதிர்ப்பைத் தெரிவிக்கவே இந்தப் போராட்டம் நடந்திருக்கிறது. அந்த காமன்வெல்த் மாநாடும் நடந்து முடிந்துவிட்டது. அதற்குப் பிறகும் 3 மாத காலத்துக்கும் மேலாக சிறையில் அடைத்து வைத்திருப்பதில் எந்த நியாயமும் இல்லை. இது தனிமனித சுதந்திரத்தைப் பறிக்கும் சட்ட விரோதமான காவல்” என்று வாதிட்டார். வழக்கறிஞர் வைகை, பல்வேறு உச்சநீதிமன்றத் தீர்ப்புகளை சுட்டிக்காட்டினார்.

அன்றைய நாளில் நீதிமன்ற அலுவலக நேரம் முடிந்து விட்டதால், அடுத்த நாள் பிப்.13 அன்று வழக்கை நீதிபதிகள் தள்ளி வைத்தனர். பிப்.13 அன்று வழக்கறிஞர் வைகை முன் வைத்த வாதங்களுக்கு மறுப்பு வாதங்களை எழுத்துப்பூர்வமாக அரசு சார்பில் தாக்கல் செய்யப் பட்டது. அந்த மறுப்பு வாதங்களுக்கு விரிவாக பதிலளித்து, வைகை இரண்டாவது நாளாக வாதிட்டார்.

தொடர்ந்து கழகத் தோழர்கள் மூவருக்கும் வழக்கறிஞர் திருமூர்த்தி வாதிட்டார். அவர் தனது வாதத்தில், “தற்போது கைது செய்யப்பட்ட தோழர்களை அக்.30, 31 தேதிகளில் காவல்துறை அழைத்து விசாரணை நடத்தியது. இந்தத் தோழர்கள் சேலம் வருமான வரித் துறை அலுவலக வளாகத்தில் சாக்குப் பைக்கு நெருப்பு வைத்து வீசியதை 30ஆம் தேதியே நேரில் பார்த்த சாட்சிகளை காவல்துறை பதிவு செய்துள்ளது. அது உண்மையானால், 30 ஆம் தேதியே அவர்களை கைது செய்யாமல் அனுப்பிவிட்டு, அடுத்த நாள் வரச் சொல்லி விசாரணை நடத்த வேண்டிய அவசியமென்ன? இதிலிருந்தே பொய்யாக இந்த வழக்கைப் புனைய வேண்டும் என்று, முடிவெடுத்துச் செயல்பட் டுள்ளார்கள் என்பது உறுதியாகிறது.

பிணையில் வெளியே வராமல் தடுப்பதற்கே தேசிய பாதுகாப்புச் சட்டத்தைப் பயன்படுத்தியதாகக் கூறும் காவல்துறை, ஒரு வழக்கையும் சுட்டிக் காட்டியுள்ளது. இதில் 2013இல் குற்றச்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்ட ஒருவர், 2009இல் பிணையில் சென்றுவிட்டதாக காவல்துறை கூறுகிறது. 2013இல் கைது செய்யப்பட்ட ஒருவர், அதற்கு 4 ஆண்டுகளுக்கு முன்பே பிணை வாங்கிவிட்டார் என்று கூறுவது விசித்திரமாக உள்ளது. காவல்துறை கவனத்தை செலுத்தாமலே பொய்யாக வழக்கை நடத்துகிறது என்பதற்கு இது சான்று” என்று வாதிட்டார்.

இதைக் கேட்ட நீதிபதிகள் சிரித்து விட்டனர். அரசு வழக்கறிஞரைப் பார்த்து, இதற்கு என்ன பதில் கூறப் போகிறீர்கள் என்று நீதிபதிகள் கேட்க, வழக்கறிஞர் ‘அச்சுப் பிழை’ நேர்ந்துவிட்டது என்று கூறினார். தொடர்ந்து நீதிபதி பிரகாஷ், மற்றொரு கேள்வியை எழுப்பினார். சம்பவத்தை நேரில் பார்த்ததாகக் கூறும் காவல்துறையின் சாட்சிக்காரர், சாக்குப் பைக்கு நெருப்பு வைத்து வீசியதை நேரில் பார்த்தேன்; பார்த்துவிட்டு ஒரு டீ கடைக்கு டீ குடிக்கப் போய்விட்டேன் என்கிறார். பொது ஒழுங்கு சீர்குலைந்து போய்விட்டதாகக் கூறப்படும் கடுமையான குற்றச்சாட்டில் காவல்துறை யின் சாட்சியே சம்பவத்தை நேரில் பார்த்துவிட்டு பதட்டமே இல்லாமல், டீ குடிக்கப் போய்விட்டதாகக் கூறுகிறாரே என்று நீதிபதி கேட்டார்.

நீதிமன்றத்தில் மீண்டும் சிரிப்பொலி! அரசு தரப்பு வாதங்களை ஏற்கவியலாது என்று கூறிய நீதிபதிகள், தேசப் பாதுகாப்புச் சட்டத்தை நீக்கம் செய்து உத்தர விட்டனர். இதைத் தொடர்ந்து கழக வழக்கறிஞர்கள் திருமூர்த்தி, அருண் ஆகியோர் துரிதமாக செயல்பட்டு அன்று மாலையே உயர்நீதிமன்ற ஆணையைப் பெற்று கழகத் தோழர் வழியாக சேலம் அனுப்பி வைத்தனர்.

இந்த வழக்கில் சேலம் நீதிமன்றத்தில் பிணை கோரும் மனு பிப்.18 ஆம் தேதி அன்று விசாரணைக்கு வர இருந்தது. உயர்நீதிமன்றம் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தை பிப்.13 ஆம் தேதியே நீக்கம் செய்து விட்டதால், முன்கூட்டிய விசாரிப்பு மனு ஒன்று அவசரமாக 14.2.2014 அன்று தாக்கல் செய்யப்பட்டது. மூத்த வழக்கறிஞர் ப.பா.மோகன், வழக்கறிஞர் கவுதம பூபாலன் ஆகியோர் தோழர்களுக்காக வாதிட்டனர். நீதிமன்றம் பிணை வழங்கி உத்தரவிட்டது. ம.தி.மு.க. மாநகர பொறுப்பாளர் வழக்குரைஞர் ஆனந்தராஜ், மனித உரிமை பாதுகாப்பு மய்ய வழக்குரைஞர் மாயன் ஆகியோர் வழக்கிற்கான ஏற்பாடுகளை செய்தனர். 15.2.2014 சனி காலை 9.15 மணியளவில் கழகத் தலைவரும் தோழர்களும் சிறையிலிருந்து விடுதலையானார்கள். ஈழத் தமிழர்ப் பிரச்சினைக்காக 2013 அக்டோபர் 2இல் கைது செய்யப்பட்ட தோழர்கள், 2014, பிப்.14 அன்று விடுதலையானார்கள்.

## போர்க்குற்றம்: சர்வதேச விசாரணை கோரிக்கை வலுக்கிறது

இலங்கையில் இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இடையே 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற இறுதிக்கட்டப் போரின்போது நிகழ்ந்த போர்க் குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்த வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் நவநீதம் பிள்ளை வலியுறுத்தி உள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் நவநீதம் பிள்ளை, 74 பக்கங்கள் கொண்ட அறிக்கையை ஐ.நா. தலைமையகத்துக்கு அனுப்பியுள்ளார். அதில், இலங்கையில் நடைபெற்ற இறுதிக்கட்டப் போரின்போது நிகழ்ந்த சர்வதேச மனித உரிமை மீறல்கள் மற்றும் மனிதாபிமானச் சட்ட மீறல்கள் தொடர்பாக ஐ.நா. சர்வதேச அளவிலான விசாதணை நடத்த வேண்டும். இது தொடர்பாக இலங்கை அரசு நடத்தி வரும் உள்நாட்டு விசாரணையையும் கண்காணிக்க வேண்டும். இலங்கையில் தீவிரவாத தடுப்புச் சட்டம் என்ற பெயரில் அப்பாவித் தமிழர்கள் துன்புறுத்தப்படுவதைத் தடுக்க அச்சட்டத்தை வாபஸ் பெறச் செய்ய வேண்டும்.

காணாமல் போனவர்களைப் பற்றியும், தேடப்பட்டு வரும் குற்றவாளிகள் எனக் கூறப்படுபவர்கள் பற்றியும் சிறுபான்மையினர் மீதான தாக்குதல்கள் பற்றியும் விசாரணை நடத்த வேண்டும் என்று நவநீதம் பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

## வினாக்கள்... விடைகள்...!

- ஜெயலலிதா பிரதமரானால், திருப்பதி ஏழுமலையானுக்கு 2000 பேர் முடிகாணிக்கை செலுத்துவது என்று, வேலூர் மாவட்ட அ.இ.அ.தி.மு.க. மாநகர மாணவரணி முடிவு செய் துள்ளது. **– செய்தி**

அதுவும் சரிதான்! ஏழுமலையானுக்கு லஞ்சம் கொடுத்தால்தானே ஊழலற்ற ஆட்சி அமைக்க முடியும்?

- லக்னோவில் மோடிக்கு சிலை எழுப்பி, நாள்தோறும் ஆராதனை நடக்கிறது. **– ‘தினமலர்’ செய்தி**

அப்படியே அந்த சிலையை அயோத்திக்குக் கொண்டு போய், அங்கே கோயில் கட்டிடலாமே! ‘ராமனுக்கு’. எல்லாம் தேர்தல் முடிஞ்சு பாத்துக்கலாம்!

- தேர்தலுக்கு பா.ஜ.க. ஊடக விளம்பரங்களுக்கு ரூ.400 கோடி செலவிடுகிறது, பிரபல விளம்பர நிறுவனங்கள் கவர்ச்சியான விளம் பரங்களை வடிவமைக்க உள்ளன. **– ‘தினமலர்’ செய்தி**

அதில் ஸ்ரீராமபிரான், சீதை, அனுமார், சுப்ரமணியசாமி எல்லாம் வருவார்களா?

- ஏழுமலையானுக்கு பக்தர்கள் ‘பட்டு வஸ்திர’ காணிக்கையை இடைத்தரகர் மூலம் வழங்க வேண்டாம். தரமில்லாத பட்டாக இருக்கிறது. இனி பக்தர்கள் பகவானுக்கு நேரடியாகவே வழங்க லாம். **– தேவஸ்தானம் அறிவிப்பு**

அதேபோல் மூலஸ்தானத்திலும் இடைத்தரகர்களை ஒழித்து, பக்தர்களுக்கு பகவானிட மிருந்து நேரடியான – தரமான ‘தரிசனம்’ கிடைக்க ஏற்பாடு செஞ்சிடுங்க!

- திருப்பதி கோயிலுக்கு விதிக்கப்பட்ட ‘சேவை’ வரியை நீதிமன்றம் ரத்து செய்தது. **– செய்தி**

அதாவது, எந்த ‘சேவை’யும் செய்யாத கடவுளுக்கு சேவை வரி விதிப்பது நியாயம் தானா என்று நீதிமன்றம் கேட்கிறது! சபாஷ்! சரியான தீர்ப்பு!

- நாடாளுமன்றத்தில் மிளகுப் பொடி தூவிய ஆந்திர காங்கிரஸ் நாடாளு மன்ற உறுப்பினர் மீது உரிமைக் குழு விசாரணை நடத்தும். **– செய்தி**

கவனம்; உரிமைக் குழுவுல ஆந்திர மிளகாய்ப் பொடியை தூவிடப் போறாரு!

- நாடாளுமன்றத்தில் போட்டியிடும் வேட்பாளர்களிடம் கட்சித் தலைவர்கள் நேர்முகம் தொடங்கியது. **– செய்தி**

‘நானடிச்சா தூங்க மாட்ட; வீடு போய் சேர மாட்ட’ என்ற பாடலை கருத்தில் கொண்டு கவனமாக ‘பலசாலி’களை தேர்வு செஞ்சு, ஜனநாயகத்தைக் காப்பாத்துங்க.

- பெண்களுக்கு முன்னுரிமை அளித்தால் மட்டுமே வளர்ச்சி சாத்தியமாகும். **– ராகுல் பேச்சு**

வந்துட்டாரய்யா.... ‘எல்.கே.ஜி.’ வாத்தியாரு!

- அரிசிக்கு சேவை வரி விதித்த ப.சிதம்பரத்துக்கு கண்டனம். **– செய்தி**

இப்படி கண்டிச்சா, சிதம்பரம் கண்டிக்கிறவங்களுக்கு ‘தண்டவரி’ விதிச்சுடுவாரு! ஜாக்கிரதை!

“புரட்சிப் பெரியார் முழக்கம்”

**ஆண்டுக்கட்டணம்**

**ரூ.200**

தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆9941613535

## ‘ஆனந்த விகடனு’க்கு பெரியார் பேட்டி

# “காந்தி எங்க வீட்டுக்கு வந்திருக்கார்!”

*மறைந்த பத்திரிகையாளர் சாவி, தந்தை பெரியாரை திருச்சி பெரியார் மாளிகையில் சந்தித்து எடுத்த இந்தப் பேட்டி, 4.4.1965 ‘ஆனந்த விகடன்’ இதழில் வெளி வந்துள்ளது. அப்பேட்டியை மீண்டும் 15.1.2014 இல் அந்த ஏடு மறு வெளியீடு செய்துள்ளது. பல்வேறு வரலாற்றுத் தகவல்கள் அடங்கிய அந்த சந்திப்பை ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ பதிவு செய்கிறது.* (சென்ற இதழ் தொடர்ச்சி)

“வைக்கம் வீரர்னு உங்களுக்கு எப்படிப் பேர் வந்தது?” - மணியன் கேட்கிறார்

“அதுவா? அது ஒரு கதை... சொல்றேன். நீங்க என்னமோ கேட்டீங்களே என்னது?” என்று என் பக்கமாகத் தலையைச் சாய்த்து காதைக் கைவிரல்களால் அணைத்துக் கேட்கிறார்.

“காந்தியை நீங்க சந்திச்சிருக்கீங்களா?னு கேட்டேன்...” என்கிறேன் நான்.

“எங்க வூட்டுக்கே வந்து தங்கியிருக்காரே. சட்டசபைப் பிரவேசத்துக்கு காங்கிரஸை அவர் அனுமதிச்சபோது நான் ‘கூடாது’னு தடை பண்ணினேன்; எதிர்த்தேன்; வாதாடினேன். அவர் சொன்னார்: “நீ என்ன இப்படிச் சொல்றே? மோதிலால் நேரு, சி.ஆர்.தாஸ் இவங்களையெல்லாம் நினைச்சுப் பாக்கணும். அவங்களையெல்லாம் விட்டுட முடியுமா? உனக்கு வேணாம்னா, பேசாம இருந்துக்கோ”ன்னாரு. ஏன் அப்படிச் சொன்னாருங்கிற ரகசியம் எனக்குத்தான் தெரியும். என்ன ரகசியம்னா, காங்கிரஸ், சட்டசபைக்குப் போகலேன்னா ஜஸ்டிஸ் கட்சியே நிலைச்சு இருந்துடுங்கிற பயம்தான்!”

“அதுக்கப்புறம் நீங்க என்ன செய்தீங்க?”

“சட்டசபைக்குள் போறதா இருந்தா அம்பது பெர்சன்ட் ‘நான் பிராமின்ஸ்’க்கு ஒதுக்கணும்னு ஒரு தீர்மானம் கொண்டு வந்தேன். ‘இதைக் கொள்கையா வேணும்னா வெச்சுக்குவோம். தீர்மானமாப் போட வேண்டாம்னு’ ராஜாஜி கேட்டுக்கிட்டார். 1920இல் திருநெல்வேலி மகாநாட்டிலே வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை வற்புறுத்தி ஒரு தீர்மானம் கொண்டு வந்தேன். அப்ப தலைவராயிருந்த எஸ்.சீனிவாசயங்கார் அதை அனுமதிக்காமத் தடுத்துட்டார். அப்புறம் திருப்பூர்ல, சேலத்துல, திருவண்ணாமலையில எல்லா இடத்துலேயும் தடுத்துட்டாங்க...”

“உங்க தீர்மானத்தை அதோடு விட்டுட்டீங்களா?”

“விட்டுடுவனா? திரு.வி.க.வை காஞ்சீபுரம் மகாநாட்டுக்கு தலைவராகக் கொண்டு வந்தேன். சட்டசபைக்குள் போறதா இருந்தா அம்பது பெர்சன்ட் நான் பிராமின்ஸ்க்கு ஒதுக்கணும்கிற தீர்மானத்தைக் கொண்டு வந்தேன். திரு.வி.க. ‘பாலிசிக்கு விரோதம்னு’ சொல்லி பிரசிடென்ட்டுங்கிற முறையிலே ‘டிஸ் அலவ்’ பண்ணிட்டார். நான் கொண்டு வந்த தீர்மானத்தை நான் கொண்டு வந்த தலைவரே அனுமதிக்க மறுத்துட்டார். எதிரிங்ககிட்டேயிருந்தும் எனக்கு அடி. என் ஆளுகிட்டேயிருந்தும் அடி. ஆக, ரெண்டு பக்கத்திலேருந்தும் அடி.”

“ரொம்பச் சங்கடம்தான்!”

“ஆனாலும் தீர்மானத்தை விட்டுடலே.... ஓபன் மகாநாட்டிலே கொண்டு வர்றதுக்குப் பாடுபட்டேன். ஓபன் மகாநாட்டிலே தீர்மானத்தை எடுத்துக்கணும்னா, அம்பது பேர் கையெழுத்து வேணும்னாரு. அம்பது என்ன? இந்தா எழுபத்தைந்து கையெழுத்துனு சொல்லிக் கையெழுத்தும் வாங்கிட்டுப் போனேன். திரு.வி.க., பயந்து போய் தீர்மானத்தை அனுமதிக்க மறுத்துட்டார். எனக்குக் கோவம் வந்துட்டுது. “முதலியாரே! உங்களை யோக்கியன்னு நினைச்சேன். ‘கையெழுத்து வாங்கிட்டுவா’னு சொல்றப்போ சொந்த புத்தி, இப்ப வேறு புத்தியா?னு கேட்டுட்டு, இப்படித்தான் துண்டை எடுத்து தோள் மேலே போட்டுக்கிட்டு (பக்கத்திலுள்ள டவல் ஒன்றை எடுத்துத் தோள் மீது போட்டுக் கொள்கிறார்) வெளியே நடந்துட்டேன்.

அப்புறம் எல்லாருமாப் பஞ்சாயத்துக்கு வந்தாங்க. காங்கிரஸ்காரங்க போக்கு எனக்குப் பிடிக்கலே. வெளியே வந்துட்டேன். ஆனா, அதுக்கப்புறமும் கொஞ்ச நாளைக்கு காங்கிரஸ்காரனாகத்தான் இருந்தேன். அப்படி இருந்துக்கிட்டே காங்கிரஸை எதிர்த்துப் பிரச்சாரம் பண்ணினேன். காங்கிரஸை எதிர்த்தாலும் ஜஸ்டிஸ் கட்சிக்குச் சாதகமா இல்லே.”

“உத்தியோகம், காலேஜ் அட்மிஷன் இதெல்லாம் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இருப்பது சரினு நினைக்கிறீங்களா? திறமையைப் பார்த்துத் தேர்ந்தெடுத்துக்கட்டுமே...” - மணியன் கேட்கிறார்.

பெரியாருக்குக் கோபம் வந்துவிடுகிறது.

“என்ன திறமை வேண்டியிருக்குது? வெங்காயம்! ஜெயிலுக்குள்ளேயே போய்ப் பாருங்க. ஜாதிக் கணக்குப்படித்தானே அங்கேயும் இருக்காங்க. பார்ப்பன ஜாதி கொஞ்சம் குறைச்சலா இருக்கும். அதுக்குக் காரணம் என்னன்னா, அவன் கொஞ்சம் பயந்தவன். கொலை, கொள்ளைக்குப் போவ மாட்டான். அவ்வளவுதானே? மத்தப்படி ஜாதி விகிதாசாரப்படிதானே ஜெயில்லயும் இருக்காங்க? ஆனபடியாலே சர்க்கார் உத்தியோகம், காலேஜ் அட்மிஷன் இதிலேயும் ஜாதி விகிதாச்சாரம் இருந்துட்டுப் போவட்டுமே...”

“காங்கிரஸை விட்டு விலகினீங்களே... அப்புறம் என்ன ஆச்சு?”

“‘கம்யூனல் ஃபிலிங்’ வளர ஆரம்பிச்சது. சி.என்.முத்துரங்க முதலியார், சி.பி.சுப்பையா, காமராஜ் இவங்களை வெச்சு காங்கிரஸை வளர்த்துட்டாங்க...” சட்டென்று நண்பர் மணியன் பக்கமாகத் திரும்பி, “நீங்க என்னமோ கேட்டீங்களே? ஆமா... வைக்கம் சங்கதி... சொல்றேன், கேளுங்க...” என்றார்.

காலை நாங்கள் பெரியார் மாளிகைக்குள் சென்றபோது மணி ஒன்பதரை இருக்கலாம். அப்போது அவர் கட்டிலின் மீது உட்கார்ந்திருந்தார். எங்களுடன் பேசி முடிக்கும்போது மணி இரண்டு. அந்த இடத்தில் எப்போது உட்கார்ந்தாரோ தெரியாது. எங்களுடன் பேசி முடிக்கும் வரை அப்பால் இப்பால் நகரவில்லை. இடையில் காபி கொண்டு வந்து வைக்கப்பட்டபோதுகூட “ஐயா! காபி ஆறிப் போறது” என்று ஞாபகப்படுத்திய பின்னரே அதை எடுத்து அருந்தினார்.

இதற்குள் நான் இருபது முறை கால்களை மாற்றி போட்டுக் கொண்டேன். பின்பக்கம் சாய்ந்தேன். முன்பக்கம் சாய்ந்தேன். முகத்தை இடது கையினால் தாங்கிக் கொண்டேன். எத்தனைவிதமான கோணங்களில் உட்கார முடியுமோ, அப்படியெல்லாம் மாறி மாறி உட்கார்ந்தேன்.

பத்து நிமிடங்களுக்கு மேல் எந்த இடத்திலும் நிலைத்து உட்கார முடியாதவர் நண்பர் மணியன். அவர் நான்கு முறை எழுந்து நின்றார். இரண்டு முறை டெலிபோனில் பேசிவிட்டு வந்தார். கைகளைச் சொடுக்கினார். கால்களை நீட்டினார். இப்படி ஏதேதோ தேகப் பயிற்சிகள் எல்லாம் செய்து கொண்டிருந்தார். சற்றும் சோர்வின்றி, அலுக்காமல், சலிக்காமல், சளைக்காமல் மணிக்கணக்கில் பேசிக் கொண்டிருந்த பெரியாரின் அதிசய சக்தியைப் பற்றி நான் மனதுக்குள் வியந்து கொண்டிருந்தேன். பெரியார் மீண்டும் பேச்சைத் தொடர்ந்தார்.

“வைக்கம் என்கிற ஊர் கேரளாவிலே இருக்குது. அந்த ஊரிலே ஒரு தெரு வழியா தாழ்த்தப்பட்டவங்க யாரும் நடக்கக் கூடாதுனு ரொம்ப நாளாக் கட்டுப்பாடு. இந்தப் பக்கத்துலே உள்ளவங்க குடிதண்ணீர் கொண்டு வரம்ணும்னா, குறுக்கே உள்ள அந்தத் தெருவைத் தாண்டித்தான் போய் வரணும்.”

“வேற வழி இல்லையா?”

“வேறொரு தெருப் பக்கமாகவும் போகலாம். ஆனால், அது சுத்து வழி. ஜாதிப் பேரால நடக்கிற இந்த அக்கிரமத்தை ஒழிச்சுடணும். தெருவிலே நடந்து போறதுக்கு எல்லாருக்கும் சம உரிமை இருக்கணும்கிறதுதான் போராட்டம். அந்தப் போராட்டத்தை ஜார்ஜ் ஜோசப், நீலகண்ட நம்பூதிரி இவங்கள்லாம் நடத்தினாங்க. திருவாங்கூர் சர்க்கார் அவங்க எல்லோரையும் புடிச்சு ஜெயில்லே போட்டுது. போராட்டம் கலகலத்துப் போச்சு. எனக்கு லெட்டர் போட்டாங்க. யாரு? ஜார்ஜ் ஜோசப்பும் நீலகண்ட நம்பூதிரியும். நீங்க உடனே வைக்கத்துக்கு வந்து போராட்டத்தை ஏற்று நடத்தினால்தான் எங்க மானம் மிஞ்சும். கால தாமதம் செய்யாமல் புறப்பட்டு வரணும்னு ஜெயிலுக்குள்ளேயிருந்து லெட்டர் எழுதி அனுப்பிச்சாங்க.

அப்ப எனக்கு உடம்பு சரியில்லை. ஆனாலும், உடனே புறப்பட்டுப் போய்ப் போராட்டத்தை நடத்தினேன். ரொம்பப் பேர் என்னோடு சேர்ந்து வந்தாங்க. மலையாளத்துக்காரங்களும் வந்தாங்க. தமிழ்நாட்டுக்காரங்களும் வந்தாங்க. போராட்டம் வலுவடைஞ்சுது. நான் ரெண்டு முறை ஜெயிலுக்குப் போனேன். கடைசியிலே சத்தியாக்கிரகம் வெற்றி அடைஞ்சுது. அதோடு அந்தத் தெரு வழியா எல்லோரும் நடக்கலாம்னு ஆயிட்டுது.”

வைக்கத்திலே உள்ள கோயில், கோயிலுக்குப் பக்கத்திலே உள்ள அந்தத் தெரு, குடி தண்ணீருக்குச் சுற்றிக் கொண்டு போக வேண்டிய இன்னொரு வழி இவ்வளவையும் ஒரு காகிதத்தில் ‘பிளான்’ போட்டுக் காட்டுகிறார் பெரியார்.

“இரண்டு முறை எதுக்கு ஜெயிலுக்குப் போனீங்க?” நான் கேட்கிறேன்.”

“முதல் முறை ஒரு மாசம் போட்டாங்க. இருந்துட்டு வெளியே வந்தேன். அப்புரம் கேரளாவுக்குள்ளேயே கால் வைக்கக் கூடாதுனு தடை போட்டாங்க; மீறினேன். மறுபடியும் தண்டனை கொடுத்து திருவாங்கூர் சென்ட்ரல் ஜெயில்ல கொண்டுபோய்ப் போட்டாங்க...”

“அண்ணாதுரை உங்க கட்சியிலே எப்போது சேர்ந்தார்னு சொல்ல முடியுமா?” மணியன் கேட்கிறார்.

“பொப்பிலி ராஜாகிட்டே கணக்கு எழுதிட்டிருந்தாரு. என்கிட்டே வந்தாரு. இருக்கச் சொன்னேன். கூட்டத்துக்கெல்லாம் கூடவே வருவாரு. ஒருநாள் எழுந்து பேசினாரு. இப்படியே பேசிப் பேசித் தலைவனாயிட்டாரு...” (விடுங்க, இப்ப அந்தப் பேச்செல்லாம்’ என்ற பாவனை பெரியார் முகத்தில் தெரிகிறது.)

(அடுத்த இதழில்)

## கழகத் தோழர்களின் புரட்சிகர மணவிழாக்கள்

*பிப்.14 இல் கோவையில்ஜாதி–மத மறுப்பு – காதல் மணம் புரிந்தோர் நலச் சங்கம் நடத்திய காதலர் திருவிழாவில், திராவிடர் விடுதலைக் கழகத் தோழர் விக்னேஷ்–ருக்சானா ஜாதி மத மறுப்புத் திருமணம் நடந்தது. மணமகள் ருக்சானா, முஸ்லிம் மதத்தைச் சார்ந்தவர்.*

*பிப்.16 இல் ‘அந்திமழை’ பதிப்பகம் நடத்திய எழுத்தாளர் பாமரன் நூல் வெளியீட்டு விழாவில், திருப்பூரில் பணியாற்றும் கழகத் தோழர் ம.சிவா–ஜோ. ரஞ்சனா, ஜாதி மறுப்புத் திருமணம் நடைபெற்றது. மணமகள் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்.*

*பொது நிகழ்வுகளில் திருமணத்துக்கான செலவுகள் ஏதுமின்றி, ஜாதி–மத மறுப்புத் திருமணங்களை செய்து கொள்ள திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் ஆர்வம் காட்டுவது பெரியார் கொள்கைக்கு கிடைத்து வரும் வெற்றி; ஜாதி வெறி சக்திகளுக்கு பதிலடி!*

## பொள்ளாச்சி விஜயராகவன் பணி ஓய்வு பெற்றார்

கழகத் மூத்த தோழரும் தலைமை செயற்குழு உறுப்பினருமான பொள்ளாச்சி விஜயராகவன், பொள்ளாச்சி மாநகராட்சிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். கழகத் தலைவர் தோழர்களை வரவேற்க சேலம் வந்து, தான் பணி ஓய்வு பெற்ற செய்தியைக் கூறி கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணிக்கு ஆடை போர்த்தினார். கழக ஏட்டுக்கு ரூ.1000 நன்கொடையை கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரனிடம் வழங்கினார்.

DATE OF PUBLICATION 19.02.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

## ✦ 46 ஜாதி மறுப்பு இணையர்களுக்கு பாராட்டு
## ✦ மேடையில் மதமறுப்பு திருமணம்

# கோவையில் காதலர் திருவிழா





கோவையில் பிப்.14 அன்று காதலர் திருவிழா, காலை தொடங்கி மாலை வரை கலை நிகழ்ச்சிகள், கருத்துரைகளுடன் மகிழ்ச்சியாகக் கொண்டாடப்பட்டது. காந்திபுரம் 'பாத்திமா சர்ச்' கலை அரங்கில் நடந்த இந்த கொண்டாட்ட விழாவை திராவிடர் விடுதலைக் கழகத்தின் முன்னணி அமைப்பான ஜாதி மத எதிர்ப்பு காதல் மணம் புரிந்தோர் நலச் சங்கம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்களுடன், தமிழ்நாடு திரைக் கலைஞர் அனைத்து தொழிலாளர் கூட்டமைப்பைச் சார்ந்த தோழர்களும் தோழியர்களும் பெருமளவில் பங்கேற்று கலைநிகழ்ச்சிகளை வழங்கினர். ஜாதி மறுப்பு மணம் புரிந்த பல இணையர்கள் விழாவில் பங்கேற்றது குறிப்பிடத்தக்கதாகும். பகல் 11.45 மணியளவில் ஜாதி எதிர்ப்பு உறுதி ஏற்புடன் நிகழ்ச்சிகள் தொடங்கின.



'சன்' தொலைக்காட்சி வி.ஜெகன் குழுவினர் பல குரல் நிகழ்ச்சி, கோவை பிரியாவின் கரகாட்டம், நாட்டுப் புற கலைஞர் செந்தில் கிராமிய நிகழ்ச்சி, ரெஜிதாவின் பாடல் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடந்த வாழ்த்தரங்கத்துக்கு கழக மாநகர மாவட்டத் தலைவர் வழக்கறிஞர் பன்னீர்செல்வம் தலைமை தாங்கினார். கழக வெளியீட்டுச் செயலாளர் தமிழ்ச் செல்வி, கா.சு. நாகராசு (த.பெ.தி.க.), வழக்கறிஞர் வெண்மணி (தமிழர் விடுதலை இயக்கம்), சாந்தகுமார் (தோழமை அறக்கட்டளை) ஆகியோர் ஜாதி மறுப்புத் திருமங்களை வலியுறுத்தியும், ஜாதியத்தின் கேடு, தீண்டாமை ஒடுக்குமுறை, பார்ப்பன மனு சாஸ்திரம் திணிக்கும் இழிவுகள் குறித்து உரையாற்றினர். தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் நடந்தன. பிற்பகல் 2 மணியளவில் அனைவரும் பிரியாணி உணவு விருந்து அளிக்கப்பட்டது. தொடர்ந்து 3.30 மணியளவில் கலை நிகழ்ச்சிகளுடன் விழாக் கொண்டாட்டங்கள் தொடங்கின. ஜாதி மறுப்பு மணம் புரிந்த 46 இணையர்களுக்கு கேடயங்கள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியின் நிறைவாக கருத்தரங்கம் நடைபெற்றது. கழகத் தோழர் கிணத்துக்கடவு நிர்மல் வரவேற்புரையாற்றினார். தோழர்கள் சித்ரா, 'மது பானக் கூடம்' திரைப்பட இயக்குநர் கமலக்கண்ணன், திரைப்படப் பாடலாசிரியர் சினேகன், வழக்கறிஞர் கார்க்கி (சமத்துவ முன்னணி), பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆகியோர் உரையாற்றினர். மாவட்ட செயலாளர் வெள்ளமடை நாகராஜ நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்.

நிகழ்ச்சியின் நிறைவில், கழகத் தோழரின் ஜாதி மத மறுப்புத் திருமணம் மேடையில் பலத்த ஆரவாரம் கைதட்டலுடன் நிகழ்ந்தது. கழகச் செயல்வீரர் விக்னேஷ் (கோவை காளியாபுரம் கிட்டுச்சாமி-பாப்பாத்தி மகன்), ருக்சனா (கோவை சிங்கா நல்லூர் நிஜாம்-சைனா ஆகியோரின் மகள்) ஆகியோர் ஜாதி மத மறுப்பு மண விழாவை பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் நடத்தி வைத்தார். மணமக்கள் சார்பில் கழக ஏட்டுக்கு ரூ.2000 நன்கொடை வழங்கப்பட்டது. மாலை 5 மணியளவில் விழா நிகழ்வுகள் நிறைவடைந்தன.



மத மறுப்பு மணவிழா : மேடையில் திரைப்படப் பாடலாசிரியர் சினேகன், 'மதுபானக் கூடம்' திரைப்பட இயக்குனர் கமலக்கண்ணன், பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், மாநகர மாவட்டத் தலைவர் வழக்கறிஞர் பன்னீர் செல்வம்

## நடிகர் சத்தியராஜ் பேச்சு:
## பெரியாரைத் தவிர்த்துவிட்டு எந்த சமூக மாற்றத்தையும் செய்ய முடியாது

'அந்தி மழை' மாத இதழில் எழுத்தாளர் பாமரன் 'சொதப்பல் பக்கம்' என்ற பெயரில் எழுதி வந்த கட்டுரைகளின் தொகுப்பு 'சொதப்பல்' என்ற பெயரில் நூலாக வெளியிடப்பட்டுள்ளது. இதன் வெளியீட்டு நிகழ்ச்சி 16.2.2014 ஞாயிறு மாலை 6 மணியளவில் கோவை ஆர்.எஸ்.புரம் பாரதிய வித்யாபவன் அரங்கில் நடைபெற்றது. நடிகர் சத்தியராஜ், விடுதலை இராசேந்திரன், எழுத்தாளர் அழகிய பெரியவன், 'அந்தி மழை' நிறுவனர் இளங்கோவன் ஆகியோர் உரையாற்றினர். நிர்வாக ஆசிரியர் என். அசோகன் வரவேற்புரை நிகழ்த்தினார். முனைவர் இரா. சுப்பிரமணியன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். பாமரன் ஏற்புரை நிகழ்த்தினார்.


நடிகர் சத்தியராஜ் தமது உரையில் : அடுத்த ஆண்டு தனக்கு 60 ஆம் ஆண்டு திருமணம் நடத்த வேண்டும் என்று குடும்பத்தினரும் நண்பர்களும் தெரிவித்தக் கருத்தை, தான் மறுத்துவிட்டதாகவும், தனது மனைவிக்கு 60 வயது நிறைவு பெறும்போது அதை சுயமரியாதைத் திருமணமாக நடத்துவேன் என்றும் அறிவித்தார். ஆணுக்கு 60 வயது நிறைவு பெற்றால்தான் 60 ஆவது திருமணம் நடத்த வேண்டுமா? பெண்களுக்கு ஏன் நடத்தக் கூடாது என்ற கேள்வியை எழுப்பினார்.

தமிழகத்தில் ஜாதி-தீண்டாமைக் கொடுமைகள் நீடிப்பதை சுட்டிக் காட்டி கண்டித்த அவர், ஒவ்வொரு ஜாதியினரும் தமது ஜாதிக்குக் கீழே உள்ள மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்து, சொந்த ஜாதிப் பெருமையை ஆதிக்கத்தை மறுப்பதுதான் உண்மையான ஜாதி ஒழிப்பு என்றார். பெரியார் கருத்துகளைப் புறந்தள்ளிவிட்டு, எந்த சமூக மாற்றத்தையும் கொண்டுவர முடியாது என்று கூறினார் சத்தியராஜ், 'அந்திமழை'ப் பதிப்பகம் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தது.

மேடையில் திராவிடர் விடுதலைக் கழகத் தோழர் சிவா, ஜோ. ரஞ்சனா ஆகியோரின் ஜாதி-மத மறுப்பு திருமணத்தை பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் நடத்தி வைத்தார். கழக ஏட்டுக்கு மணமக்கள் சார்பில் ரூ.500 நன்கொடை வழங்கப்பட்டது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 20th February 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | பிப்ரவரி 27, 2014 | புரட்சி 13 | முழக்கம் 07 | விலை: ரூ.3.00


## 7 பேர் விடுதலை: மாநில அரசுக்கு உரிமை உண்டு

### முன்னாள் நீதிபதி சந்துரு கருத்து

***ராஜீவ் கொலை வழக்குக் கைதிகளை தமிழக அரசு விடுதலை செய்யும் முடிவு குறித்து ஓய்வு பெற்ற நீதிபதி சந்துரு வெளியிட்ட கருத்து:***

*“இந்த விவகாரத்தில் மீண்டும் யார் வழக்குத் தொடர்ந்தாலும் ஏற்கெனவே தீர்ப்பு வழங்கிய சுப்ரீம் கோர்ட் பெஞ்சுக்குத்தான் வழக்கு விசாரணைக்குச் செல்லும். அவர்கள் அளித்த தீர்ப்பை அவர்களே எப்படி தவறு என்று சொல்ல முடியும்? தடை வழங்க முடியும்? எனவே அதற்கான சாத்தியம் இல்லை.*


*குற்ற விசாரணை முறைச் சட்டம் 435இன்படி, தமிழக அமைச்சரவையின் முடிவை மத்திய அரசுடன் கலந்து ஆலோசிக்கலாம் என்றுதான் கூறப்பட்டுள்ளது. அதற்காக, மத்திய அரசு சொல்வதைத்தான் கேட்கவேண்டும் என்று இல்லை. ஒருவேளை மத்திய அரசு தமிழக அரசு எடுத்த முடிவுக்கு எதிராக கருத்துக் கூறினாலும் அதனை நிராகரிக்க மாநில அரசுக்கு முழு உரிமை உள்ளது. ஆயுள் தண்டனை என்பது குறைந்தபட்சம் 14 ஆண்டுகள் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும். இவர்கள் அந்த குறைந்தபட்ச தண்டனையைவிட அதிக காலம் சிறையில் உள்ளனர். எனவே, சிறையில் அவர்களின் நன்னடத்தையைக் கணக்கிட்டு, சீர்திருத்த அடிப்படையில் அவர்களை மாநில அரசு விடுவிக்கலாம்.*

*தண்டனை என்பது திருந்தி வாழ்வதற்காகத்தான். உயிரை எடுத்தால், உயிரை எடுக்க வேண்டும் என்றோ, மாறுகால் மாறுகை வாங்க வேண்டும் என்றோ இல்லை. சிலர் உணர்ச்சிவசப்பட்டு பேசிக் கொண்டு இருக்கின்றனர். சட்டரீதியாக மாநில அரசு எடுத்த முடிவை மத்திய அரசு கட்டுப்படுத்த முடியாது” என்றார், சந்துரு.*

## அறிவியல் காரணங்களை விளக்கி கழகத்தின் பரப்புரைப் பயணம்

# ஒரே ஜாதிக்குள் திருமணம் வேண்டாம்






*ஒரே ஜாதிக்குள் நடக்கும் திருமணங்களில் பிறக்கும் குழந்தைகள் – உடல்நலம், மனநலம் பாதிக்கப்படுவதை அறிவியலோடு விளக்கி, கழகத்தின் பரப்புரைப் பயணம் வெற்றி நடை போடுகிறது.*

*சங்க இலக்கியக் காலம் தொடங்கி இன்று வரை ஒரே ஜாதிக்குள் தொடர்ச்சியாக தலைமுறை தலைமுறையாக நாம் செய்து வரும் திருமணங்களால், நமது எதிர்காலத் தலைமுறையின் மனநலமும், உடல் நலமும் மிகவும் கேடான நிலைக்குப் போய்விட்டது. அறிவியலுக்கும், பரிணாம வளர்ச்சிக்கும், உயிரியல் இயற்கைக்கும் எதிரான அகமண முறை என்னும் ஒரே ஜாதிக்குள் நடைபெறும் திருமணங்களைப்பற்றிய அதிர்ச்சியான அறிவியல் உண்மைகளை விளக்கும் நோக்கிலும் - மருத்துவ உலகமும், ஆராய்ச்சியாளர்களும் தமக்குள் மட்டுமே அறிந்து வைத்திருந்த இந்தக் கருத்துக்களை அடித்தட்டு மக்களிடம் கொண்டு சென்று ஒரே ஜாதிக்குள் செய்து வரும் திருமணங்களால் விளைந்துள்ள மருத்துவ பாதிப்புகள் பற்றி விளக்கும் நோக்கிலும் - ஜாதி, மத, தேசிய இன, நாட்டு மறுப்புத்திருமணங்களால் விளையும் நன்மைகளைப் பற்றி விளக்கும் நோக்கிலும் - “அகமண முறையை அகற்றுவோம்! ஆரோக்கியமான தலைமுறை வளர்ப்போம்!” என்ற முழக்கத்தை முன்வைத்து திராவிடர் விடுதலைக்கழகம் ‘சுயமரியாதை - சமதர்மப் பரப்புரைப் பயணம் 2014’ என்ற பெயரில் பரப்புரைப்பயணத்தைத் தொடங்கியது.*

*பிப்ரவரி 16 அன்று சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் பழைய பேருந்து நிலையம் அருகில் மாலை 3 மணியளவில் கழக செயலவைத் தலைவர் தோழர் சு.துரைசாமி பயணத்தைத் தொடங்கி வைத்தார். பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன், கோவை மண்டல அமைப்புச்செயலாளர் சி.விஜயன், செம்பட்டி ஆல்பர்ட், மதுரை பாபுகண்ணன் உட்பட பல தோழர்கள் தொடக்க விழாவில் பங்கேற்றனர். கழக வெளியீட்டுச்செயலாளர் சூலூர் தமிழ்ச்செல்வி தலைமையில் மதுரை யாழ்மொழி, உடுமலைப் பேட்டை கவிதா, கோவை இராஜாமணி ஆகிய பெண் தோழர்கள் உட்பட 30 தோழர்கள் இப்பயணக் குழுவில் பணியாற்றுகின்றனர். பொள்ளாச்சி தோழர் விஜயராகவன் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைக்கிறார்.*

*ஹோமியோபதி மருத்துவர் பாலா, “தான் சந்தித்த நோயாளிகளில் மரபணுக் குறைபாடுள்ள பலரை சந்தித்ததைப் பற்றிக் கூறி இந்தப் பயணம் மிகவும் அவசியமானது” என வலியுறுத்தினார். போராசிரியர் அரசு.முருக பாண்டியன் தனது உரையில், இந்து மதத்தின் இழிவுகளையும் அது ஏற்படுத்தியுள்ள வேறுபாடுகளையும் எடுத்துக்கூறி அகமண மறுப்பின் அவசியத்தை வலியுறுத்தினார்.*

*பயணக்குழுவின் சொற்பொழிவாளர் விஜயராகவன் தனது உரையில், “உலக சுகாதாரநிறுவனம் தனது அறிக்கையில் வெளியிட்டுள்ள புள்ளி விபரங்களைப் பட்டியலிட்டு, அகமண முறையை அகற்ற வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தார். தோழர் கனி உரையாற்றியரைத் தொடர்ந்து இறுதியாக பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன் உரையாற்றினார். தனது உரையில், காரைக்குடி பெரியார் இயக்கத்தின் வலிமையான பகுதியாக இருந்ததைச் சுட்டிக்காட்டி ஜாதியற்றோர் இட ஒதுக்கீடு பற்றி முழுமையான விளக்க உரை*

(2 ஆம் பக்கம்)

### 7 தமிழர் விடுதலை: கழகம் வரவேற்று முதல்வரை பாராட்டுகிறது

*தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்களைக் கைது செய்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சியின் அடக்கு முறையை எதிர்கொண்டு வரும் திராவிடர் விடுதலைக் கழகம் –*

*அந்த வலியையும் ஏற்றுக் கொண்டு –*

*தமிழக முதல்வரின் 7 தமிழர் விடுதலையை ஆதரிக்கிறது. இது வரலாற்றுச் சிறப்பு மிக்க முடிவு; துணிவான அறிவிப்பு என்று உளம் திறந்து பாராட்டி வரவேற்கிறது.*

## வினாக்கள்... விடைகள்...!

+ ஏழுமலையானுக்கு பக்தர்கள் 'பட்டு வஸ்திர' காணிக்கையை இடைத்தரகர் மூலம் வழங்க வேண்டாம். தரமில்லாத பட்டாக இருக்கிறது. இனி பக்தர்கள் பகவானுக்கு நேரடியாகவே வழங்க லாம்.
**– தேவஸ்தானம் அறிவிப்பு**

அதேபோல் மூலஸ்தானத்திலும் இடைத்தரகர்களை ஒழித்து, பக்தர்களுக்கு பகவானிட மிருந்து நேரடியான – தரமான 'தரிசனம்' கிடைக்க ஏற்பாடு செஞ்சிடுங்க!

+ காஞ்சி 'வரதராஜப் பெருமாளுக்கு' பெங்களூரைச் சேர்ந்த ஒரு 'அய்யங்கார்' பக்தர், ரூ.50 லட்சம் மதிப்புள்ள வைரக் கிரீடம் காணிக்கை. **– செய்தி**

இது வெறும் காணிக்கை இல்லைங்கோ; நன்றிக் காணிக்கை! 'பெருமாள்' கண் முன்னே சங்கர்ராமன் வெட்டிக் கொலை செய்த குற்றவாளிகளை மவுன சாட்சியாக நின்று காப்பாற்றியதற்கு நன்றி காணிக்கை!

+ விளையாட்டு அமைப்புகளில் அரசியல்வாதிகள் முக்கிய பொறுப்புகளில் இருக்கக் கூடாது. **– ராகுல் காந்தி**

அரசியல் விளையாட்டில் நல்ல அனுபவமுள்ளவர்களை இப்படி, ஓரங்கட்டக் கூடாது, ராகுல்ஜி!

+ நிறைவேற்றக்கூடிய வாக்குறுதிகளை மட்டுமே தேர்தல் அறிக்கையில் அரசியல் கட்சிகள் அறிவிக்க வேண்டும்.
**– தேர்தல் ஆணையம்**

சரி; அப்படியே அறிவிச்சுடலாம். நாடாளுமன்ற கூட்டத் தொடருக்கு போகவே மாட்டோம்; அப்படிப் போனாலும் முடக்கிக் காட்டுவோம்!

+ காங்கிரஸ் கட்சி வேட்பாளர்களை காங்கிரஸ் தொண்டர்களே வாக்களித்து தேர்ந்தெடுப்பார்கள்.
**– ராகுல் காந்தி புதிய திட்டம்**

நல்ல திட்டம்தான். ஆனால், எங்க தமிழ்நாட்டுல காங்கிரசுக்கு வேட்பாளர்கள் மட்டும் தானே இருக்காங்க. அப்ப, தொண்டர்களுக்கு எங்கே போவிங்க?

+ ராஜீவ் கொலை செய்யப்பட்ட இடத்திலேயே இருந்த முருகன், சாந்தனை விடுதலை செய்வதா?
**– ஈ.வெ.கி.எஸ். இளங்கோவன் ஆவேசம்**

அந்த இடத்துல இருவருமே இல்லைன்னு சி.பி.அய். சொல்லுது! அப்போது ஈ.வெ.கி.எஸ். இளங்கோவன் இந்த பூமியில்தான் இருந்தாரா? அதை முதலில் கண்டு பிடிக்கணும்!

+ ஆமதாபாத் காந்தி ஆசிரமத்தில் நான்கு நாட்கள் தங்கி காந்தியைப் போல் எளிமையாக வாழும் சுற்றுலாத் திட்டத்தில் பங்கேற்க ஒருவர்கூட முன்வரவில்லை.
**– செய்தி**

சோனியா காந்தி, ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி, மேனகா காந்தி என்று ஏகப்பட்ட காந்திகள் இருக்காங்களே, அவுங்ககூடவா வரவில்லை?

+ இந்தியா வல்லரசாக வேண்டுமானால் ஒட்டுமொத்த இந்தியர்களும் முன்னேற வேண்டும். ஜாதி, மதம் ஆகியவற்றுக்கு இடமில்லை.
**– 'தினமலரில்' ராமகோபாலன்**

'ஆமாம்', 'இந்து முன்னணியை கலைச்சிட்டு, 'இந்தியர் முன்னணி' தொடங்கப் போறோம்! தேர்தல் முடியும் வரை நாங்க 'பிராமணாள்' இல்ல; இந்திய குடிமகனா யிட்டோம், நம்புங்கோ!

+ ராஜீவ் 'கொலையாளி'களை விடுதலை செய்த தமிழக அரசை உடனே 356 ஆவது பிரிவின் கீழ் 'டிஸ்மிஸ் செய்ய வேண்டும். **– சுப்ரமணியசாமி**

வந்துட்டாரப்பா, வடிவேலு! முதலில் தமிழக அரசின் முடிவை ஆதரிக்கும் இல.கணேசனை கட்சியிலிருந்து 'டிஸ்மிஸ்' செய்யுங்க!

+ மரண தண்டனையை நான் ஏற்கவில்லை, ஆனால், தேசத் தலைவரைக் கொன்றவர்களை விடுதலை செய்யவே கூடாது. **– ராகுல் காந்தி**

மரணம் அடையும் வரை சிறையிலே அடைத்து வைத்து பிணமானப் பிறகு விடுதலை செய்வதும் மரண தண்டனை தான்; புரிஞ்சுக்கோங்க!

+ வெண்டிடோனிகன் என்ற இந்துமத ஆராய்ச்சியாளர் இந்து மதம் பற்றி எழுதி வெளியிட்ட நூலுக்கு ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் எதிர்ப்பு தெரிவித்ததால் 'பெங்குயின்' வெளியீட்டகம் நூலை விற்பனை செய்யாமல் திரும்பப் பெற்றுக் கொண்டுவிட்டது.
**– செய்தி**

இந்துமதத்தை எவரும் விமர்சிக்கக்கூடாது. ஆனால் ஒடுக்கப்பட்ட 'இந்து மக்களை' இழிவுபடுத்தும் மனு சாஸ்திரம், பகவத் கீதைகளை நூலாக பரப்புவீங்க. 'சூத்திரப் பசங்க'ன்னா இளிச்சவாய்ங்க! அப்படித் தானே!

# பயணக் குழுவினருடன் கழகத் தலைவர் சந்திப்பு

(முதல் பக்கத் தொடர்ச்சி)
யாற்றினார். தோழர் முத்து நன்றி கூறினார். தமிழக மக்கள் ஜனநாயகக்கட்சியைச் சார்ந்த தோழர் சித்திக் அனைவருக்கும் உணவு வழங்கினார். மாலை 6.30 மணியளவில் சிவகங்கை பேருந்து நிலையத்தில் பரப்புரை நடைபெற்றது. இரவு 8.00 மணியளவில் காளையார்கோவில் பேருந்து நிலையம் அருகில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர் பால்.பிரபாகரன், சிவகங்கை இராமச்சந்திரனார் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் போராடிய வரலாற்றையும், ஜாதியற்றோர் இடஒதுக்கீட்டையும் விரிவாக விளக்கி உரையாற்றினார். தோழர் விஜயராகவன், அகமணமுறையால் குழந்தைகளுக்கு ஏற்படும் குறைபாடுகளைப் பற்றியும், மரபணுக் குறைபாடுகளையும் பட்டியலிட்டு உரையாற்றினார். பயணக்குழுவினர் காளையார்கோவிலில் தங்குவதற்கும் உணவிற்கும் தோழர்கள் நா.முத்துக்குமார், சி.முத்துக்குமார் ஆகியோர் உள்ளிட்ட தோழர்கள் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

பிப் 17 காலை 11 மணியளவில் திண்டுக்கல் மாவட்டம் நத்தம் கடைவீதியில் பரப்புரை தொடங்கியது. அஞ்சுகுழிப்பட்டியில் நண்பகல் உணவை முடித்துக்கொண்ட தோழர்கள் கருந்திணையில் பயிற்சியில் ஈடுபட்டனர். பிற்பகல் 3 மணியளவில் கழகத்தலைவர் தோழர் கொளத்தூர் மணி பரப்புரையில் ஈடுபட்ட தோழர்களை நேரில் கண்டு ஆலோசனைகளைக் கூறினார். கழகத் தலைவர் விடுதலையான நாளில் நேரில் சென்று அவரைக் காண இயலாத தோழர்களுக்கு இந்த சந்திப்பு பெரும் உற்சாகத்தையும், ஊக்கத்தையும் வழங்கியது.

மாலை 4.30 மணியளவில் அஞ்சுகுழிப்பட்டியில் தோழர் விஜயராகவன், தலைமுறை தலைமுறையாக ஒரே ஜாதிக்குள் மண முடிப்பதால் 3000 வகையான ஊனங்கள் ஏற்படுகின்றன. எனவே அகமண முறை கூடவே கூடாது என்பதை வலியுறுத்தி மாற்று ஜாதியில் மணம் முடித்தால்தான் ஆரோக்கியமான தலைமுறையை வளர்த்தெடுக்க முடியும் என்பதை எடுத்துரைத்தார். அவர் பேசி முடித்த பின் பொதுமக்களில் ஒருவர், "வேறு ஜாதியில் பெண் கேட்டால் என்னை அடிக்க வருவார்கள் கலவரத்தைத் தூண்டப்பார்க்கிறீர்களா" என்று கேட்டார். அதற்கு விஜயராகவன், " உங்களிடம் கேட்டால் கொடுப்பீர்களா?" என்று கேட்டதற்கு "உயர்ஜாதிக்காரர்கள் கேட்டால் கொடுப்பேன்" என்று கூறினார். அதற்கு விஜயராகவன், "உங்களுக்குக் கீழ்ஜாதிக்காரர்களிடம் சம்மந்தம் கொள்ள மனம் வராததற்கு காரணம் மனுசாத்திரப்படியான மனநிலைதான். அது காலங்காலமாக உங்கள் மூளையில் ஏற்றப்பட்டுள்ளது" என்று விளக்கிக்கூறி அவர்களைத் தெளிவடையச் செய்தார்.

மாலை 6 மணி கோபால்பட்டியில் தோழர் விஜயராகவன், பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் வகுப்புரிமைக்காக பெரியார் காங்கிரசை விட்டு விலகியதையும், தொடர்ந்து போராடி 1951 இல் முதன்முதலில் இடஒதுக்கீட்டுக்காக அரசியல் அமைப்புச்சட்டத்தில் சட்டத்திருத்தம் உருவாகச்செய்து, வகுப்புவாரி உரிமையைப் பெற்றுத்தந்த வரலாற்றை எடுத்துக்கூறினார்.

பிப்.18 பகல் 12 மணியளவில் திண்டுக்கல் மாநகராட்சி அலுவலகம் அருகில் தி.வி.க மாவட்டத் தலைவர் பெரியார்நம்பி தலைமையில், தமிழ்ப்புலிகள் மையக்குழு உறுப்பினர் பெரியார் மணி, தலித் போராளிகள் முன்னணி கணேசன், தமிழ்நாடு மக்கள் கட்சி மாவட்டப் பொறுப்பாளர் காளிமுத்து, ஒன்றியச் செயலாளர் ரங்கசாமி, புரட்சிகர இளைஞர் முன்னணி பாண்டியன் ஆகியோர் பரப்புரைக் குழுவை வாழ்த்தி உரையாற்றினர். தலித் போராளிகள் முன்னணி நிறுவனர் சூ.ச.மனோகரன் தனது உரையில், "ஜாதி ஒழிப்பை முழக்கமாகக் கொண்டுள்ள எங்களுக்கு நீங்கள் மேற்கொண்டுள்ள பரப்புரைப் பயணம் மகிழ்ச்சியளிக்கிறது. ஆங்கிலேயரிடம் ஜாதி கிடையாது. மேலும் அவர்கள் உறவு முறைக்குள் மணம் செய்வது கிடையாது. அதனால்தான் அவர்கள் மிகவும் முன்னேறி உள்ளனர்" என்று பேசினார். அடுத்து வீதி நாடகமும், மந்திரமா? தந்திரமா? அறிவியல் விளக்க நிகழ்ச்சியும் நடைபெற்றது.

மாலை 6.00 மணியளவில் செம்பட்டி அருகிலுள்ள இராமநாதபுரத்தில் பரப்புரை நடைபெற்றது. கோவை மாவட்டத்தலைவர் வழக்கறிஞர் பன்னீர்செல்வம் நிகழ்ச்சியில் பங்கேற்றார். திராவிடர் கலைக்குழுவின் வீதிநாடகம் கிராமத்துப் பெண்களை வெகுவாகக்கவர்ந்தது. தோழர் விஜயராகவன், தோழர் இளவரசன் ஆகியோர் உரைக்குப் பிறகு பொது மக்களிடமிருந்து கேள்விகள் வந்தன. ஒரே ஜாதிக்குள் பிறந்த குழந்தைகள் பலர் நல்ல மன நிலையிலும், பிறக்கிறார்களே எனக் கேட்டனர். தோழர்கள் அதற்கு உரிய பதிலை வழங்கினர். ஒரே ஜாதிக்குள் திருமணம் செய்வதால் மரபணுக் கோளாறுகள் தாக்குவதற்கு அதிகமான வாய்ப்புகள் உள்ளன. வெவ்வேறு ஜாதிக்குள் திருமணம் செய்யும் இணையர்களின் வாரிசுகளுக்கு இந்த குறைபாடுகள் தாக்குவதற்கு வாய்ப்புகள் மிகமிகக் குறைவு என்பதை அறிவியல் ஆதாரங்களுடன் விளக்கினர். இவை தொடர்பாக விரிவாக அறியவேண்டுமானால் எங்கள் தோழர்களிடம் உங்கள் முகவரிகளைத் தெரிவியுங்கள் என அறிவித்தவுடன் ஏராளமான பெண்கள் வரிசையில் நின்று தங்கள் முகவரிகளைக் கொடுத்தனர்.

இரவு 7.30 மணியளவில் பாளையங்கோட்டை கிராமத்தில் வீதிநாடகத்தையும் தோழர்களின் உரையையும் கவனித்துக் கேட்ட பொதுமக்கள் நிகழ்ச்சியின் இறுதியில், தாங்களாகவே முன்வந்து, நீங்கள் சொல்வதுபோல ஒரே ஜாதிக்குள் தொடர்ந்து மணம் முடித்ததால் எங்கள் ஊரில் உள்ள குழந்தைகளுக்கு பல பாதிப்புகள் வந்துள்ளன என்றனர். எடுத்துக்காட்டாக அந்த ஊரில் உள்ள ஒரு குழந்தைக்கு 8 வயதில் கடும் காய்ச்சல் ஏற்பட்டு கையும் காலும் செயலிழந்துவிட்டது. ஒரு பையன் மூளை வளர்ச்சியில்லாமல் இருக்கிறான், மேலும் சிலருக்கு நீங்கள் சொல்வது போன்ற குறைபாடுகள் உள்ளன என அந்தக் குறைபாடுள்ள குழந்தைகளையும் அழைத்துவந்து காட்டினர். இவை தொடர்பாக விரிவாக அறிந்துகொள்ள பரப்புரைக் குழுவிடம் தங்களது முகவரிகளையும் பதிவு செய்தனர்.

பரப்புரைக் குழுவில் உள்ள உடுமலைப் பேட்டைதோழர் கவிதா அவர்களின் மகள் யாழ்மொழியின் பிறந்தநாளை பரப்புரைக்குழு தோழர்கள் கேக் வெட்டிக் கொண்டாடினர். திண்டுக்கல்லைச் சுற்றி மூன்று நாட்கள் நடைபெற்ற பரப்புரையில் தோழர்கள் தங்குவதற்கும், உணவிற்கும் சுயமரியாதை கலை பண்பாட்டுக்கழக மாவட்ட அமைப்பாளர் தோழர் அந்தோணி பீட்டர் ராஜ், செம்பட்டி தேவகி ஆகியோர் உரிய ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். தோழர்கள் சுகுணாதிவாகர், விஜி, ஞானசண்முகம், பாடியூர் குமார், செம்பட்டி பாபு, அஞ்சுகுழிப்பட்டி கனகராஜ், வலையபட்டி செல்வராஜ், பெரியார் ஆட்டோ நிறுத்தம் தலைவர் நாகராஜ், அழகுமலை, தமிழ்நாடு உணவகம் பாண்டியன் ஆகியோர் உணவுக்கான தொகையை நன்கொடையாக வழங்கினர்.

ஒரே ஜாதிக்குள் தான் திருமணம் செய்ய வேண்டும் என்றும் வேறு ஜாதியில் திருமணம் செய்தால் வெட்டுவோம், குத்துவோம் என்று வெளிப்படையாக பல்வேறு ஜாதித் தலைவர்களும் முழங்கிவரும் சூழலில், அமைதியாக, ஜாதிமறுப்புத்திருமணங்களை ஆதரித்தும், ஒரே ஜாதித் திருமணங்களை எதிர்த்தும் கிராமம் கிராமமாக பரப்புரை நடக்கிறது. முக்கியமாக, பெண்கள் கூட்டம் கூட்டமாக அமர்ந்து நிகழ்ச்சிகளைக் கவனிக்கின்றனர். "நீங்கள் சொல்வது உண்மை, எங்கள் ஊரிலும் நீங்கள் சொன்னபடிதான் நடந்துள்ளது" என அவர்களே நமக்கு ஆதாரங்களைச் சொல்வதும், இவை பற்றி விரிவாக அறிய விரும்புகிறோம் என வரிசையாக நின்று தோழர்களிடம் பெயரையும், செல் எண்களையும் கொடுத்துச்செல்கின்றனர். மக்களது இத்தகைய ஆதரவுப்போக்கு பயணக்குழுவினருக்கு மிகுந்த நம்பிக்கையையும், ஊக்கத்தையும் அளித்துள்ளது.

**செய்தி: மதுரை யாழ்மொழி**

## ‘ஆனந்த விகடனு’க்கு பெரியார் பேட்டி

# “ஆட்சி அமைக்க என்னை அழைத்தார்கள்!”

மறைந்த பத்திரிகையாளர் சாவி, தந்தை பெரியாரை திருச்சி பெரியார் மாளிகையில் சந்தித்து எடுத்த இந்தப் பேட்டி, 4.4.1965 ‘ஆனந்த விகடன்’ இதழில் வெளி வந்துள்ளது. அப்பேட்டியை மீண்டும் 29.1.2014இல் அந்த ஏடு மறு வெளியீடு செய்துள்ளது. பல்வேறு வரலாற்றுத் தகவல்கள் அடங்கிய அந்த சந்திப்பை ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ பதிவு செய்கிறது. (சென்ற இதழ் தொடர்ச்சி)

“ராஜாஜி உங்களை ஜெயில்ல போட்டாரே, அது எப்போ?”

“முப்பத்தேழுலே நடந்த எலக்ஷன்ல ஜஸ்டிஸ் கட்சி தோத்தது. அப்ப அந்தக் கட்சிக்கு பொப்பிலி ராஜாதான் தலைவர். பொப்பிலி, பெத்தாபுரம் எல்லாரும் தோத்துப் போனாங்க. காங்கிரஸ் ஜெயிச்சுட்டுது. ராஜாஜி, மந்தரிசபை அமைச்சாரு. அப்பத்தான் கட்டாய இந்தியைக் கொண்டு வந்தாங்க. நான் எதிர்த்தேன். புரோகிபிஷனைக் காரணம் காட்டி விற்பனை வரிபோட்டாங்க. என்னை ஜெயில்ல போட்டாங்க. ஜஸ்டிஸ் கட்சி மெம்பர்களைப் பழிவாங்க ஆரம்பிச்சாங்க. நான் ஜெயிலுக்குள்ளே இருக்கிறபோதே பொப்பிலி எல்லாம் சேர்ந்து, என்னை ஜஸ்டிஸ் கட்சித் தலைவனாக்கிட்டாங்க.”

“அப்புறம் எப்ப ஜெயில்லருந்து வந்தீங்க?”

“அஞ்சாறு மாசத்துக்கெல்லாம் என்னை விட்டுட்டாங்க. ஆனா, இந்தியை மட்டும் விடாம வெச்சுட்டிருந்தாங்க.....”

“எப்பத்தான் விட்டாங்க?”

“இதுக்குள்ளே காங்கிரசிலேயே தகராறு. ‘பட்டாபி சீதாரமய்யா தோல்வி, என் தோல்வினு காந்தி சொன்னாரே ஞாபகம் இருக்குதா? அந்தத் தகராறுதான். தலைவர் தேர்தல்ல பட்டாபி தோத்துட்டாரு... சுபாஷ் போஸ் ஜெயிச்சிட்டாரு. போஸ் கட்சியைச் சேர்ந்தவங்க, ‘காங்கிரசுக்குப் பதவி மோகம்’னு சொன்னாங்க. கொஞ்ச நாளைக்கெல்லாம் ராஜாஜி மந்திரிசபை ராஜினாமா செய்ய வேண்டி வந்துட்டுது. அந்தச் சமயத்திலே கவர்னர் என்னைக் கூப்பிட்டு ‘மந்திரிசபை’ அமைக்கச் சொன்னாரு.

சீமையிலே இப்படித்தான் வழக்கம்; ஒரு கட்சி விலகிட்டுதுனா, அடுத்த பெரிய கட்சியைக் கூப்பிட்டு மந்திரிசபை அமைக்கச் சொல்லு வாங்க. இப்ப காங்கிரசுக்கு அடுத்த பெரிய கட்சி, ஜஸ்டிஸ் கட்சிதான், ‘நீ என்ன சொல்றே’னாரு. நான் ‘மாட்டேன்’னேன். மந்திரிசபை அமைச்சா, அதோடு ஜஸ்டிஸ் கட்சியே போயிடும். வேண்டாம்னு வந்துட்டேன். சண்முகம் செட்டி, குமாரராஜா, பன்னீர்செல்வம் எல்லாரையுமே கூப்பிட்டுப் பேசினாரு கவர்னர்.”

“அவங்களெல்லாம் என்ன சொன்னாங்க?”

“அவங்கள்ல சில பேருக்கு ஆசைதான். எங்களுக்குள்ளே விவாதம் நடந்தது. ‘ஜஸ்டிஸ் கட்சிக்கு நோ எலக்ஷன்; நோ மந்திரிசபை.... இதுதான் என் கொள்கை’ன்னேன். எல்லோரும் அப்போஸ் பண்ணாங்க. என் மேலே ரொம்பக் கோபம் அவங்களுக்கு. சௌந்தர பாண்டியன்கூட ‘ஏன் இப்படி முரட்டுத்தனமா இருக்கீங்க?’னு கேட்டாரு.”

“நீங்க என்ன சொன்னீங்க?”

“‘என்னைத் தலைவனாப் போட்டதுக்கு இதுதான் பலன்னு’ சொன்னேன். ‘வேணும்னா என்னைத் தோற்கடிச்சுடுங்க’ன்னேன். பன்னீர் செல்வத்துக்கு மட்டும் என்னை விட்டுடறதுல இஷ்டமில்லே. அவருக்குத் தெரியும், நான் இல்லாட்டி கட்சி ரொம்ப வீக்காப் போயிடும்னு...”

“உங்களை மந்திரிசபை அமைக்கச் சொன்னாரே, அவர் பேரு என்ன?”

“காளை மாடு, விவசாயம்னு சொல்லிக்கிட்டிருப்பாரே, ஒருத்தர்... யாரது?”

“லின்லித்கோ...”

“ஆ. லின்லித்கோ! அவனேதான். கிண்டிக்குக் கூப்பிட்டுப் பேசினான். நான் சென்னேன், ‘மந்திரி சபை அமைச்சா யார் யாருக்கு மந்திரிங்கிறதுலேயே எங்களுக்குள்ளே சண்டை வந்துடும். கொள்கை அடிபட்டுப் போகும். ‘முடியாது’ன்னேன். அப்புறம் வேவல்கூட என்னைக் கூப்பிட்டு சம்மதிக்கச் சொன்னாரு. ‘முடியவே முடியாது’ன்னுட்டு வந்துட்டேன். அப்புறம் தான் ரொம்ப முக்கியமான சங்கதி ஒண்ணு நடந்தது. கவனிக்கணும்.”

“சொல்லுங்க...”

“ராஜாஜி வந்தாரு. மெதுவா எங்கிட்டே வந்து, ‘நாயக்கரே, நல்ல சமயம்... கஷ்டப்பட்டுப் பிடிச்ச சர்க்காரை வெள்ளைக்காரன்கிட்டே விட்டுடக் கூடாது. நீங்க மந்திரிசபையை ஒப்புக்கணும். நிலைச்சு நிக்கும்; கவலைப்படாதீங்க. வேணுமானா காந்தி, காங்கிரஸ் எல்லார்கிட்டேயும் நான் சம்மதம் வாங்கித் தர்றேன். இதிலே உங்களுக்கு ஏதாவது சந்தேகம் இருந்தா, நீங்களும் இஷ்டப்பட்டா, என்னையும் ஒரு மந்திரியாச் சேர்த்துக்குங்க; நானும் உங்ககூட இருந்து பக்க பலமா வேலை செய்யறேன்னாரு...”

“ராஜாஜிக்கு என்ன பதில் சொன்னீங்க?”

“நீங்க சொல்றதுலே சந்தோஷம்தான். ஆனா, யார் யாரோ சொல்லியும் மாட்டேன்னுட்டேன். இப்ப நீங்க சொல்றதுனாலே யோசனை பண்ணிப் பாக்கறேன்னேன். ‘நல்லா யோசிச்சுச் சொல்லுங்கனு’ போயிட்டாரு. எங்க ஆளுங்களோட யோசிச்சேன். முதல்ல மந்திரிசபையை ஒப்புக்கணும்னு சொன்ன ஆசாமிங்க எல்லாம், ராஜாஜி மந்திரிசபைக்கு வர்றார்னு சொன்னதும், ‘வேணவே வேணாம்’னுட்டாங்க.”

“அப்புறம் என்ன நடந்தது?”

“ஒரு வேடிக்கை நடந்தது. என்ன வேடிக்கைனா... வாருக்கு (யுத்தம்) அப்புறம் வெள்ளைக்காரன் பவரை ஹேண்ட்ஓவர் பண்றப்போ, நான் போய்க் கேட்டேன்... ‘நாங்க பாடுபட்டோம், சர்க்காரோடு ஒத்துழைச்சோம். கடைசியிலே பவரை அவங்க கையிலே கொடுக்கறது என்ன நியாயம்?’னு கேட்டேன்.

“வெள்ளைக்காரன் அதுக்கு ‘வி நோ ஹிண்டு அண்டு முஸ்லிம் ஒன்லி. ரெண்டே ரெண்டு பார்ட்டிதான் எங்களுக்குத் தெரியும். பிராமின், நான் பிராமின் இந்த விஷயமெல்லாம் தெரியாது(‘னு பதில் சொல்லிட்டான்.”

“அதோடு நீங்க திரும்பி வந்துட்டீங்களா?”

“வருவேனா? ‘இதுதான் வெள்ளைக்காரன் யோக்கியதையா?’னு கேட்டேன்.”

“என்ன பதில் சொன்னாங்க?”

“என்னத்தைச் சொல்லுவான். சிரிச்சு மழுப்பிட்டான். சரி... இத்தோட விட்டுடக்கூடாதுன்னு ஜின்னாவைப் பார்த்துப் பேசறதுக்காக, பம்பாய் போயிருந்தேன். அவரைக் கண்டு எல்லா சங்கதியையும் பேசினேன். நான் சொல்றதையெல்லாம் கவனமாகக் கேட்டுக்கிட்டு, ‘சரி, நான் மெட்ராஸுக்கு வர்றப்போ முஸ்லிமும் ஜஸ்டிஸ் பார்ட்டியும் சேர்ந்து சப்ஜெக்ட்டை ஒண்ணா டேபிள் பண்ணுவோம்’னு சொன்னாரு.”

“அப்புறம் ஜின்னா வந்தாரா?”

“வந்தாரு. ‘உன் கட்சி விஷயம் என்னா?’னு கேட்டாரு. ‘என் கட்சியிலே முக்கியமா ஒன்பது பேரு இருக்கோம். ஒன்பது பேரும் ஒன்பது ஜாதி. ஆனா, ஆல் நான் பிராமின்ஸ்’னேன். ஜின்னா சிரிச்சுட்டு, ‘என்ன நினைச்சு இப்படி ஒரு கட்சி வெச்சிருக்கீங்க? நல்ல கட்டில்தான். ஆனா, கால் இல்லாக் கட்டிலாயிருக்குதே’ன்னு கேலி பண்ணாரு.

‘என்ன செய்யறது? எப்படியோ இதைத்தான் ஒரு கட்டிலா வெச்சு ஓட்டிட்டிருக்கோம்’னேன்.”

“ரெண்டு பேரும் சேர்ந்து டேபிள் பண்ணலாம்னு சொன்ன விஷயம் என்ன ஆச்சு?”

“‘உன் பிரச்சினையைத் தனியாவே எடுத்துச் சொல்லிக்கோ’னுட்டுப் போயிட்டாரு. ‘அப்பத்தான் ராமசாமி மூஞ்சியிலே ஜின்னா கரியைப் பூசிட்டார்’னு பத்திரிகையிலே எழுதினாங்க.”

“52-லே ஜெனரல் எலக்ஷன் நடந்ததே, அப்ப நீங்க யாரை ஆதரிச்சீங்க?”

“காங்கிரஸை எதிர்த்துப் பிரச்சாரம் செஞ்சேன். காங்கிரஸ் தோத்தது. நல்லபடியாத் தோத்தது. மந்திரிசபை அமைக்கிறாப்ல எந்தக் கட்சிக்கும் மெஜாரிட்டி கிடைக்கலே. மறுபடியும் ராஜாஜி வந்தாரு. படையாச்சி, கவுண்டரு எல்லாரையும் சரிபண்ணிக்கிட்டு மந்திரிசபை அமைச்சாரு. குலக் கல்வி, ஒரு நேரப் படிப்புன்னாரு. 6000 பள்ளிக்கூடங்களை மூடினாரு. எதிர்த்தோம்... அதுக்குப் பின்னாலதான் காமராஜ் முதல் மந்திரியா வந்தாரு. தமிழர் நலனுக்காக நல்ல காரியமெல்லாம் செய்ய ஆரம்பிச்சாரு. அதிலிருந்து வெளிப்படையா நான் காங்கிரசை ஆதரிக்க ஆரம்பிச்சுட்டேன்.”

“காமராஜை நீங்க எப்பவாவது சந்திச்சிருக்கீங்களா?”

“எப்பவோ ஒரு சமயம் நான் ஜெனரல் ஆஸ்பத்திரியில படுத்திருக்கப்போ, அவராகவே வந்து, ‘எப்படி இருக்கீங்க?’னு விசாரிச்சாரு. அந்த நேரம் சி.சுப்பிரமணியமும் அதே ஆஸ்பத்திரியிலே படுத்திருந்தாரு. அவரைப் பார்க்க வந்தப்போ, என்னையும் பார்த்துட்டுப் போனாரு.”

“அந்தக் காலத்துலே இந்தியை எதிர்த்துப் போராட்டமெல்லாம் நடத்தினீங்களே, இப்ப ஏன் சும்மா இருக்கீங்க?”

காதை வலது கையால் அணைத்து நான் சொல்வதை உற்றுக் கொண்ட பெரியார் கோபத்தை வெளியே காட்டாமல், “அப்படியா? மன்னிக்கணும்; இப்ப இந்தி எங்கு இருக்குது? தெரியாமத்தான் கேக்கறேன். சொல்லுங்கோ?”

“இந்திதான் ஆட்சி மொழியா வந்துட்டுதே...”

“எங்கே வந்துட்டுது? உனக்குத்தான் இங்கிலிஷ் இருக்குதே. இந்தியா ஒண்ணா இருக்கணும்னா, பொதுவா ஒரு ஆட்சி மொழி வேணும்தானே? இந்திக்காரன் உங்களை மாதிரி இங்கிலீஷை நினைக்கலையே. இங்கிலீஷை அவமானம்னு நினைக்கிறானே. தமிழ்நாட்டுக்காரன் சொல்றபடி, இந்தியா நடக்குமா? அது ஜனநாயகமா?”

“ஒரு நாளைக்கு இல்லாவிட்டால் ஒரு நாளைக்கு இந்தி வரத்தானே போகுது?”

“நல்லாருக்குதே! ஒரு நாளைக்கு இல்லாட்டி ஒரு நாளைக்குச் சாவு வரத்தானே போகுதுன்னு எவனாவது இப்பவே போய் கிணத்துலே விழுவானா? அப்படியே ஒரு வேளை இந்தி வந்ததுன்னா, உயிரோடு இருந்தா... அதை எதிர்க்கப் போறவன் நான் தானே?”

“மத்திய சர்க்கார்ல உத்தியோகம் கிடைக்கிறதுக்கு இந்தி அவசியம் இல்லேன்னாலும், உத்தியோகத்துலே சேர்ந்தப்புறம் படிக்கச் சொல்றாங்களே...”

“படிச்சிட்டுப் போயேன். தாசில்தார் உத்தியோகம் படிக்கப் போறவங்க, ‘சர்வே’ படிப்பு படிக்கிறதில்லையா? அந்த மாதிரி இந்தியைப் படிச்சுக்கிறது. உனக்கு இதிலே என்ன கஷ்டம்? இல்லே நஷ்டம்? அவன் நேரத்துல அவன் கொடுக்கிற சம்பளத்துல, நீ இன்னொரு மொழியைப் படிச்சுத் தெரிஞ்சுக்கப் போறே... இது லாபம் தானே?”

**(நிறைவு)**

## சென்னை—காஞ்சியில் கழகக் கூட்டங்கள்

14.2.2014 அன்று மாலை 5 மணிக்கு சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக சென்னை பச்சையப்பன் கல்லூரி பின்புறம் காதலர் நாள் பொதுக் கூட்டம், ஆ.வ.வேலு தலைமையில் நடைபெற்றது. கு. வெங்கடேசன், எ.பாலாஜி முன்னிலை வகிக்க, தமிழ் முழக்கம் சாகுல் அமீது, மருத்துவர் எழிலன், பத்திரிகையாளர் கவின்மலர் மற்றும் உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திருமூர்த்தி, துரை அருண் ஆகியோர் சிறப்புரையாற்றினர். நிகழ்வின் தொடக்கத்தில் சமர்ப்பா குழுவினர் ஜாதி ஒழிப்புப் பாடல்கள் பாடினர். சென்னை மாவட்ட தலைவர் பா.ஜான் நன்றியுரை கூறினார்.

**கூடுவாஞ்சேரியில் கழகக் கூட்டம் :** காஞ்சி மாவட்ட கழகம் சார்பாக 15.2.2014 அன்று மாலை 6 மணிக்கு கூடுவாஞ்சேரியில் சு. செங்குட்டுவன், (மாவட்ட அமைப்பாளர்) தலைமையில் சமூக நீதி பாதுகாப்பு விளக்கக் கூட்டம் நடைபெற்றது. க. ரவி பாரதி வரவேற்புரையாற்றினார். அப்துல் சமது (த.மு.மு.க.), எஸ்.எஸ். பாலாஜி (வி.சி.க.) உரையாற்றினர். தளுக்கு (எ) தணிகமலை நன்றி கூறினார்.

DATE OF PUBLICATION 26.02.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# இதில் என்ன குற்றம், சிந்திப்பீர் தமிழர்களே!

ராஜிவ் கொலையில் சதி செய்த குற்றத்தின் கீழ் தண்டிக்கப்பட்டு, 23 ஆண்டுகளாக சிறையில் அடைபட்டுக் கிடந்த 7 பேரை உச்சநீதி மன்றத் தீர்ப்பைத் தொடர்ந்து தமிழக அரசு விடுதலை செய்ய முன் வந்தது. காங்கிரஸ் கட்சியினர் ராஜிவ் கொலையாளிகளை விடுதலை செய்யலாமா என்று போராட்டம் நடத்துகிறார்கள். நாட்டின் பிரதமரைக் கொன்றவர்களையே விடுதலை செய்தால், சாதாரண மக்களுக்கு எப்படி பாதுகாப்புக் கிடைக்கும் என்கிறார், ராகுல் காந்தி. தமிழக அரசை டிஸ்மிஸ் செய்ய வேண்டும் என்கிறார் சுப்ரமணியசாமி.

மக்களின் சிந்தனைக்கு நாம் சில கேள்விகளை முன்வைக்க விரும்புகிறோம்:

- ராஜிவ் காந்தி கொலையில் சி.பி.அய். 41 பேரை குற்றவாளிகள் என்று அடையாளம் கண்டது. இதில் நேரடி தொடர்புடையவர்களான தாணு, சிவராசன், சுபா உள்ளிட்ட 12 பேர் ஏற்கனவே தேடுதல் வேட்டையில் இறந்து விட்டார்கள்.
- 26 பேர் குற்றம்சாட்டப்பட்டு, ‘தடா’ நீதிமன்றத்தில் நிறுத்தப் பட்டனர். பூந்தமல்லி ‘தடா’ நீதிமன்றம் 26 பேருக்கும் தூக்குத் தண்டனை அறிவித்தது. இந்த 26 பேரும் கொலையில் நேரடி தொடர்புடையவர்கள் அல்ல; சதிக்கு உதவி செய்தார்கள் என்பதுதான் குற்றச்சாட்டு.
- ‘தடா’ சட்டத்தின் கீழ் குற்றம்சாட்டப்பட்டவரிடமிருந்து பெறப் படும் ஒப்புதல் வாக்குமூலத்தை அப்படியே ஏற்றுக் கொள்ள முடியும். அதற்காகவே ‘தடா’வின் கீழ் குற்றம்சாட்டி குற்றத்தை ஒப்புக் கொள்ளுமாறு சித்திரவதை செய்தார்கள். அப்படிப் பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தையே அவர்களுக்கு எதிராகப் பயன்படுத் தினார்கள். ‘தடா’ நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித்தது. காங்கிரஸ்காரர்கள் ‘தர்மம் வென்றது’ என்று மகிழ்ச்சிக் கூத்தாடினார்கள்.
- ‘தடா’ சட்டம் மனித உரிமைகளைப் பறிக்கும் அடக்குமுறைச் சட்டம் என்பதை ஏற்றுக்கொண்டு 1995இல் நாடாளுமன்றத்திலே அதை நீக்கம் செய்தது காங்கிரஸ் ஆட்சிதான். அதே ‘தடா’ சட்டம் ராஜிவ் கொலை வழக்கில் பயன்படுத்தப்பட்டதை காங்கிரஸ் ஆதரித்தது.
- ‘தடா’ சட்டம் பயன்படுத்தப்பட்டதால் விசாரணை ரகசியமாக நடந்தது. 50 நாட்கள் வரை போலீஸ் காவலில் வைத்து விசாரிக்கப் பட்டனர். குற்றப் பத்திரிகை தாக்கல் செய்ய 3 மாத காலம் எடுத்துக் கொண்டார்கள். அரசின் சாட்சிகள் இரகசியமாக வைக்கப் பட்டனர். நீதிமன்றத்தில் சாட்சி கூற வரப் போகிறவர் யார் என்பது அப்போதுதான் தெரியும். எனவே குற்றம்சாட்டப்பட்டவர்களின் வழக்கறிஞர்கள் திறமையாக குறுக்கு விசாரணை நடத்த முடியாமல் தடுக்கப்பட்டனர். தீர்ப்பை எதிர்த்து உயர்நீதிமன்றத்துக்கு மேல் முறையீடு செய்யும் உரிமையும் தடுக்கப்பட்டது. குற்றம்சாட்டப் பட்டவர்கள் உச்சநீதிமன்றத்தில் வழக்கறிஞர் வைத்து வாதாடும் வசதி இல்லாதவர்கள் என்பதால் 26 பேருக்கும் தூக்குத் தண்டனை விதித்து கதையை முடித்துவிடலாம் என்று திட்டமிட்டார்கள்.
- தமிழகத்தில் இந்த அநீதிகளுக்கு எதிரான மனித உரிமை இயக்கங்கள் வராமல் போயிருந்தால், இதே 26 பேரும் உச்சநீதிமன்றத்தை அணுகி யிருக்கவே முடியாது. அப்போதே தூக்கிலேற்றப்பட்டிருப்பார்கள்.
- உச்சநீதிமன்றம் வழக்கை விசாரித்து, 19 பேரை விடுவித்தது. அது மட்டுமல்ல, இந்த வழக்கு ‘தடா’ சட்டத்தின் கீழே நடத்தப் பட்டதே தவறு என்று கூறி விட்டது. நளினி, முருகன், சாந்தன், பேரறிவாளன் என்ற நால்வருக்கு மட்டும் தூக்குத் தண்டனையை உறுதி செய்தது.
- தூக்குத் தண்டனையை உறுதி செய்த உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி கே.டி.தாமஸ் பதவி ஓய்வு பெற்றவுடன், மனம் திறந்தார். இவர்கள் மீதான தூக்குத் தண்டனையை ரத்து செய்ய வேண்டும் என்று வெளிப்படையாகவே அறிவித்தார். சி.பி.அய். விசாரணைக்கு தலைமையேற்ற அதிகாரி கார்த்திகேயன், புலனாய்வுப் பொறுப்பை ஏற்ற அதிகாரி ரகோத்தமன் அனைவருக்குமே ‘மனசாட்சி’ உறுத்தியது. தூக்குத் தண்டனை வேண்டாம் என்று கூறினார்கள்.
- எந்த சாட்சியத்தின் அடிப்படையில் தூக்குத் தண்டனை விதிக்கப் பட்டதோ, அந்த சாட்சியத்தைப் பதிவு செய்த அய்.பி.எஸ். அதிகாரி தியாகராசனும் மனம் திறந்தார். “நான் சாட்சியத்தை சரியாகப் பதிவு செய்யவில்லை, பேரறிவாளன் - குற்றமற்றவர் என்பதை நிரூபிக்கக் கூடிய அவரது கூற்றை நீக்கிவிட்டு அவர் வாக்குமூலத்தை பதிவு செய்தேன்” என்று வெளிப்படையாகவே ஒப்புக் கொண்டார்.
- குண்டு வெடித்தபோது ராஜிவ் காந்திக்கு உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டதா என்பதை விசாரிக்க காங்கிரஸ் ஆட்சி யில் நீதிபதி வர்மா ஆணையம் அமைக்கப்பட்டது. அந்த ஆணையத்தை செயல்படவிடாமல் காங்கிரசாரே, பாதியில் முடக்கி விட்டனர்.
- ராஜிவ் கொலையில் அன்னிய சதி இருக்கிறதா என்பதைக் கண்டறிய நீதிபதி ஜெயின் தலைமையில் மற்றொரு ஆணையம் அமைக்கப் பட்டது. அந்த ஆணையம் செயல்படவும் காங்கிரஸ் கட்சி ஒத்துழைக்கவில்லை. ஜெயின் ஆணையமே காங்கிரசாரை குற்றம்சாட்டி பணியை முடித்துக் கொண்டுவிட்டது.
- இப்படி ராஜிவ் கொலையில் உண்மையான குற்றவாளிகளைக் கண்டறிய எந்த முயற்சியும் எடுக்காமல், அதற்கு ஒத்துழைக்காமல் கையில் சிக்கியவர்களை தூக்கில் போட்டு வழக்கை முடித்துவிட துடித்த காங்கிரஸ் கட்சிதான் இப்போது துள்ளி குதிக்கிறது.
- இந்திரா கொல்லப்பட்டபோது புதுடில்லியில் 3000 சீக்கியர்கள் இதே காங்கிரஸ் கட்சிக்காரர்களால் படுகொலை செய்யப்பட்டார் களே! இதுவரை குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லையே! அதில் காங்கிரஸ் எந்த ஆர்வமும் காட்டவில்லையே! மறக்க முடியமா?
- அமெரிக்காவின் ‘யூனியன் கார்பைடு’ நிறுவனத்தின் அலட்சியத் தால் நள்ளிரவில் போபால் விஷவாயு கசிந்து பல்லாயிரம் ஏழை எளிய மக்கள் பலியானார்கள். போபாலே மயான பூமியானது! ஆயிரக்கணக்கில் ஊனமுற்றார்கள். அப்போது அந்த நிறுவனத்தின் தலைவரை பத்திரமாக வெளிநாட்டுக்கு விமானத்தில் ஏற்றி அனுப்பி வைத்தது - இதே காங்கிரஸ் கட்சிதானே மறக்க முடியுமா?
- காந்தி கொலையில் சதிக் குற்றம் காட்டப்பட்டு ஆயுள் தண்டனை பெற்ற கோட்சேயின் தம்பி கோபால் கோட்சேயை 1964 ஆம் ஆண்டு விடுதலை செய்ததே மகாராஷ்டிர மாநில காங்கிரஸ் ஆட்சிதானே! இல்லை என்று கூற முடியுமா?
- ஸ்ரீபெரும்புதூரில் ராஜிவ் கொலை செய்யப்பட்டபோது எந்த ஒரு காங்கிரசாரும் அவர் பாதுகாப்புக்கு உடனிருக்கவில்லையே ஏன்? இதுதான் இவர்களின் ராஜிவ் விசுவாசமா? இத்தனைக்கும் ராஜிவ் பங்கேற்கும் ஸ்ரீபெரும்புதூர் கூட்டத்துக்கு ஆபத்து இருப்பதாகக் கூறி கூட்டம் நடக்கவிருந்த அதே நாளில், சென்னையில் ஆளுநர் பீஷ்ம நாராயணனை சந்தித்து, மனு கொடுத்தவர்கள்தான் காங்கிரசுக்காரர்கள். ஆபத்து குறித்து முன்கூட்டியே தெரிந்திருந்தும் ராஜிவ் காந்திக்கு பாதுகாப்பு வழங்காமல் ஒதுங்கி நின்றவர்களே, இவர்கள் தானே? இதுதான் இவர்களின் தலைவர் விசுவாசமா?

ஆக,

- குற்றத்தில் நேரடியாக தொடர்புடையவர்கள் மரணமடைந்தப் பிறகும்,
- தீர்ப்பளித்த நீதிபதியே விடுதலை செய்யக் கோரிய பிறகும்,
- ‘தடா’ சட்டத்தைப் பயன்படுத்தி முறையற்ற விசாரணைகளை நடத்தியப் பிறகும்
- வாக்குமூலங்களை தவறாகத் திருத்தி எழுதிய பிறகும்!
- 23 ஆண்டுகாலம் இந்த இளைஞர்கள் சிறையில் வதைபட்ட பிறகும்

விடுதலை செய்யக்கூடாது என்று அலறுகிறார்களே, இது நியாயந் தானா? மனிதம் தானா?

சிறைச்சாலையிலே - அதிகாரிகளே பாராட்டும் நன்னடத்தையோடு நடந்து கொண்ட இந்த இளைஞர்களின் முழு வாழ்வையும் சிறைச் சாலைக்குள்ளேயே புதைத்துவிடவேண்டுமா?

ராஜிவ் காந்தியை கொழும்பு நகரத்தில் துப்பாக்கிக் கட்டையால் அடித்துக் கொலை செய்ய முயன்றான், ஒரு சிங்கள இராணுவ சிப்பாய். அந்தப் பேர்வழியைப் பாதுகாத்து வரும் இலங்கை அரசுடன் நட்பு கொண்டாட துடிக்கிறதே காங்கிரஸ், இது நியாயம் தானா?

மரண தண்டனையை ஆதரிக்கவில்லை என்று கூறும் ராகுல், மரண மடையும் வரை இந்த இளைஞர்களை சிறையில் அடைத்து வைக்கச் சொல்வது மரணதண்டனையைவிட கொடிய தண்டனை அல்லவா? இந்த நிலையில் தமிழக முதல்வர் எடுத்த முடிவில் என்ன தவறு?

தமிழர்களே! கட்சிகளைக் கடந்து சிந்தியுங்கள்!

மனித உணர்வுகளின் இந்த நியாயங்களை சீர்தூக்கிப் பாருங்கள்! ✦

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 27th February 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN